1937-ம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரை
ஏழாயிரம் பக்கங்களில் ஏழு பாகங்களாக
வெளிவந்த முதல் தமிழ் தஃப்ஸீர்

தப்ஸீருல் ஹமீத்
ஃபீ தஃப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

2-ம் பாகம்

இரண்டு சூராக்கள் கொண்டது

ஆசிரியர்
சன்மார்க்க மூதறிஞர், அல்லாமா, மர்ஹூம்,
எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)
உத்தமபாளையம்

வெளியீடு
பனைக்குளம்
ஹாஜி. சீ.மு.நூ.மு.மு.யூ. முஹம்மது ஷுஐப்
கோலாலம்பூர், மலேஷியா.

பொருளடக்கம்

	ஸூரா	ஆயத்து	பக்கம்
வேதனை	4	16	311
தவ்பாச் செய்ய உரிமையுள்ளவர் எவர்	4	17	314
தவ்பாச் செய்ய வேண்டிய காலம்	4	18	317
அல்லாஹ்வுக்கும் ரசூலுக்கும் கீழ்ப்படிந்தவர்கள் அடையும் பாக்கியம்	4	69	390
எங்கே இருந்தாலும் மரணம் விடாது	4	78	399
முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் ஸலாம் சொல்லிக் கொள்ளல்	4	86	408
சன்மார்க்கத்திற்காக ஹிஜ்ரத் செய்வதன் பயன்	4	100	427
ஷிர்க்கு வைப்பதை அல்லாஹ் மன்னிக்க மாட்டான்	4	116	444
கோவிலுக்கு ஆடுமாடுகளை நேர்ந்து விட்டு அவற்றில் சூடு போடல் காதுகளை அறுத்தல்	4	119	446
தம்பதிகளின் பிணக்கைத் தீர்த்து வைத்தல்	4	128	456
பல மனைவிகளை மணந்தவர்கள் நீதியாக நடப்பது அதிகச் சிரமம்	4	129	458
பிறர் மீது குற்றஞ் சொல்லித் திரிவதை அல்லாஹ் விரும்பமாட்டான்	4	148	476
நபிமார்களுக்கிடையில் பாரபட்சம் காட்டுபவர் காஃபிர்	4	150	478
தந்தையும் மக்களுமில்லாமல் மரணிப்பவர்களின் வாரிசுப் பாத்தியக்காரர்கள்	4	177	506

இடம் பெற்றுள்ள சூராக்கள்

சூரத்து ஆலஇம்ரான் பக்கம் 25 முதல் 282 வரை

சூரத்துன்னிஸா பக்கம் 283 முதல் 614 வரை

மூன்றாம் சூரத்து

சூரத்து ஆல இம்ரான்

இது மதீனாவில் இறங்கியது

இருநூறு ஆயத்துகள் கொண்டது

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(இம்மையில் யாவருக்கும்) கிருபை செய்பவனும், (மறுமையில் தன் நல்லடியார்களுக்கு மட்டும்) அருள் பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திருப்) பெயரால் (இதனை ஓத ஆரம்பம் செய்கிறேன்).

الٓمّٓ

1. அலிஃப், லாம், மீம் (இதிலுள்ள மறைபொருளை இறைவன்தான் நன்கு அறிந்தவன்).

அல்லாஹ்வின் திருநாமங்களைப் பற்றி அறிவிக்கும் அட்சரங்கள் என்றதில் (அலிஃப் லாம் மீம்) என்னும் பதத்திலுள்ள அலிஃப் (அல்லாஹ்) என்னும் பெயர்ச் சொல்லை குறிப்பிடக் கூடிய அட்சரமென்றும், லாம் (லத்தீஃப்) என்னும் பெயர்ச் சொல்லைக் குறிப்பிடக்கூடிய அட்சரமென்றும், மீம் (மஜீத்) என்னும் பெயர்ச் சொல்லைக் குறிப்பிடக்கூடிய அட்சரமென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் இம்மூன்று பதங்களும் சேர்ந்து

(அனல்லாஹுல் லத்தீஃபுல் மஜீது). அதாவது நான் தலைமை வாய்ந்த **சூட்சம (மனோவாக்குக் கெட்டாப்) பொருளான அல்லாஹ்** என்ற தாத்பரியமுள்ளதாகின்றது. இதன் விரிவான விரிவுரையை சூரத்துல் பக்கராவின் முதலாவது ஆயத்தாகிய அலிஃப் லாம் மீம் என்பதிலுள்ள விபரத்தில் காண்க.

اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ

2. அல்லாஹ் - அவனைத்தவிர (வணக்கத்துக்குரிய) இறைவன் (வேறு யாரும்) இல்லை. (அவன் எப்பொழுதும்) ஜீவித்திருப்பவன். (சிருஷ்டிப் பொருள்களுக்கு ஆகவேண்டிய காரியங்களைக் கொண்டு எப்பொழுதும்) நிலைத்திருப்பவன்.

ரிவாயத்து:- நஜ்ரான் என்னும் ஊரிலிருந்து 60 பேர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். இவ்வறுபது பேரில் பதினான்கு பேர் அவ்வூரிலுள்ள பிரபலமான வர்கள். இவர்களில் மூவர் அவர்களின் தலைவராவார்கள். இவர்களிடத்தில்தான் அந்த ஊரிலுள்ள சகல காரியங்களும் இறுதியாக முடிவு பெறுவது வழக்கம். இம்மூவரில் **அப்துல் மஸீஹ்** என்பவர் ஒருவர். இவர் அவர்களுக்கு அரசர். **அல் அய்ஹம்** என்பவர் மற்றொருவர். இவர் அவருக்கு அமைச்சராவார். **அபூஹாரிதா** என்பவர் இன்னொருவர். இவர் அவர்களின் பாதிரியார் மதகுரு. இவருடைய கல்வித் திறமையினாலும், இவரது மார்க்க ஆராய்ச்சியினாலும் இவரை உரோம அரசர்கள் நன்கு மதித்து, இவருக்கு மரியாதைகள் செய்து கொண்டிருந்தனர். இவருக்கென தனி மாதா கோவிலொன்று கட்டிக் கொடுத்திருந்தனர். இவர் தமது கழுதையின் மீது ஏறிவந்த போது அவரது கழுதையின் கால் சருகிற்று. இதனைப் பார்த்த அவரது சகோதரர் **குர்ஜு** என்பவர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எண்ணிக் கொண்டு "தூரத்திலிருப்பவருக்கு ஆபத்து உண்டாகட்டும்" என்று கூறினார். அப்பொழுது அவரது சகோதரரான அபூஹாரிதா என்பவர் "அன்று உனது தாய்க்கு ஆபத்து

உண்டாகட்டும்" என்று கூறினார். அதற்கு **குர்ஜு** என்பவர் "ஏன் அவ்வாறு கூறுகிறீர் என் சகோதரரே" என்று வினவினார். அப்பொழுது அபூஹாரிதா என்ற அந்த பாதிரியார் "அல்லாஹ்வின் மீது சத்தியமாகக் கூறுகிறேன். நிச்சயமாக அவர்தான் நம்மால் எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருந்த நபி" என்று கூறினார். அப்பொழுது குர்ஜு என்பவர் "அப்படியானால், இவ்விஷயத்தை நீர் அறிந்து கொண்டு, அவரிடம் செல்வதை விட்டு உம்மைத் தடுப்பது எது?" என்று வினவினார். அதற்கு அபூஹாரிதா என்ற அந்தப் பாதிரியார் "இந்த அரசர்கள் நமக்கு ஏராளமான செல்வங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நம்மை கண்ணியப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அந்த நபியவர்களை நாம் விசுவாசிப்போமாயின் நமக்கு அவர்கள் கொடுத்துள்ள செல்வங்களை யெல்லாம் நம்மிடமிருந்து பிடுங்கிக் கொள்வார்கள்" என்று கூறினார்.

இவ்வாறு அவர்கள் பேசிக் கொண்டே மதீனா முனவ்வராவை நோக்கி வந்தார்கள். இறுதியாக அஸருடைய வேளையில் அவர்கள் மதீனா முனவ்வராவிற்கு வந்து சேர்ந்தார்கள். பின்னர் அவர்களுடைய அஸர் தொழுகையை நிறைவேற்றுவதற்காக மஸ்ஜிது நபவிக்குள் வந்தார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்கள் தங்களது மத ஆசாரப்படி மஸ்ஜிது நபவிக்குள் தொழுவதை அனுமதித்தார்கள். அவர்கள் அனைவரும் கிழக்கு நோக்கித் தொழுதனர். தங்களது தொழுகை முடிந்தபின் அம்மூவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பேச ஆரம்பித்து ஒரு சமயம் "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் அல்லாஹ். ஏனெனில், மரணித்தவர்களை அவர் உயிர்ப்பித்தார். நோயாளிகளைக் குணப்படுத்தினார். மறைவான செய்திகளை அறிவித்தார். களி மண்ணினால் பறவையின் உருவத்தைச் செய்து அதில் அவர் ஊதியவுடன் அவைகள் பறந்து கொண்டிருந்தன. இதனால் அவர்தான் **அல்லாஹ்**" என்று கூறுவார்கள். மற்றொரு சமயத்தில் "அவருக்கு யாவரும் அறியத்தக்கத் தந்தை இல்லாததால் அவர் அல்லாஹ்வின் புதல்வர்" என்று கூறுவார்கள். இன்னொரு சமயத்தில் அல்லாஹு தஆலா தனது

வேதத்தில் தன்னைப் பற்றிக் கூறும் போது, “நாம் சொன்னோம், நாம் செய்தோம்” என்று கூறி இருக்கிறான். ஆகவே, அவன் ஒருவனாக இருந்திருப்பானாயின் “நான் செய்தேன், நான் கூறினேன்” என்றல்லவா கூறி இருப்பான். ஆகவே, அவர் மூன்று தெய்வங்களில் ஒருவர் என்று திரியேகத்துவத்தைக் கூறுவர். இவ்வாறு கிறிஸ்து மதக் கொள்கைகளைப் பற்றி நிலையில்லாமல் கூறினர்.

பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தூதுவர்களை நோக்கி “நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுங்கள்” என்று கூறிய போது, “நாங்கள் உமக்கு முன்பே இஸ்லாம் மார்க்கத்தில்தான் இருக்கிறோம்” என்று பதிலளித்தனர். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தூதுவர்களை நோக்கி “நீங்கள் பொய்யுரைக்கிறீர்கள். அல்லாஹுதஆலாவுக்குப் பிள்ளையுண்டென்று நீங்கள் தாவாச் செய்வது, நீங்கள் இஸ்லாமில்லை என்பதை அறிவிக்கிறது” என்று கூறினார்கள். அப்பொழுது அத்தூதுவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி “அல்லாஹுதஆலாவிற்குப் பிள்ளை இல்லையென்றால், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தந்தை யார்?” என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “பிள்ளை தனது தந்தைக்கு ஏதேனும் ஒரு விதத்திலாவது ஒப்பாக இருப்பான் என்பது உங்களுக்குத் தெரியாதா?” என்று வினவினார்கள். அதற்கு அந்தத் தூதுவர்கள் “ஆம், மெய்தான்” என்று பதிலளித்தனர். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த தூதுவர்களை நோக்கி “நமது றப்பானவன் ஜீவித்திருக்கிறவன். அவன் மரணிக்க மாட்டான். ஆனால், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அழிவு வரும் என்பதை நீங்கள் அறியவில்லையா?” என்று கூறினார்கள். அதற்கு, அந்தத் தூதுவர்கள் “ஆம், மெய்தான்” என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தூதுவர்களை நோக்கி “நமது றப்பானவன் ஒவ்வொரு பொருளையும் நிலை நிறுத்தி வைப்பவன். அதனைப் பாதுகாக்கிறான். இன்னும் அதற்கு உணவளிக்கிறான் என்பதை

நீங்கள் அறியவில்லையா?” என்று வினவினார்கள். அதற்கு அந்த தூதுவர்கள் “ஆம் மெய்தான்” என்றனர். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தூதுவர்களை நோக்கி “இவற்றில் ஏதேனும் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இருக்கிறதா?” என்று வினவினார்கள். அதற்கவர்கள் “இல்லை” என்றனர். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தூதுவர்களை நோக்கி “அல்லாஹுத் தஆலாவுக்கு வானத்தில் உள்ளதிலும் பூமியில் உள்ளதிலும் ஒன்றும் மறைந்தில்லை என்பதை நீங்கள் அறியவில்லையா?” என்று கூறினார்கள். அதற்கு அத்தூதுவர்கள் “ஆம் மெய்தான்” என்றனர். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தூதுவர்களை நோக்கி “இவற்றில் எதையும் அல்லாஹு தஆலா அறிவிக்காமல் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அறிவார்களா?” என்று வினவினார்கள். அதற்கு அத்தூதுவர்கள் “இல்லை” என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்தூதுவர்களை நோக்கி “நமது றப்பானவன் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை கர்பக் கோளறையில் தனது இஷ்டப்படி உருப்படுத்தினான். இன்னும் நமது றப்பானவன் உண்ணவும் மாட்டான், பருகவுமாட்டான், பேசவுமாட்டான் என்பதை நீங்கள் அறியவில்லையா?” என்று வினவினார்கள். அதற்கு அத்தூதுவர்கள் “ஆம் மெய்தான்” என்று கூறினார்கள். பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தூதுவர்களை நோக்கி “ஏனைய பெண்கள் கர்பத்தில் சுமப்பது போல் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அவரது தாயும் சுமந்தார். ஏனைய பெண்கள் பிரசவிப்பது போல் அவரைப் பிரசவித்தார், பின்னர் குழந்தைகள் உணவருந்துவதுபோல அவரும் உணவருந்தினார், பின்னர் அவர் சாப்பிட்டுக் கொண்டும், தண்ணீர் பருகிக் கொண்டுமிருந்தார், பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருந்தார் என்பதை நீங்கள் அறியவில்லையா?” என்று வினவினார்கள். அதற்கு அத்தூதுவர்கள் “ஆம், மெய்தான்” என்று பதிலளித்தனர். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அப்படியானால், நீங்கள் எண்ணிக் கொண்டிருப்பது போல் இவர் எப்படி இருக்க

முடியும்?" என்று கூறினார்கள். அதற்கு அத்தூதுவர்கள், இவ்விவாதத்தை அங்கீகரிக்காமல் மௌனமாக இருந்தார்கள். அப்பொழுது அல்லாஹுதஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது இவ்விவாதத்தை உறுதி செய்து இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திலிருந்து என்பதுக்கு மேற்பட்ட ஆயத்துகளை அருளினான்.

ஹதீஸ்:- இஸ்முல் அஃலம் மூன்று ஸூரத்துகளில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றாவது ஸூரத்துல் பகராவில், (அல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவல்ஹையுல் கையூம்) என்றும், இரண்டாவது ஸூரத்து ஆலஇம்ரானில், (அல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவல்ஹையுல் கையூம்) என்றும், மூன்றாவது ஸூரத்து தாஹாவில் (வஅனத்தில் வுஜூஹு லில் ஹையுல் கையூம்) என்றும் கூறப்பட்டிருக்கிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இஸ்முல் அஃலமைப் பற்றிய விபரம் ஸூரத்துல் பகராவில் ஆயத்துல் குர்ஸியினுடைய விரிவுரையில் விபரமாக கூறப்பட்டிருப்பது காண்க.

نَزَّلَ عَلَيْكَ الْكِتٰبَ بِالْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ
يَدَيْهِ وَاَنْزَلَ التَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ مِنْ قَبْلُ هُدًى
لِّلنَّاسِ وَاَنْزَلَ الْفُرْقَانَ ۗ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا
بِاٰيٰتِ اللّٰهِ لَهُمْ عَذَابٌ شَدِيْدٌ ۗ وَاللّٰهُ عَزِيْزٌ
ذُو انْتِقَامٍ ۝

3. (நபியே) தனக்கு முன்னுள்ள (வேதத்)தை உண்மைப் படுத்துகிற நிலையில், சத்தியத்தைக் கொண்டு உம்மீது (அவன்) இவ்வேதத்தை இறக்கி வைத்தான். இன்னும், மனிதர்களுக்கு நேர்வழி

காட்டுவதற்காகத் தவ்ராத்தையும், இஞ்சீலையும் முன்னதாகவே இறக்கி வைத்தான்; மேலும், (நன்மை தீமையைப்) பிரித்து அறிவிப்பதையும் இறக்கி வைத்தான்; நிச்சயமாக எவர்கள், அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்தனரோ அவர்களுக்குக் கடுமையான வேதனையுண்டு. மேலும், அல்லாஹ் மிகைத்தவன் (இன்னும் பாவத்துக்குப்) பரிகாரம் வாங்குபவன்.

(அல்கித்தாப்) அதாவது **இ(வ்வேத)ப் புத்தகத்தை** என்றது இங்கு திருக்குர்ஆனைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. திருக்குர்ஆனுடைய பெயரைக் கூறாமல் எல்லா வேதங்களுக்கும் பொதுவானதாகிய **அல்கித்தாப்** என்ற பெயரைக் கூறியது திருக்குர்ஆனின் மகத்துவத்தைக் குறிப்பிடுவதற்காகவேயாகும். திருக்குர்ஆனுக்கு மட்டும் (நஸ்ஸலல் கித்தாப்) அதாவது இ(வ்வேத)ப் புத்தகத்தை இறக்கி வைத்தான் என்றும், தவ்ராத், இஞ்ஜீல் வேதங்களைக் குறித்து وَاَنْزَلَ التَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ (வஅன்ஜலத் தவ்ராத்த வல்இஞ்ஜீல) அதாவது தவ்ராத்தையும் இஞ்ஜீலையும் இறக்கி வைத்தான் என்றும் கூறியதற்குக் காரணம் திருக்குர்ஆன் கொஞ்சங் கொஞ்சமாக பல முறை இறக்கப்பட்டது, தவ்ராத், இன்ஜீல் வேதங்கள் ஒரே முறையில் இறக்கப்பட்டது.

مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ **(முஸத்திகன் லிமாபைன யதைஹி)** "தனக்கு முன்னுள்ள (வேதத்)தை உண்மைப்படுத்துகிற நிலையில்" என்பதற்கு திருக்குர் ஆனுக்கு முன்னுள்ள வேதங்களில் சொல்லப் பட்டுள்ள தவ்ஹீது, நுபுவ்வத்து, இதர விபரங்கள், மார்க்கச் சட்டங்களிற் சில ஆகியவற்றைத் திருக்குர்ஆன் உறுதி செய்கிறது என்பது கருத்து.

(அல்ஃபுர்க்கான்) அதாவது "(சத்தியத்தையும் அசத்தியத் தையும் பிரிப்பது)" என்பது இறைவனால் அருளப்பட்ட எல்லா வேதங்களும் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் கூறுவதால் இந்த இடத்தில் இப்பதம் எல்லா வேதங்களையும் குறித்துச் சொல்லப் பட்டது. ஆனால், எல்லா வேதங்களும் சத்தியத்தையும் அசத்தியத் தையும் பிரித்துக் கூறுவனவாக இருந்தாலும் இவற்றில் திருக்குர்ஆன்

நிரந்தரமான வேதம். ஆகையால் இங்கு திருக்குர்ஆனை மட்டும் குறிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது என்றும் சிலர் கூறியுள்ளார்கள்.

(ஆயாத்துல்லாஹி) அதாவது அல்லாஹ்வின் ஆயத்துகள் என்பதற்கு திருக்குர்ஆன், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அற்புதச் செய்கைகள் என்பது கருத்து.

إِنَّ اللَّهَ لَا يَخْفَىٰ عَلَيْهِ شَيْءٌ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ

4. நிச்சயமாக அல்லாஹ் (சர்வவல்லோன்) பூமியிலும் வானத்திலும் (உள்ள) எப்பொருளும் அவனுக்கு மறைந்திருக்க வில்லை.

அல்லாஹு தஆலாவுக்கு மாறு செய்கிறவர்களையும் அவனை விசுவாசிக்கிறவர்களையும் இவ்விருசாராருடைய கிரியைகளையும் அல்லாஹு தஆலா அறிகிறான் என்பதும், கியாமத்து நாளில் அவர்களுக்குத் தக்க கூலியை கொடுப்பான் என்பதும் இந்த ஆயத்தின் கருத்தாகும்.

هُوَ الَّذِي يُصَوِّرُكُمْ فِي الْأَرْحَامِ كَيْفَ يَشَاءُ ۚ
لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْعَزِيزُ الْحَكِيمُ

5. அவன்தான் உங்களைக் கர்ப்பக் கோளறைகளில் அவன் நாடும் விதமாக உருப்படுத்துகிறான். அவனைத் தவிர (வணக்கத்துக்கு உரிய) இறைவன் (வேறு யாரும்) இல்லை. (அவனே யாவற்றிலும்) மிகைத்தவன். விவேகமுள்ளவன்.

தாயின் கற்பத்தில் சிசுக்களை அல்லாஹு தஆலா ஆணாகவோ, பெண்ணாகவோ, கருப்பாகவோ, வெள்ளையாகவோ, நெட்டையாகவோ, குட்டையாகவோ, அங்கஹீனமில்லாமலோ, அங்கஹீனத்துடனோ சிருஷ்டிக்கிறான். அவன் சிருஷ்டிப்பதில் வேறு

யாருக்கும் எந்தவித அதிகாரமும் இல்லை என்பது இந்த ஆயத்தின் கருத்து. இது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை, அல்லாஹ் என்றும் அல்லாஹ்வின் புதல்வர் என்றும் கிறிஸ்துவர்கள் கூறுவதற்கு மறுப்பாகக் கூறப்பட்டது. தாயின் கற்பக் கோளறையில் சிசுவாக இருந்து உற்பத்தியான ஒருவர் அல்லாஹ்வாகவோ அல்லாஹ்வின் புதல்வராகவோ இருக்க தகுதி இல்லை என்பதை விளக்குகிறது இந்த ஆயத்து.

قَالَ عَلَيْهِ السَّلَامُ اِنَّ خَلْقَ اَحَدِكُمْ يَجْمَعُ فِيْ بَطْنِ اُمِّهٖ
اَرْبَعِيْنَ يَوْمًا ثُمَّ يَكُوْنُ عَلَقَةً مِثْلَ ذٰلِكَ ثُمَّ يَكُوْنُ مُضْغَةً مِثْلَ
ذٰلِكَ ثُمَّ يَبْعَثُ اللّٰهُ اِلَيْهِ الْمَلَكَ بِاَرْبَعِ كَلِمَاتٍ فَيَكْتُبُ رِزْقَهٗ
وَعَمَلَهٗ وَاَجَلَهٗ وَشَقِيٌّ اَوْ سَعِيْدٌ

ஹதீஸ்:- "உங்களில் ஒருவரை அவன் சிருஷ்டிப்பானாயின் அவருடைய தாயின் வயிற்றில் நாற்பது நாள் சேர்ந்திருக்கிறார். பின்னர் அதுபோல ரத்தக் கட்டியாகிறார். பின்னர் அதுபோல சதைக் கட்டியாகின்றார். பின்னர் அவர்பால் அல்லாஹ் நான்கு வாக்கியங்களைக் கொண்டு ஒரு மலக்கை அனுப்புகிறான். அம்மலக்கு அவருடைய உணவையும், அவரது கிரியையையும், அவரது வாழ்நாளையும், சீதேவி அல்லது மூதேவி என்பதையும் எழுதுகிறார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

هُوَ الَّذِي أَنزَلَ عَلَيْكَ الْكِتَابَ مِنْهُ آيَاتٌ مُّحْكَمَاتٌ
هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ ۖ فَأَمَّا الَّذِينَ
فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ

الْفِتْنَةِ وَابْتِغَاءَ تَأْوِيلِهِ ۗ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلَّا
اللَّهُ ۘ وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ يَقُولُونَ آمَنَّا بِهِ
كُلٌّ مِنْ عِنْدِ رَبِّنَا ۗ وَمَا يَذَّكَّرُ إِلَّا أُولُو الْأَلْبَابِ ۝

6. (இன்னும்) அவனே உம் மீது வேதத்தை அருளினான். அதில் (பொருள்) விளக்கமாகவுள்ள வசனங்கள் இருக்கின்றன. இவைகள் வேதத்தின் அஸ்திவாரமாகும். இன்னும், மற்றவைகள் (ஒன்றுக் கொன்று) விளங்காதவைகளாக இருக்கின்றன. எனவே, எவர்களின் இருதயங்களில் (சத்தியத்தை விட்டுப்) புரளுதல் இருக்கின்றதோ அவர்கள் (எந்தவிதத்திலும்), குழப்பத்தை உண்டாக்குவதற்காகவும் அதற்குக் கூடா அர்த்தம் உண்டாக்குவதற் காகவும் இவ்வேதத்திலுள்ள விளங்காத (வசனத்)தைப் பின்பற்றுவர். ஆனால், இதன் (உண்மையான) பொருளை அல்லாஹ்வைத் தவிர (வேறு யாரும்) அறியமாட்டார். மேலும், கல்வியில் உறுதியாக உள்ளவர்கள் அந்த வசனத்தை "நாங்கள் விசுவாசித்தோம். எல்லாம் எங்களுடைய இறைவனிடத்திலிருந்து உள்ளவையும்" என்று கூறுவார்கள். மேலும், அறிவுடையவர்களைத் தவிர (மற்றையோர் இதனால்) உபதேசம் பெறமாட்டார்கள்.

اٰيٰتٌ مُّحْكَمٰتٌ (ஆயாத்துன் முஹ்கமாத்துன்) அதாவது விளக்கமாகவுள்ள வசனங்கள் என்பதற்கு கருத்துக்கள் நன்கு விளங்கப்படுவனவாகவும், இரண்டு அர்த்தம் கொள்ள இடமில்லாதன வாகவும் இருக்கிற வசனங்கள் என்பது கருத்து.

مُتَشٰبِهٰتٌ (முத்த ஷாபி ஹாத்துன்) அதாவது ஒன்றுக் கொன்று ஒப்பானவைகள் என்பதற்கு கருத்து நன்கு புலப்படாதவைகள் பல கருத்துகளுக்கும் இடம் பாடுள்ளவைகள் என்பது கருத்து.

அறிந்துகொள்:- திருக்குர்ஆனிலுள்ள சகல ஆயத்துகளும் முஹ்கமாகத்தான் இருக்கின்றன. அதாவது அவைகள் எல்லாம் இறைவனால் அருளப்பட்டவைகள் என்பதிலும், அவற்றின் கருத்துகள்

உண்மையானவைகள் என்பதிலும், அவைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவைகளன்று என்பதிலும் சந்தேகமில்லை. இம்முறையில் திருக்குர்ஆனின் ஆயத்துகள் அனைத்தும் முஹ்கமானவைகளே. ஆனால், ஒரு ஆயத்தின் கருத்து இன்னொரு ஆயத்தின் கருத்தைத் தழுவியிருப்பதிலும், வாக்கிய அமைப்பிலும் அவைகள் ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன. இம்முறையில் திருக்குர்ஆனிலுள்ள ஆயத்துகள் எல்லாம் முத்தஷாபிஹுகளாகவே இருக்கின்றன. ஆனால் இந்த ஆயத்தில் சொல்லப்பட்டுள்ள **முஹ்கம்** என்பதற்கும் **முத்தஷாபிஹ்** என்பதற்கும் கருத்து வேறு. அதாவது ஒரு சொல்லுக்கு ஒரு அர்த்தமும் ஒரே கருத்தும் உள்ள பதங்களும் இருக்கின்றன. ஒரு சொல்லுக்குப் பல அர்த்தங்களும் பல கருத்துகளுமுள்ள பதங்களும் இருக்கின்றன. இவ்விரு விதமான பதங்களையும் கொண்ட ஆயத்துகள் திருக்குர்ஆனில் இருக்கின்றன. உதாரணமாக, (வஇலாஹுக்கும் இலாஹுன் வாஹிதுன்) என்ற ஆயத்தை எடுத்துக் கொள்வோம். இந்த ஆயத்திலுள்ள பதங்களுக்கு அர்த்தமும் கருத்தும் ஒன்றாகவே இருக்கின்றன. "மேலும், உங்களது இறைவன் ஒரே ஒரு இறைவன்தான்" என்பது இதன்பொருள். இப்பொருளுக்குரிய கருத்தில் எவருக்கும் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. இந்த ஆயத்திற்கு வேறு விதமான பொருள் கொள்ள இடமுமில்லை. இதுபோன்ற ஆயத்துகளைக் குறித்துத்தான் இங்கு **ஆயாத்துன் முஹ்க்கமாத்துன்** என்று கூறப்பட்டிருக்கிறது. வேறு சில ஆயத்துகள் இம்முறையில் இல்லை. உதாரணமாக **தலதத்த குரூஉன்** என்றும் திருக்குர்ஆனில் வேறு ஒரு இடத்தில் கூறப்பட்டி ருக்கிறது. இதில் **குரூஉ** என்ற சொல்லுக்கு சுத்தம் என்றும் அசுத்தம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. இந்த வார்த்தையின் அர்த்தம் நன்கு தெரிந்தாலும் ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்கள் உள்ள பதமாக இருப்பதால் இந்த ஆயத்திற்கு என்ன கருத்து என்று உணர்வதில் சிலருக்குச் சங்கடம்தான் ஏற்படும். இதுபோல **(யதுல்லாஹி ஃபவ்க்க அய்தீஹிம்)** என்று ஒரு ஆயத்து கூறப்பட்டிருக்கிறது. "அல்லாஹ்வின் கை அவர்களுடைய கைகளுக்கு மேலிருக்கிறது" என்பது இந்த ஆயத்தின் அர்த்தம். இந்த ஆயத்தின் அர்த்தத்தில் எந்தவிதச்

சந்தேகமுமில்லை. ஆனால் இதன் கருத்து என்ன என்பதில் சந்தேகமேற்படுகிறது. ஏனெனில், நமது மனிதருக்கு இருக்கிற கை, கால், மூக்கு, செவி ஆகியவைகள் இல்லை. அவன் அரூபியானவன். ஆகவே "அல்லாஹ்வின் கை" என்று இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிற பதங்களுக்கு நம்மைப் போல் அல்லாஹ்விற்கு கை இருக்கிறதென்று கருத இடமில்லை. எனவே, "கை" என்பதற்கு இங்கு அர்த்தம் தெளிவாக இருந்தாலும் கருத்து வேறு. இந்த இடத்தில் "கை" என்பதற்கு "ஆற்றல்" என்று கருத்துக் கொள்ள வேண்டும். இவ்விதமான ஆயத்துகளுக்கு **முத்த ஷாபிஹாத்துன்** என்று பெயர். இவற்றிற்கு **ஆயாத்துன் முஹ்கமாத்து**களிலுள்ள கருத்துகளை அனுசரித்தே அர்த்தமும் கருத்தும் கொள்ள வேண்டும். கல்வியிற் றேர்ந்த அறிஞர்களில் ஈமானுள்ளவர்கள் இவ்வாறே அர்த்தம் சொல்வர். ஆனால், ஈமான் என்னும் விசுவாசமற்றவர்கள் பொது மக்களைக் குழப்பத்திலாழ்த்தி வழி தவறச் செய்வதற்காகப் பலவிதமான அர்த்தங்களைச் செய்து குழப்பம் செய்வர் என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا
مِنْ لَدُنْكَ رَحْمَةً ۚ إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ ۝

7. எங்கள் றப்பே! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியபின் எங்கள் இருதயங்களை (உண்மையைவிட்டும்) தவறுமாறு செய்துவிட வேண்டாம். இன்னும், உன்னிடமிருந்து (எங்களுக்கு அருளப்பட்ட நேர்வழியில் நிலைத்திருக்கும்படியான) கிருபையை எங்களுக்கு நன்கொடையளிப்பாயாக. நிச்சயமாக நீயே மிக்க நன்கொடையளிப்பவன்.

இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்டுள்ள **"கல்வியில் உறுதியுள்ளவர்களைப்"** பற்றியே இந்த ஆயத்திலும் கூறப்பட்டிருக்கிறது. அதாவது கல்வியில் உறுதியுள்ளவர்கள் முத்தஷாபிஹான ஆயத்துகளில் குயுக்தியான அர்த்தம் செய்து மனிதர்களை

வழிகெடுக்க முயலாமல் தங்களைப் பற்றி இந்த ஆயத்தில் கண்டவாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்வார்கள். நேர்வழிகாட்டிய பின்பு தங்களுடைய இருதயங்களை தவறுமாறு செய்துவிட வேண்டாம் என்று கேட்டு அல்லாஹு தஆலாவின் 'வஹ்ஹாப்' அதாவது நன்கொடையளிப்பவன் என்ற சிறப்புப் பெயரைக் கூறிப் பிரார்த்திப்பதிலிருந்து மனிதர்கள் நேற்வழி பெறுவதும், வழி தவறுவதும் அவனது புறத்திலிருந்து வருகின்றன என்பதையும், மனிதர்கள் நேர்வழி பெறுவது அவர்களது சொந்த முயற்சியாக இல்லாமல் அவனது அருட்கொடையென்பதையும் அறிவிக்கிறது.

رَبَّنَا إِنَّكَ جَامِعُ النَّاسِ لِيَوْمٍ لَا رَيْبَ فِيهِ ۚ
إِنَّ اللَّهَ لَا يُخْلِفُ الْمِيعَادَ ۝

8. எங்கள் றப்பே! நிச்சயமாக நீ மனிதர்களை (க் கேள்வி கணக்கு வாங்குவதற்காக) ஒரு தினத்தில் ஒன்று சேர்ப்பவன்; அ(த்தினம் வருவ)தில் எந்தவிதச் சந்தேகமுங் கிடையாது. நிச்சயமாக அல்லாஹ் வாக்குறுதிக்கு மாறு செய்யமாட்டான் (என்று அறிவுடையோர் பிரார்த்தனை புரிந்து கொண்டிருப்பர்).

"சந்தேகமே இல்லாத நாள்" என்பது நியாயத் தீர்ப்பு நாளாகும். அந்த நாள் வருவது உறுதியாக இருப்பதால் "அதில் சந்தேகமே இல்லை" என்று இங்கு கூறப்பட்டது.

இதுவும் ஆறாவது ஆயத்தில் சொல்லப்பட்டுள்ள "கல்வியில் உறுதியுள்ளவர்கள்" இறைவனிடம் கேட்கும் துஆவாகும்.

إِنَّ الَّذِينَ كَفَرُوا لَنْ تُغْنِيَ عَنْهُمْ أَمْوَالُهُمْ وَلَا
أَوْلَادُهُمْ مِنَ اللَّهِ شَيْئًا ۖ وَأُولَٰئِكَ هُمْ وَقُودُ النَّارِ ۝

9. நிச்சயமாக எவர்கள் நிராகரிப்பவராகி விட்டனரோ

(அவர்களுடைய) பொருள்களும் அவர்களுடைய பிள்ளைகளும் அல்லாஹ்வின் (வேதனைக்கு) முன்பாக எதையும், அவர்களை விட்டுக் காப்பாற்ற மாட்டா. மேலும், அவர்கள்தாம் (நரக) நெருப்பின் விறகாவார்கள்.

இவ்வுலகில் பொருளும் மக்களும்தான் செல்வம் என்று சிலரால் கருதப்படுகிறது. இதுபோல அறபி நாட்டிலுள்ள காஃபிர்கள் தங்களிடமுள்ள பொருள்களும் மக்களும் தங்களுக்கு உதவியாக இருப்பார்கள் என்றும், அல்லாஹு தஆலாவுடைய வேதனையை இவர்கள் மூலமாக விலக்கிக் கொள்ளலாம் என்றும் கருதி இருந்தனர். இவர்களது இக்கருத்து இந்த ஆயத்தில் மறுக்கப்பட்டிருக்கிறது.

كَدَأْبِ اٰلِ فِرْعَوْنَ ۙ وَالَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ۚ فَاَخَذَهُمُ اللّٰهُ بِذُنُوْبِهِمْ ؕ وَاللّٰهُ شَدِيْدُ الْعِقَابِ ۝

10. ஃபிர்அவ்னின் ஆட்களுடையவும், அவர்களுக்கு முன்னிருந்தவர்களுடையவும் வழக்கத்தைப் போலிருக்கிறது. நம்முடைய வசனங்களை அவர்கள் பொய்ப்பித்தனர். ஆகவே, அவர்களை அவர்களின் பாவத்தைக் கொண்டு அல்லாஹ் பிடித்தான். மேலும், அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கொடியவன்.

காஃபிர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அற்புதங்களையும் அல்லாஹு தஆலாவுடைய ஆயத்துகளான குர்ஆனையும் நிராகரித்துப் பொய்ப்பித்ததை ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாருடையவும் அவர்களுக்கு முன்னுள்ள நூஹு அலைஹிஸ்ஸலாம், லூத்து அலைஹிஸ்ஸலாம் முதலிய நபிமார்களுடைய உம்மத்துகளுடையவும், ஆது, தமூதுக் கூட்டத் தாருடையவும் வழக்கத்திற்கு ஒப்பாக இருக்கிறது என்று கூறி, அவர்களது வழக்கம் அல்லாஹு தஆலாவுடைய ஆயத்துக்களைப் பொய்ப்பிப்பதுதான் என்பதும் கூறப்பட்டிருக்கிறது. அவர்களது இத்தகைய குற்றங்களுக்காக அவர்களை அல்லாஹு தஆலா பிடித்த விபரமும்

கூறப்பட்டிருப்பதானது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் திருக்குர்ஆனையும் காஃபிர்கள் நிராகரித்ததற்காக அவர்களையும் அல்லாஹு தஆலா வேதனை செய்வான் என்பதை அறிவிக்கிறது.

قُلْ لِّلَّذِيْنَ كَفَرُوْا سَتُغْلَبُوْنَ وَتُحْشَرُوْنَ اِلٰى جَهَنَّمَ ؕ وَبِئْسَ الْمِهَادُ

11. "நீங்கள் விரைவில் வெல்லப்படுவீர்கள் (அப்பால் மரணமடைந்து) நரகத்தின்பால் இழுத்துச் செல்லப்படுவீர்கள்" என்று நிராகரிப்பவராகி விட்டவர்களுக்கு (நபியே) கூறுவீராக. மேலும், (அந்நரகம்) மிகக் கெட்டதாகும்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பத்ருப் போரில் முஷ்ரிக்குகளை வென்றதை மதீனா முனவ்வராவிலுள்ள யூதர்கள் பார்த்து "மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நமக்கு முன்னறிவிப்புச் செய்தவரான நபி இவர்தான். இவரது அடையாளங்கள் தவ்ராத் வேதத்தில் கூறப்பட்டிருக் கின்றன என்று கூறி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஈமான் கொள்ள விரும்பினர். ஆனால், அவர்களிற் சிலர் மற்றவர்களிடம் அவசரப்படாதீர்கள், அவருக்கு ஏற்படுகிற இன்னொரு போரையும் நாம் பார்த்துக் கொள்வோம்" என்று கூறினார். பின்னர் உஹுதுப் போர் நிகழ்ந்தது. அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சந்தேகமடைந்ததுடன் அவர் களுக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் ஏற்பட்டிருந்த உடன்படிக்கையையும் முறித்துக் கொண்டனர். தவிரவும் கஃபுப்னுல் அஷ்ரப் என்பவன் ஆறு பேருடன் மக்காவிற்குச் சென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்த்து யுத்தம் செய்வதற்காக அவர்களது ஆலோசனையுடன் சேர்ந்து கொண்டான். அப்போது இந்த ஆயத்து இறங்கிற்று என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், **தஃப்ஸீர் ஃபத்ஹுல் கரீமில்** நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பத்ருப் போரிலிருந்து திரும்ப வரும்போது **கைன்காஉ** என்னும் இடத்தில் யூதர்களை வருவித்து 'நீங்கள் என்னை உங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட நபி யென்று தீர்க்கமாய் அறிந்திருக்கிறீர்கள். ஆகையால் பத்ருப் போரில் குறைஷிகளுக்குக் கிடைத்த கதி உங்களுக்கும் கிடைப்பதற்கு முன் இஸ்லாமில் வந்து விடுங்கள்' என்று சொன்னதற்கு அவர்கள் 'முஹம்மதே! வித்தையைக் கற்றுக் கொள்ளாத மூடரை வென்று விட்டீரென்று மிரள வேண்டாம். நாங்கள் யுத்தத்தில் எதிர்த்தால் நாங்கள் தான் ஆண் பிள்ளைகளாயிருந்து உம்மை வெல்வதைக் கண்டு கொள்வீர்' என்று சொன்னார்கள். அதற்காக இந்த ஆயத்து இறக்கப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த ஆயத்தில் சொல்லப்பட்டபடி யூதர்களிலுள்ள பனூ குறைளா என்ற கூட்டத்தினர் கொல்லப்பட்டார்கள். பனூ நுளைர் என்ற கூட்டத்தினர் நாடு கடத்தப்பட்டார்கள். சிலர் கைபர் போரில் தோற்றனர். பின்னர், ஜிஸ்யா வரியும் விதிக்கப்பட்டனர்.

قَدْ كَانَ لَكُمْ اٰيَةٌ فِىْ فِئَتَيْنِ الْتَقَتَا ؕ فِئَةٌ تُقَاتِلُ
فِىْ سَبِيْلِ اللّٰهِ وَاُخْرٰى كَافِرَةٌ يَّرَوْنَهُمْ مِّثْلَيْهِمْ
رَاْىَ الْعَيْنِ ؕ وَاللّٰهُ يُؤَيِّدُ بِنَصْرِهٖ مَنْ يَّشَآءُ ؕ
اِنَّ فِىْ ذٰلِكَ لَعِبْرَةً لِّاُولِى الْاَبْصَارِ ۝

12. (பத்ரில்) போர் செய்த இரண்டு கூட்டத்திலும் நிச்சயமாக உங்களுக்கு அத்தாட்சி இருக்கிறது. அல்லாஹ்வின் பாதையில் ஒரு கூட்டம் (மார்க்க) யுத்தம் செய்கிறது. மற்றொன்று நிராகரிப்பதாக இருக்கிறது. (நிராகரிப்போரான) அவர்கள் (மார்க்க யுத்தஞ் செய்வோரை) தங்களைப் போன்று இரட்டிப்பாக இருப்பதைக் கண்ணாரக் காண்கின்றனர். மேலும் அல்லாஹ் தான் நாடியவர்களைத் தன்னுடைய உதவியைக் கொண்டு பலப்படுத்துகிறான். நிச்சயமாக (அகப்) பார்வையுள்ளவர்களுக்கு அதில் (தகுந்த) படிப்பினை இருக்கிறது.

இந்த ஆயத்தில் பத்ருப் போரைப் பற்றிய விபரம் கூறப்படுகிறது. இஸ்லாம் மார்க்கத்தை அழித்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் படையெடுத்து வந்த எதிரிகளைத் தடுத்து நிறுத்தி முஸ்லிம்களைக் காப்பாற்றுவதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் யுத்தத்திற்குச் சென்றதால் அவர்களைக் குறித்து "ஒரு கூட்டம் அல்லாஹ்வின் வழிபாட்டில் யுத்தம் செய்கிறது" என்று கூறப்பட்டது. இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தவர்களை கொன்று வீழ்த்தி நாசம் செய்து இஸ்லாம் மார்க்கத்தை அழித்து விட வேண்டும் என்ற எண்ணத்தால் மக்கத்து முஷ்ரிக்குகளும், அவர்களது துணைவர்களும் வந்ததால் அவர்களைக் குறித்து "மற்றொன்று காபிரானது" என்று கூறப்பட்டது.

பத்ருப் போருக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் அன்ஸாரிகளில் 236 பேரும், முஹாஜிர்களில் 77பேரும் சென்றனர். முஹாஜிர்களில் ஹளரத் அலிய்யுப்னு அபீதாலிப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களும் அன்ஸாரிகளில் ஹளரத் ஸஅதுப்னு உபாதத்தில் கஜ்றஜீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கொடியைத் தாங்கிச் சென்றனர். இரண்டு குதிரைகளும், தொண்ணூறு ஒட்டகைகளும், ஆறு உருக்குச் சட்டைகளும், எட்டு வாளாயுதங்களும் இருந்தன. மக்கத்து முஷ்ரிக்குகளைக் கொண்ட எதிரிகளின் படையில் 950 பேர் இருந்தனர். இவர்களுக்கு நூறு குதிரைகளும், எழுநூறு ஒட்டகைகளும், யுத்தக் கருவிகள் கணக்கில்லாமலுமிருந்தன. இந்தப் போரில் முஹாஜிர்களில் அறுவரும் அன்ஸார்களில் எட்டுப் பேரும் ஷஹீதானார்கள்.

"முஷ்ரிக்குகள் கைதியாகப் பிடித்துச் சென்ற ஒரு முஸ்லிமிடம் 'நீங்கள் எத்தனை பேர் யுத்தத்திற்கு வந்தீர்கள்' என்று அவர்கள்

வினவியதற்கு 'நாங்கள் முன்னூற்றுப் பத்தும் சில்லரையும் இருந்தோம்' என்று கூறினாராம். அதற்கு அவர்கள் 'நீங்கள் இரண்டு மடங்கு இருப்பீர்கள் என்றல்லவோ நாங்கள் கருதி இருந்தோம்' என்று கூறினார்கள்'' என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஏராளமான ஆயுதங்களுடனும், யுத்த தளவாடங்களுடனும் வந்த பெரும் கூட்டத்தினரை, மிகவும் குறைவான யுத்த தளவாடங் களுள்ள சிறிய கூட்டத்தினராகிய முஸ்லிம்கள் பத்ருப் போரில் தோற்கடித்து விட்டதில் அதிகமான பொருளும் அதிகமானவர்களும் அல்லாஹு தஆலாவின் வேதனையை விட்டுக் காப்பாற்ற மாட்டாது என்பதற்கு அத்தாட்சியாகும் என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوٰتِ مِنَ النِّسَاۗءِ وَالْبَنِيْنَ
وَالْقَنَاطِيْرِ الْمُقَنْطَرَةِ مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالْخَيْلِ
الْمُسَوَّمَةِ وَالْاَنْعَامِ وَالْحَرْثِ ۭ ذٰلِكَ مَتَاعُ الْحَيٰوةِ
الدُّنْيَا ۚ وَاللّٰهُ عِنْدَهٗ حُسْنُ الْمَاٰبِ ۝

13. பெண்கள், ஆண்மக்கள், தங்கம் வெள்ளியினால் திரட்டப் பெற்ற பொருள்கள், நேர்த்தியான குதிரைகள், (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகள், வேளாண்மை ஆகியவை பால் விருப்பங் கொள்வதை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது. இது அற்ப (உலக) வாழ்வின் சுகப்பொருளாகும். மேலும், அல்லாஹ் - அவனிடத்தில் நல்ல அழகிய மீளும் இடமிருக்கிறது.

பெண்கள், ஆண்மக்கள், செல்வம், குதிரை, ஆடு, மாடு, ஒட்டகைகள், வெள்ளாண்மை ஆகிய பொருள் மனிதரால் நேசிக்கத் தக்கவை என்பதும், இவ்வுலக வாழ்வில் இவைகள் மனிதருக்கு அழகாகக் காண்பிக்கப்படுகின்றன என்பதும், இவற்றைப் பார்க்கினும் மிக அழகானவை மறுமையில் அல்லாஹுதஆலாவிடத்தில்

இருப்பதால் இவ்வுலக வாழ்வில் கிடைக்கக் கூடிய அற்ப சுகத்திற்காக மறுமையின் சுகத்தை மறந்துவிடலாகாது என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

அஷ்ஷஹ்வாத்து என்பது **அஷ்ஷஹ்வத்** என்பதன் பன்மைச் சொல். இச்சைகள் என்பது இதன் பதப்பொருள். ஆயினும், விரும்பத் தக்க பொருள்கள் என்பது இங்கு கருத்து.

பெண்கள்தான் ஷைத்தான்களின் வலைகளாகவும், விரும்பத் தக்கவைகளில் இவர்கள்தான் மிகவும் அதிகமானவர்களாகவும் இருப்பதால் இவர்களை முதலில் கூறப்பட்டது.

ரிவாயத்து:- "நமது மக்கள் நமக்குச் சோதனையாக இருக்கிறார்கள். அவர்கள் உயிருடனிருந்தால் நமக்கு சோதனையாக இருக்கிறார்கள். மரணித்து விட்டால் நம்மை துக்கத்தில் ஆழ்த்துகிறார்கள்''.

மனிதருக்கு மக்கள் அதிகமாக இருந்தால் அதிகமான பணத்தைத் திட்ட ஹலால் ஹராம் ஆகிய இரண்டு விதத்தாலும் ஆசைப்படுகிறான். ஆதலால், மக்கள் பெற்றோர்களுக்குச் சோதனை என்று சொல்லப்பட்டது.

قُلْ اَؤُنَبِّئُكُمْ بِخَيْرٍ مِّنْ ذٰلِكُمْ ۭ لِلَّذِيْنَ
اتَّقَوْا عِنْدَ رَبِّهِمْ جَنّٰتٌ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا وَاَزْوَاجٌ مُّطَهَّرَةٌ وَّرِضْوَانٌ
مِّنَ اللّٰهِ ۭ وَاللّٰهُ بَصِيْرٌۢ بِالْعِبَادِ ۝

14. "இதைப் பார்க்கிலும் மேலானதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? பயபக்தியுள்ளவர்களுக்கு அவர்களின் ரப்பிடத்திற்

சுவர்க்கங்கள் இருக்கின்றன. அதனடியில் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அவர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். இன்னும் (அவர்களுக்குப்) பரிசுத்தமான துணைவிகளும், அல்லாஹ்வில் நின்றுமுள்ள திருப்தியும் உண்டு. மேலும், அல்லாஹ் தன் அடியார்களைப் பார்ப்பவன்" என்று கூறுவீராக.

அல்லாஹு தஆலாவிற்குப் பயபக்தி செலுத்தி, அவனல்லாத வற்றை மறந்து அவனின் பால் திரும்பியவருக்கு சுவர்க்கங்கள் இருக்கின்றன வென்பதையும், அவனது திருப்தி இருக்கின்றன வென்பதையும் மனிதர்களுக்கு அறிவித்து விட வேண்டும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிடப் பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆயத்தில் இரண்டு வகை சுவர்க்கங்களும் கூறப்பட்டி ருக்கின்றன. ஒன்று ஸ்தூல சம்மந்தமானது. இதனைக் குறித்துத்தான் சுவர்க்கங்களிருக்கின்றன வென்றும், இதில் பரிசுத்தமான ஜோடிகள் இருக்கின்றன வென்றும், இதில் நிரந்தரமாக இருப்பார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. மற்றொன்று ஆத்மார்த்தமானது. இதனைக் குறித்துத்தான் "அல்லாஹ்வில் நின்றுமுள்ள திருப்தி" என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விருவகைச் சுவர்க்கத்தில் இதுதான் மிகச் சிறந்தது. அடியானுடைய ஆன்மாவில் அல்லாஹு தஆலாவுடைய ஜலாலின் பிரகாசம் வெளியாகுவதும், அல்லாஹ்வின் மஅரிஃபத்தில் அடியான் மூழ்குவதும்தான் ஆத்மார்த்த சுவர்க்கமாகும். இதில் முதற்படியிலிருப்பவர் அல்லாஹு தஆலாவின் மீது திருப்தியடைந்த வராக இருப்பார். கடைசிப் படியில் இருப்பவர் அல்லாஹுதஆலாவால் பொருந்திக் கொள்ளப்பட்டவராக இருப்பார்.

ரிவாயத்து:- கியாமத்து நாளில் இறைவன் சுவர்க்கவாதிகளை நோக்கி "சுவர்க்கவாதிகளே" என்று அழைப்பான். அதற்கு அவர்கள் "லப்பைக்க வஸஃதைக்க வல்கைரு ஃபீயதைக்க (அதாவது உனக்கு அடி பணிந்தோம் உன் கையிலேயே சகல நன்மைகளும் இருக்கின்றன.)" என்று கூறுவார்கள். அப்பொழுது அவர்களிடம் "நீங்கள் பொருந்திக் கொண்டீர்களா" என்று கேட்பான். அதற்கவர்கள் "நாயனே நீ ஒருவருக்கும் கொடுக்காத அவ்வளவு பாக்கியத்தை எங்களுக்குத் தந்திருக்க அதனை நாங்கள் பொருந்திக் கொள்ளாதிருப் போமா?" என்று கூறுவார்கள். அப்பொழுது இறைவன் அவர்களிடம் "இதைவிட மேலான பாக்கியத்தை நான் உங்களுக்குத் தரட்டுமா?" என்று கேட்பான். அதற்கவர்கள் "இதனைப் பார்க்கினும் மேலானது இன்னமும் இருக்கிறதா?" என்று கூறுவார்கள். அப்பொழுது இறைவன் அவர்களை நோக்கி "உங்கள் மீது எனது பொருத்தம் என்னும் மழையை பொழிகிறேன். இனி ஒருபோதும் உங்கள் மீது நான் கோபப்படமாட்டேன்" என்று கூறுவான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

الَّذِينَ يَقُولُونَ رَبَّنَا إِنَّنَا آمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا
وَقِنَا عَذَابَ النَّارِ

15. (மேற்கூறப்பெற்ற) இவர்கள் "எங்கள் ரப்பே! நிச்சயமாக நாங்கள் விசுவாசங் கொண்டுள்ளோம். ஆதலால், எங்களுக்கு எங்களின் பாவங்களை மன்னித்தருள்வாயாக. இன்னும் (நரக) நெருப்பின் வேதனையை விட்டு எங்களைக் காப்பாற்றுவாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறுகின்றனர்.

இருவகைச் சுவர்க்கத்தையும் அடையத்தக்கவர்களான பயபக்தியாளர்கள் தங்களது றப்பிடம் இவ்வுலகில் கேட்கும் பிரார்த்தனையின் விபரம் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

"எங்கள் றப்பே! நாங்கள் விசுவாசங் கொண்டோம். ஆகவே, எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னித்தருள்" என்று கேட்பதிலிருந்து மனிதர்கள் ஈமான் கொள்வது ஒன்றினால் மட்டுமே பிழை பொறுக்கப்படவும் நரக வேதனையை விட்டுக் காக்கப்படவும் தகுதியாகி விடுகிறார்கள் என்பது தெரியவருகிறது.

الصّٰبِرِيْنَ وَالصّٰدِقِيْنَ وَالْقٰنِتِيْنَ وَالْمُنْفِقِيْنَ وَالْمُسْتَغْفِرِيْنَ بِالْاَسْحَارِ

16. (மேற்கூறப்பட்ட இவர்களே) பொறுமையாளர்கள்; இன்னும், உண்மையாளர்கள்; இன்னும் (அல்லாஹ்வுக்கு) வழிப்படுகிறவர்கள்; இன்னும் (நன்மையான காரியங்களில்) செலவு செய்கிறவர்கள்; இன்னும், (மனிதர்கள் யாவரும் தூங்கும்) விடியற்கால வேளைகளில் (தூக்கத்தை விடுத்து) பாவமன்னிப்புத் தேடுகிறவர்கள்.

பொறுமை என்பது மூன்று வகை. அது வணக்கம் புரிவதாலேற்படும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளல் ஒருவகை. பாவம் செய்யாமலிருப்பதால் ஏற்படும் கஷ்டத்தைச் சகித்துக் கொள்ளல் மற்றொரு வகை. வெறுக்கத்தக்க காரியங்களால் உண்டாகுங் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளல் இன்னொரு வகை. இம்மூன்று வகைப் பொறுமைகளும் (அஸ்ஸாபிரீன்) "பொறுமையாளர்கள்" என்ற பதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

قَالَ عَلَيْهِ السَّلَامُ مَنْ صَبَرَ عَلي مُصِيْبَةٍ فَلَهُ ثَلَاثُ مِائَةِ دَرَجَةٍ وَبَيْنِ الدرَجَتَيْنِ كَمَا بَيْنَ السمَاءِ وَالاَرْضِ وَمَنْ صَبَرَ عَلي الطَاعَةِ فَلَهُ ستُّ مِائَةِ دَرَجَةٍ مِن بَيْنِ الدرَجَتَيْنِ كَمَا بَيْنَ السمَاءِ وَالاَرْضِ وَمَنْ صَبَرَ عَلي المَعْصِيَةِ فَلَهُ تسْعُ مِائَةٌ دَرَجَةٍ بَيْنَ الدرَجَتَيْنِ كَمَا بَيْنَ العَرْشِ وَالْكُرْسِيِّ

ஹதீஸ்:- "ஆபத்துகளின் மூலம் ஏற்படும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்பவருக்கு முன்னூறு அந்தஸ்துகள் இருக்கின்றன. இவற்றில் இரண்டு அந்தஸ்துகளுக்கிடையில் வானத்திற்கும் பூமிக்கு மிடையிலுள்ள வித்தியாசமிருக்கிறது. வணக்கம் செய்வதாலேற்படும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்வோருக்கு அறுநூறு அந்தஸ்துகள் இருக்கின்றன. இவற்றில் இரண்டு அந்தஸ்துகளுக்கிடையில் வானத்திற்கும் பூமிக்குமிடையிலுள்ள வித்தியாசமிருக்கிறது. பாவத்தைச் செய்யாமலிருப்பதன் மூலம் ஏற்படும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்வோருக்கு தொளாயிரம் அந்தஸ்துகள் இருக்கின்றன. இவற்றில் இரண்டு அந்தஸ்துகளுக்கிடையில் அர்ஷுக்கும் குர்ஸிக்கு மிடையிலுள்ள வித்தியாசமிருக்கிறது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

உண்மை என்பது மூன்று வகை. ஒன்றாவது சொல்லில் உண்மையாயிருத்தல். அதாவது பொய் சொல்லாமை. இரண்டாவது செயலில் உண்மை. அதாவது ஒரு காரியத்தைச் செய்தால் அதனை இடையில் விட்டு விடாமல் பூர்த்தியாகச் செய்து முடித்தல். மூன்றாவது நிய்யத்தில் உண்மை. அதாவது ஒரு காரியத்தைச் செய்வதாக நிய்யத்து செய்தால் அதைச் செய்யும்வரை உறுதியாக இருத்தல்.

செலவு செய்தல் என்பது தனக்கும், தனது குடும்பத்தாருக்கும் தனது உறவினர்களுக்கும், தனக்கு நெருங்கியவருக்கும், சன்மார்க்க யுத்தத்திற்கும், இதர நற்செயல்களுக்கும் செலவு செய்யும் எல்லா விதமான செலவுகளையும் குறிக்கும்.

அல்லாஹுத்தஆலாவிடம் பிழை பொறுக்குமாறு பிரார்த்தனை செய்வதை விடியற்கால வேளையில் என்று காலத்தை நிர்ணயித்தது அந்த நேரம் துஆ கபூலாகுவதற்கு மிகவும் நெருங்கிய சமயமாகும். ஏனெனில், அந்நேரத்தில் தூக்கத்தை விட்டு எழுந்து வணக்கம் புரிவது உடலுக்கு மிகக் கஷ்டமாக இருக்கும். ஆனால், ஆத்மாவிற்கு மிகவும் தெளிவாக இருக்கம்.

ஹதீஸ்:- "நான் மிஃராஜுக்குப் போன இரவில் வானத்தில் ஒரு வெள்ளைச் சேவலைக் கண்டேன். அந்தச் சேவலின் இரண்டு கால்களும் ஏழாம் பூமிக்குக் கீழிலிருந்தன. அது தனது அலையை அர்ஷுக்குக் கீழ் சாய்த்து வைத்துக் கொண்டிருந்தது. அது தனது இறக்கைகளை விரித்தபோது அதன் ஒரு இறக்கை கிழக்கிலும்

மற்றொரு இறக்கை மேற்கிலும் இருந்தது. அது விடியற்காலத்தில் அது தனது இறக்கையை அடித்துக் கொண்டு, (ஸுப்ஹானல் மலிக்கில் குத்தூஸ்) அதாவது பரிசுத்தனான அரசனை நான் தஸ்பீஹு செய்கிறேன்'' என்று கூவுகிறது. அது கூவுகிற சப்தத்தைக் கேட்டவுடன் பூமியிலுள்ள சேவல்களும் கூவாமல் நின்று விடுகின்றன. பின்னர், சற்று நேரம் கழித்து அந்தச் சேவல் மீண்டும் தனது இறக்கைகளை அடித்துக் கொண்டு (ஸுப்ஹானல் அலிய்யில் அலீம், ஸுப்ஹானல் அஜீஸில் கஹ்ஹார், ஸுப்ஹான றப்பில் அர்ஷிர் றபீஃ) அதாவது "உயர்ந்தவனான பெரியவன் தூயவன்,அடக்கி ஆள்பவனான மிகைத்தவன் தூயவன், உயரமான அர்ஷின் றப்பு தூயவன்'' என்று கூவுகிறது. இந்தச் சப்தம் கேட்டவுடன் பூமியிலுள்ள சேவல்களெல்லாம் கூவுகின்றன. இது கூவாமல் நின்றவுடன் மற்றைய சேவல்களும் கூவாமல் நின்று விடுகின்றன என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹளரத் லுக்மான் ஹக்கீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது புதல்வரைப் பார்த்து "மகனே! நீ இந்தச் சேவலைப் பார்க்கினும் குறைந்தவராக இருக்க வேண்டாம். நீர் உமது விரிப்பில் தூங்கும்போது அது விடியற்காலத்தில் தஸ்பீஹு செய்கிறது'' என்று கூறியதாக ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

شَهِدَ اللّٰهُ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۙ وَالْمَلٰٓئِكَةُ وَاُولُوا الْعِلْمِ قَآئِمًا ۢ بِالْقِسْطِ ؕ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۞

17. அல்லாஹ்வும், அமரர்களும், நீதத்தில் நிலைத்திருக்கும் கல்விமான்களும், "நிச்சயமாக (வணக்கத்துக்குரிய) இறைவன் அவனைத் தவிர (வேறுயாரும்) இல்லை'' என்று சாட்சியங் கூறுகின்றனர். அவனைத் தவிர (வணக்கத்துக்குரிய) இறைவன் (வேறுயாரும்) இல்லை. (அவன்) மிகைத்தவன் விவேகமுள்ளவன்.

யூதர்களிலுள்ள இரண்டு பாதிரியார்கள் ஷாம் தேசத்திலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "நீர்தானா முஹம்மது?'' என்று வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஆம்'' என்று சொன்னார்கள். பிறகு அவ்விருவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து "தாங்கள் அஹ்மதோ?'' என்று வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நான் முஹம்மதும் அஹ்மதுமானவன்'' என்று கூறினார்கள். பின்னர், அவ்விருவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் "அல்லாஹுதஆலாவின் வேதத்தில் கூறப்பட்டவைகளில் மிகப் பெரிய சாட்சியம் எது?'' என்று கூறினார்கள். அப்பொழுது இந்த ஆயத்து அருளப்பட்டது. அவ்விருவரும் இஸ்லாத்தைத் தழுவினர்.

قَالَ ابْنُ عَبَّاسٍ خَلَقَ اللّٰهُ تَعَالَى الْاَرْوَاحَ قَبْلَ الْاَجْسَادِ بِاَرْبَعَةِ الْاَفِ سَنَةٍ وَخَلَقَ الْاَرْزَاقَ قَبْلَ الْاَرْوَاحِ بِاَرْبَعَةِ الْاَفِ سَنَةٍ فَشَهِدَ لِنَفْسِهِ قَبْلَ خَلْقِ الْخَلْقِ حِيْنَ كَانَ وَلَمْ يَكُنْ سَمَاءٌ وَلَا اَرْضٌ وَلَا بَرٌّ وَلَا بَحْرٌ

ரிவாயத்து:- ஸ்தூலப் பொருள்களைப் படைப்பதற்கு நான்காயிரம் வருடங்களுக்கு முன்னர் அல்லாஹுதஆலா அர்வாஹு களை அதாவது ஆன்மாக்களைப் படைத்தான். ஆன்மாக்களைப் படைப்பதற்கு நான்காயிரம் வருடங்களுக்கு முன் அவர்களது உணவுகளைப் படைத்தான். சிருஷ்டிகளைப் படைப்பதற்கு முன்னர் வானம், பூமி, கடல், திடல் ஆகியவைகள் இல்லாதிருந்த காலத்தில் தன்னைக் குறித்து சாட்சியங் கூறிக் கொண்டிருந்து, பின்னர் இந்த ஆயத்தை அருளினான் என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ ۗ وَمَا اخْتَلَفَ الَّذِينَ
أُوتُوا الْكِتَابَ إِلَّا مِن بَعْدِ مَا جَاءَهُمُ الْعِلْمُ بَغْيًا
بَيْنَهُمْ ۗ وَمَن يَكْفُرْ بِآيَاتِ اللَّهِ فَإِنَّ اللَّهَ سَرِيعُ
الْحِسَابِ ⑲

18. நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கமானது இஸ்லாம்தான். ஆனால் வேதத்தைக் கொடுக்கப்பட்ட (யூத கிறிஸ்த)வர்கள், அவர்களிடம் (இது சம்பந்தமான) அறிவு வந்த பின்பும் தங்களுக்குள்ள பொறாமையின் காரணமாகவே யல்லாது அபிப்பிராய பேதங் கொள்ளவில்லை; மேலும், எவன் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றானோ நிச்சயமாக அல்லாஹ் (அவர்களின் செய்கை சம்பந்தமாய்) கணக்கு வாங்குவதில் தீவிரமானவன்.

அல்இஸ்லாம் என்பது தவ்ஹீதும் ஷரீஅத்தின்படி நடப்பது மாகும். இஸ்லாம் மார்க்கம்தான் ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட காலமுதல் சன்மார்க்கமாக இருக்கிறது. இதனைத் தவிரவுள்ளவைகள் தவறானவைகள்.

தீனுல் இஸ்லாத்தின் ஹக்கீகத்தானது தவ்ஹீதுதான். ஷரீஅத்துகள் அதன் மேல் உருவமாகும். ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலமுதல் கியாமத்து நாள் வரையில் இந்த தீனாகிறது ஹக்கீகத்துப்படி ஒன்றாகவும் வெளி உருவத்துப்படி வித்தியாசமாகவும் இருக்கிறது. வெளி உருவத்தில் வித்தியாசப் படுவதானது நபிமார்கள் போதித்த ஷரீஅத்துகள் ஒன்றாக இருப்பதற்கு முரணாகமாட்டாது.

ரிவாயத்து:- இஸ்லாம் என்பது **லாஇலாஹ இல்லல்லாஹு** என்று சாட்சியங் கூறுவதும், அல்லாஹு தஆலாவிடமிருந்து வந்ததை அங்கீகரிப்பதுமாகும் என்று காதாதா ரலியல்லாஹுதஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

யூதர்களும் கிருஸ்துவர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியென்று அங்கீகரிக்கவும், அவர்கள் போதித்த ஷரீஅத்தைத் தழுவவும் மறுத்த போது وَمَا اخْتَلَفَ الَّذِينَ أُوتُوا الْكِتَابَ என்ற இவ்வசனம் அருளப்பட்டது. அவ்வேதக்காரர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினால், அவர்களிலுள்ள பாமரர்களிடம் தங்களுக்கிருந்து வந்த செல்வாக்கும், ஆதிக்கமும் வருமானமும் தங்களுக்கு இல்லாமற் போய் விடும் என்ற அச்சத்தால் இஸ்லாம் மார்க்கத்தின் மீது பொறாமை கொண்டு இஸ்லாத்தைத் தழுவ மறுத்தனர். அவர்களது செய்கையைக் கண்டித்து கியாமத்து நாளில் அவர்களை விசாரிப்பான் என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

فَإِنْ حَاجُّوكَ فَقُلْ أَسْلَمْتُ وَجْهِيَ لِلَّهِ وَمَنِ
اتَّبَعَنِ ۗ وَقُل لِّلَّذِينَ أُوتُوا الْكِتَابَ وَالْأُمِّيِّينَ
أَأَسْلَمْتُمْ ۚ فَإِنْ أَسْلَمُوا فَقَدِ اهْتَدَوا ۖ وَّإِن
تَوَلَّوْا فَإِنَّمَا عَلَيْكَ الْبَلَاغُ ۗ وَاللَّهُ بَصِيرٌ
بِالْعِبَادِ ⑳

19. எனவே, (நிராகரிப்போராகிய) அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்தால் "என் முகத்தை அல்லாஹ்வுக்கு வழிப்படுத்திக் கொண்டேன்; இன்னும், என்னைப் பின்பற்றியவர்களும் (வழிப்படுத்திக் கொண்டனர்)" என்று கூறும்; இன்னும், நீங்களும் வழிப்படுகிறீர்களா என்று வேதத்தைக் கொடுக்கப்பட்டிருக்கிறவர் களையும் (எழுதப் படிக்காதவர்களான) உம்மிகளையும் நீர் கேளும். எனவே, அவர்கள் வழிப்பட்டால் நிச்சயமாக நேர்வழி பெற்றுவிட்டனர். ஆனால் அவர்கள் புறக்கணித்து விட்டால் (அவர்களே குற்றவாளிகள்.

ஏனெனில்) உம்மீது ஏற்பட்டதெல்லாம் (அவர்களுக்கு விஷயத்தை) **அறிவிப்பதுதான். மேலும், அல்லாஹ் (தன்) அடியார்களைப் பார்ப்பவன்.**

فَإِنْ حَاجُّوكَ **"(நிராகரிப்போராகிய) அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்தார்களாயின்"** என்ற வாக்கியத்தில் கூறப்பட்ட தர்க்கமானது இஸ்லாதான் சன்மார்க்கம் என்பதைக் குறித்ததாகும். ஏனெனில் இதற்கு முந்திய 18வது ஆயத்தில் அல்லாஹ்விடத்தில் சன்மார்க்க மானது இஸ்லாம் தான் என்பதும், அதற்குரிய காரணங்களும் கூறப்பட்டு விட்டன. அவ்விஷத்தையறிந்த பின்னரும் அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைக் குறித்துத் தர்க்கம் செய்ய வருவதானது சத்தியத்தை உணர்ந்து கொள்ளும் நோக்கத்தினாலல்ல என்பதினாலே யாகும். உண்மையை உணர்ந்து கொள்வதற்காக ஒருவர் தர்க்கம் செய்தால், அவருக்கு விஷயத்தைத் தெரியப்படுத்து வதற்காக அவருடன் விவாதிப்பது குற்றமல்ல.

أُوتُوا الْكِتٰبَ (வேதத்தைக் கொடுக்கப் பட்டவர்கள்) என்பது யூதர்களையும் கிறிஸ்துவர்களையும் குறித்துச் சொல்லப்பட்டது. **உம்மிய்யீன** என்ற வார்த்தை அறபி நாட்டிலுள்ள முஷ்ரிக்குகளைக் குறிக்கிறது. இவர்கள் வேதத்தைக் கொடுக்கப்படாதவர்களாகவும் எழுதப்படிக்காதவர்களாகவும் இருந்ததனாலேயாகும்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஆயத்தை யூதர்களிடமும் கிறிஸ்துவர்களிடமும் ஓதிக் காண்பித்தார்கள். அதற்கவர்கள் நாங்கள் இஸ்லாமில்தான் இருக்கிறோம் என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யூதர்களை பார்த்து "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் வாக்கு (கலிமத்துல்லா) என்றும், அவனுடைய அடிமை என்றும், ரசூல் என்றும் நீங்கள் சாட்சியம் கூறுகிறீர்களா?" என்று வினவினார்கள். அதற்கவர்கள் **மஆதல்லாஹ்** இப்படிச் சொல்வதை விட்டு இறைவன் எங்களைக் காப்பாற்றுவானாக என்று கூறிவிட்டார்கள். பின்னர், கிறிஸ்துவர்களிடம் "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின்

அடிமையாகவும் அவனது ரசூலாகவும் இருக்கிறார் என்று நீங்கள் சாட்சியங் கூறுகிறீர்களா?" என்று வினவியதற்கு அவர்கள் **மஆதல்லாஹி அன்ய்யகூன ஈஸா அப்தன்** (ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அடிமையாக இருப்பதை விட்டு அல்லாஹ் காப்பாற்றுவானாக) என்று கூறினார்கள். இதனைக் குறித்துத்தான் وَإِنْ تَوَلَّوْا **"மேலும் அவர்கள் புறக்கணித்து விட்டால்"** என்ற வசனம் அருளப்பட்டது.

إِنَّ الَّذِينَ يَكْفُرُونَ بِآيٰتِ اللّٰهِ وَيَقْتُلُونَ النَّبِيّٖنَ
بِغَيْرِ حَقٍّ ۙ وَّيَقْتُلُونَ الَّذِينَ يَأْمُرُونَ بِالْقِسْطِ
مِنَ النَّاسِ ۙ فَبَشِّرْهُمْ بِعَذَابٍ أَلِيمٍ ۝

20. நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை மறுத்து அநியாயமாய் நபிமார்களைக் கொலை செய்து, நீதியைக் கொண்டு மனிதர்களை ஏவுபவர்களையுங் கொலை செய்கின்றார் களோ அவர்களுக்கு நோவினை செய்யும்படியான வேதனையைக் கொண்டு நற்செய்தி கூறும்.

يَكْفُرُونَ بِآيٰتِ اللّٰهِ **அல்லாஹ்வின் ஆயத்துகளை நிராகரிப்பவர்கள்** என்ற வசனம் திருக்குர்ஆனை அங்கீகரிக்காத யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஷ்ரிக்குகள் முதலிய யாவரையும் குறிக்கும்.

وَيَقْتُلُونَ النَّبِيّٖنَ بِغَيْرِ حَقٍّ **அநியாயமாய் நபிமார்களைக் கொலை செய்கிறவர்கள்** என்பது இங்கு பொதுவாகக் கூறப்பட்டிருந் தாலும் இச்செய்கையை யூதர்கள்தான் செய்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் இதர முஸ்லிம்களையும் கொலை செய்துவிட வேண்டும் என மதீனாவிற்குப் பக்கத்திற் குடியிருந்த யூதர்கள் முயன்றனர். ஆனால் இவர்களது முயற்சி வெற்றியடையாமல் இறைவன் காப்பாற்றிக் கொண்டான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னரிருந்த நபிமார்களிற் சிலரை அக்காலத்திலுள்ள யூதர்கள் கொலை செய்தனர்.

ரிவாயத்து:- "அல்லாஹ்வின் தூதரே! கியாமத்து நாளில் மிகக் கடுமையாக வேதனை செய்யப்படுகிறவர் எவர்" என்று நான் வினவினேன். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நபிமார்களை அல்லது நன்மையை ஏவித் தீயதை விலக்குகிற மனிதரைக் கொலை செய்த மனிதரைக் கடுமையாக வேதனை செய்யப்படும்" என்று கூறி இந்த ஆயத்தை ஓதிக் காண்பித்துப் பின்னர், "அபூ உபைதாவே பனூ இஸ்ராயீல்கள் ஒரு நாள் முற்பகலில் ஒரு நாளிகைக்குள் நாற்பத்தி மூன்று நபிமார்களை கொலை செய்தனர். பின்னர் பனூ இஸ்ராயீல்களில் நூற்றுப் பன்னிரண்டு வணக்கஸ்தர்கள் நபிமார்களைக் கொல்ல வேண்டா மென்று நன்மையை ஏவித் தீமையை விலக்கும் காரியத்தில் ஈடுபட்டனர். அவர்களனைவரும் பிற்பகலில் கொல்லப்பட்டனர்" என்று கூறினார்கள் என்று ஹளரத் அபூஉபைதத்துப்னுல் ஜர்ராஹ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

أُولَٰئِكَ الَّذِينَ حَبِطَتْ أَعْمَالُهُمْ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ
وَمَا لَهُمْ مِنْ نَاصِرِينَ

21. எவர்களுக்குத் தங்களுடைய செய்கைகள் இம்மையிலும், மறுமையிலும் (பயன்தராது) அழிந்து போய்விட்டதோ அவர்களே இவர்களாகும்; மேலும், இவர்களுக்கு (மறுமையில்) உதவியாளர் களுமில்லை.

நபிமார்களைக் கொலை செய்தல், நன்மையை ஏவித்தீயதை விலக்குதலான நீதி தவறுதல் முதலிய காரியங்களைச் செய்த முற்கூறப்பட்ட மனிதர்களின் நிலையைப் பற்றி இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதக் கிரியைகளைச் செய்பவர் நல்ல காரியங்களைச் செய்திருந்தால் அக்காரியத்திற்குரிய நற்பயன் அவர்களுக்குக் கிடைக்காது. அவர்களுக்கு இம்மையில் இழிவும் மறுமையில் வேதனையுமே கிடைக்கும்.

"**உதவியாளர்களுமில்லை**" என்பதற்கு அவர்களுக்கு எந்தவிதமான உதவியாளரும் கூட இல்லை என்பது கருத்து.

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ أُوتُوا نَصِيبًا مِنَ الْكِتَابِ
يُدْعَوْنَ إِلَىٰ كِتَابِ اللَّهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ ثُمَّ يَتَوَلَّىٰ
فَرِيقٌ مِنْهُمْ وَهُمْ مُعْرِضُونَ

22. வேதத்தில் நின்றும் ஒரு பாகத்தைக் கொடுக்கப்பட்டவர் (களான யூதர்)களை (நபியே) நீர் பார்க்கவில்லையா? அவர்களுக்கிடையே தீர்ப்புச் செய்வதற்காக அல்லாஹ்வின் வேதத்தின் பக்கம் அவர்கள் அழைக்கப்படுகின்றனர்; பின்பு அவர்களிலிருந்து ஒரு கூட்டத்தினர் பின்வாங்குகின்றனர். இன்னும், அவர்கள் (அதைப்) புறக்கணிக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

இந்த ஆயத்தில் யூதர்களில் மார்க்க பக்தி எவ்வளவு அற்பமாக இருக்கிறது என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யூதர்களின் மத்ரஸாவிற்குச் சென்று ஈமான் கொள்ளும்படி அங்கிருந்தவர்களை அழைத்தார்கள். அங்கிருந்த அவர்களது தலைவர் நயீமுப்னு அம்ர் என்பவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "தாங்கள் எந்த மார்க்கத்தில் இருக்கிறீர்கள்?" என்று வினவினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மார்க்கத்தில் இருக்கிறேன்" என்று கூறினார்கள். அதற்கவர் "ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் யூதராக இருந்தார்" என்று கூறினார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரிடம் "நமக்கும் உங்களுக்கு மிடையில் தவ்ராத் வேதமிருக்கிறது. அதனைக் கொண்டு வாருங்கள்" என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் சம்மதிக்காமல் விலகிக் கொண்டார்கள். இவ்விஷயத்தைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால், கல்பீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி இந்த ஆயத்து அருளப்பட்டதைக் குறித்து “கைபரிலுள்ள யூதர்களில் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும் ஆணும் விபச்சாரம் செய்தனர். இக்குற்றத்திற்கு விமோசனம் கிடைக்குமென்ற எண்ணத்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்விருவரையும் (ரஜ்மு என்னும் தண்டனையை அதாவது கல்லாலெறிந்து அவ்விரு வரையும் கொல்லும்படி கட்டளையிட்டார்கள். அப்பொழுது அவர்கள் அதனை அங்கீகரிக்க மறுத்து “நீங்கள் எங்களுக்கு நீதி செய்ய வில்லை” என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “நமக்கும் உங்களுக்குமிடையில் தவ்ராத் வேதம் இருக்கிறது” என்று கூறி தவ்ராத் வேதத்தைக் கொண்டுவரச் செய்து அப்துல்லாஹிப்னு ஸலாம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இத்தண்டனையைக் குறித்து எழுதப் பட்டுள்ள இடத்தைக் காண்பித்துக் கொடுத்தார். யூதர்களில் இப்னுஸுரியா என்பவர் அந்த இடத்தை மட்டும் விட்டு விட்டு எஞ்சியுள்ள விஷயங்களைப் படித்தார். அப்பொழுது அப்துல்லாஹிப்னு ஸலாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அந்த இடத்தை சுட்டிக்காட்டவே அது படிக்கப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தீர்ப்புச் செய்ததுபோல விதி எழுதப்பட்டிருந்தது. பின்னர் அவ்விருவருக்கும் (“ரஜ்மு” என்னும்) தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் கல்லால் எறியப்பட்டு மாண்டனர். இதன் காரணமாக யூதர்கள் கோபமடைந்து திரும்பச் சென்றனர். அப்பொழுது அல்லாஹு தஆலா இந்த ஆயத்தை இறக்கினான்” என்று கூறி இருக்கிறார்.

ذَٰلِكَ بِأَنَّهُمْ قَالُوا لَن تَمَسَّنَا النَّارُ إِلَّا أَيَّامًا
مَّعْدُودَاتٍ ۖ وَغَرَّهُمْ فِي دِينِهِم مَّا كَانُوا
يَفْتَرُونَ ۝

23. இதுவாகிறது எண்ணப்பட்ட (சில) நாட்களைத் தவிர (நரக) நெருப்பு எங்களைத் தீண்டவே செய்யாது என்று அவர்கள் நிச்சயமாகக் கூறிக் கொண்டிருந்ததனாலேயாகும். இன்னும், அவர்கள் தங்கள் மார்க்கத்தில் கற்பனை செய்து கொண்டிருந்தது அவர்களை ஏமாற்றி விட்டது.

சன்மார்க்கத்தைத் தழுவாமலிருந்து கொண்டு துன்மார்க் கத்திலேயே அவர்கள் ஈடுபட்டிருப்பதற்குக் காரணம் இன்னதென்பது, அதாவது அல்லாஹு தஆலாவின் மீது அவர்கள் பொய்யாக இட்டுக் கட்டிக் கொண்டிருந்ததுதான் காரணம் என்பது இந்த ஆயத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

எங்களது மூதாதையர் நபிமார்களாக இருக்கிறார்கள். ஆதலின், அவர்கள் எங்களுக்கு ஷஃபாஅத்துச் செய்து எங்களை மீட்டி விடுவார்கள் என்றும், பாவிகளை வேதனை செய்வேன் என்று அல்லாஹு தஆலா சத்தியம் செய்திருப்பதால் அந்தச் சத்தியத்தை நிறைவேற்றுவதற்காகச் சொற்ப வேதனையை மட்டும் தான் செய்வேன் என்று அவன் ஹளரத் யாக்கூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வாக்களித்திருக்கிறான். ஆதலின் நாங்கள் எண்ணப்பட்ட சில நாட்கள் தாம் வேதனை செய்யப்படுவோம் என்றும் அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர்.

மேலும், அவர்கள் காளைக் கன்றை வணங்கிக் கொண்டிருந்த நாட்களாகிய நாற்பது நாட்கள் மட்டும்தான் வேதனை செய்யப்படுவோம் என்றுங் கூறிக் கொண்டிருந்தார்கள் என்றும் ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

فَكَيْفَ إِذَا جَمَعْنَاهُمْ لِيَوْمٍ لَّا رَيْبَ فِيهِ وَوُفِّيَتْ
كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ ۝

24. எனவே, அ(ந்த நாள் வருவ)தில் எந்தவிதச் சந்தேகமும் கிடையாதே, அந்த (இறுதித் தீர்ப்பு) நாளில் அவர்களை நாம் ஒன்று

சேர்த்து, ஒவ்வொருவருக்கும் அவரவர் சம்பாதித்ததற்கு (ப் பிரதிபலன்) நிறைவேற்றப்பட்டால் (அவர்கள் நிலை) எவ்வாறிருக்கும்? ஆனால், அவர்கள் அநீதி செய்யப்பட மாட்டார்கள்.

ரிவாயத்து:- காஃபிர்களது கொடிகளில் முதலாவதாக உயர்த்தப்படுவது யூதர்களது கொடியாகும். அவர்களை அல்லாஹ் யாவருக்கும் முன்னிலையில் விசாரித்துக் கேவலப்படுத்தி நரகத்தின் பால் அவர்களைச் சேர்க்க உத்தர விடுவான்.

وَوُفِّيَتْ كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ இன்னும் ஒவ்வொருவருக்கும் அது சம்பாதித்ததற்கு (ரிய பிரதிபலன்) நிறைவேற்றப்படும் என்ற இவ்வசனத்திலிருந்து விசுவாசங் கொண்டவர்கள் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் கடைசி வரை நரகினிலிருக்க மாட்டார்கள் என்பதும், இறுதியாக அவர்கள் சுவர்க்கத்திற்கு அனுப்பப் படுவார்கள் என்பதும் தெரிய வருகின்றன. ஏனெனில் ஈமான் கொண்டதற்குரிய பிரதிபலன் நரகில் இல்லை என்பதனாலேயாகும்.

قُلِ اللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِي الْمُلْكَ مَنْ تَشَآءُ
وَتَنْزِعُ الْمُلْكَ مِمَّنْ تَشَآءُ ۫ وَتُعِزُّ مَنْ تَشَآءُ
وَتُذِلُّ مَنْ تَشَآءُ ۭ بِيَدِكَ الْخَيْرُ ۭ اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ
قَدِيْرٌ ٢٦

25. "அல்லாஹ்வே! (சர்வ உலக) அதிகாரத்துக்கு எஜமானே! நீ நாடியவர்களுக்கு அரசாங்கத்தைக் கொடுக்கிறாய்; நீ நாடியவர்களிடமிருந்து அரசாங்கத்தை நீக்கி விடுகிறாய்; இன்னும், நீ நாடியவர்களுக்குக் கண்ணியங் கொடுக்கிறாய்; இன்னும் நீ நாடியவர்களைத் தாழ்த்துகிறாய்; உன் கைவசத்திலேயே நன்மை(யும் தீமையும்) இருக்கிறது. நிச்சயமாக நீ எல்லாவற்றின் மீதும் பேராற்றலுள்ளவன்" என்று (நபியே) நீர் கூறும்.

அல்லாஹுதஆலா தனக்கு விருப்பமானவருக்கு அரசாங்கத்தைக் கொடுக்கிறான் என்பதிலும், தனக்கு விருப்பமான வரிடமிருந்து அரசாங்கத்தை எடுத்துக் கொள்கிறான் என்பதிலிருந்து அவன்தான் உலகத்திலுள்ள சகல அரசாங்கங்களுக்கும் உண்மை எஜமான் என்பதும், உரிமையாளன் என்பதும் தெரியவருகிறது.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அகழ் யுத்தத்திற்காக மதீனா முனவ்வராவைச் சுற்றிலும் அகழி வெட்டியபோது ஒரு கற்பாறை அடியிலிருந்தது. அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைத்த போது ஈரான் தேசத்தையும், உரோம ஏகாதிபத்தியத்தையும் முஸ்லிம்கள் வெல்வார்கள் என்பதைக் குறித்து முன்னறிவிப்புச் செய்தார்கள். அப்பொழுது யூதர்களும் முனாஃபிக்குகளும் "ரோம் ராஜ்யம் கிடைப்பது கிட்டவாயிருக்கிறது? முஹம்மதுக்கு மக்காவும் மதீனாவும் போதாதோ?" வென்று கூறினார்கள். அப்போது இந்த ஆயத்து இறங்கிற்று.

تُوْلِجُ الَّيْلَ فِي النَّهَارِ وَتُوْلِجُ النَّهَارَ فِي الَّيْلِ ۡ
وَتُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَتُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ ۡ
وَتَرْزُقُ مَنْ تَشَآءُ بِغَيْرِ حِسَابٍ ٢٧

26. (இன்னும்) நீ(யே) இரவைப் பகலில் நுழையச் செய்கிறாய்; இன்னும் பகலை இரவில் நுழையச் செய்கிறாய்; இன்னும், உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறாய்; இன்னும், நீ நாடியவர்களுக்குக் கணக்கில்லாமல் கொடுக்கின்றாய்.

ரிவாயத்து:- சூரத்துல் ஃபாத்திஹாவும் ஆயத்துல் குர்ஸியும், ஆமனர் ரசூலும், ஆலஇம்ரான் சூரத்தில் 17வது ஆயத்தாகிய ஷஹிதல்லாஹு என்ற ஆயத்தும், 18வது ஆயத்தாகிய இன்னத்தீன என்ற ஆயத்தும், 25வது ஆயத்தாகிய குலில்லாஹும்ம மாலிக்கல் முல்கி என்ற ஆயத்தும் அல்லாஹுத்தஆலாவுடைய அர்ஷில்

கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கும் அல்லாஹு தஆலாவுக்கு மிடையில் யாதொரு திரையுமில்லை. அவைகள் அல்லாஹு தஆலாவிடத்தில் "நாயனே! எங்களை நீ பூமியிலும், உனக்கு மாறு செய்கிறவர்களிடத்திலும் எங்களை இறக்குவாயா?" என்று வினவின. அப்பொழுது அல்லாஹு தஆலா அவைகளிடத்தில் "உங்களை ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னாலும் தவறாமல் ஓதிவருபவரைச் சுவர்க்கத்தில் சேர்ப்பேன். அதிலுள்ள நிஃமத்துகளையும் அவர்களுக்குக் கொடுப்பேன். அவர்கள் சுவர்க்கத்திலுள்ள கத்திரத்துல் குத்துஸ் என்னும் இடத்தில் இருக்கும்படி செய்து. தினந்தோறும் அவர்களை நான் எழுபது முறை பார்த்து அவர்களுடைய எழுபது தேவைகளை நிறைவேற்றுவேன். அந்த தேவைகளில் மிகவும் தாழ்ந்தது அவர்களுடைய பாவங்களை நான் மன்னிப்பதாகும். இன்னும் அவருடைய பகைவர் மீதும், அவர் மீது பொறாமை கொண்டவர்கள் மீதும் அவர்களுக்கு நான் வெற்றியளித்து அவர்களை நான் காப்பாற்றுவேன்" என்று கூறினான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸெய்யிதுனா அலி ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

لَا يَتَّخِذِ الْمُؤْمِنُونَ الْكٰفِرِينَ أَوْلِيَاءَ مِنْ دُونِ
الْمُؤْمِنِينَ ۚ وَمَنْ يَفْعَلْ ذٰلِكَ فَلَيْسَ مِنَ اللّٰهِ فِي
شَيْءٍ إِلَّا أَنْ تَتَّقُوا مِنْهُمْ تُقٰىةً ۗ وَيُحَذِّرُكُمُ
اللّٰهُ نَفْسَهُ ۗ وَإِلَى اللّٰهِ الْمَصِيرُ ۝

27. விசுவாசிகளைத் தவிர்த்து நிராகரிப்போரை விசுவாசிகள் (தங்களது) நண்பர்களாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மேலும், அவர்களிலிருந்து (உங்களைக்) காப்பாற்றிக் கொள்வதை நீங்கள் பயந்தாலன்றி (உங்களில்) எவரேனும் இதைச் செய்தால் அவர் அல்லாஹ்விலிருந்து எவ்விஷயத்திலுமில்லை. இன்னும்,

(அல்லாஹ்) உங்களுக்குத் தன்னைப் பற்றி எச்சரிக்கை செய்கிறான்; மேலும், அல்லாஹ்வினளவிலேயே (உங்களுக்கு) மீளுதல் இருக்கிறது.

விசுவாசிகளான மூமின்களது மத சம்மந்தமான காரியங்களில் அதாவது மார்க்க யுத்தம் முதலியவற்றில் காஃபிர்களிடம் உதவி தேடக் 'கூடாது என்பதும், காஃபிர்களைத் தங்களது காரியங்களை நிர்வகிப்பதற்குரிய காரியஸ்தராகவோ துணைவராகவோ தலைவராகவோ நியமித்துக் கொள்ளக் கூடாதென்பதும் இந்த ஆயத்தின் கருத்து. ஆனால், காஃபிர்கள் மிகைத்தவர்களாகவும் அல்லது காஃபிர்களுக்குள் சில மூமின்களுமிருந்தால் மூமின்களது நன்மையை யுத்தேசித்து அவர்களை வெளிக்கு மட்டும் துணைவர்களாகக் காண்பித்துக் கொள்ளலாம். அவ்வாறில்லாமல் காஃபிர்களைத் தங்களுக்குத் தலைவர்களாக உள்ளும் புறமும் ஒன்றுபோல் நம்பி இருந்தால் அப்புறம் அல்லாஹு தஆலா மூமின்களுக்கு உதவியாளனாக இருக்கமாட்டான். அவனது பகைவர்களாகிய காஃபிர்களுக்குப் பயந்து அவர்களைத் தங்கள் தலைவர்களாக ஏற்றுக் கொள்வதைப் பார்க்கினும் அல்லாஹு தஆலாவுக்கே அதிகம் பயப்பட வேண்டும் என்பதும் அவனிடத்திலேயே திரும்பவும் மீள வேண்டிய திருக்கிற தென்பதும் இந்த ஆயத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்த எச்சரிக்கை மிகக் கடுமையானது என்று **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** சொல்லப்பட்டிருக்கிறது.

قُلْ إِنْ تُخْفُوا مَا فِي صُدُورِكُمْ أَوْ تُبْدُوهُ يَعْلَمْهُ
اللّٰهُ ۗ وَيَعْلَمُ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ ۗ
وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيرٌ ۝

28. "உங்கள் இருதயங்களில் (ஒன்றை) நீங்கள் மறைத்து வைத்திருந்தாலும், அல்லது அதை நீங்கள் வெளிப்படுத்தினாலும்

அல்லாஹ் அதை அறிகிறான்; இன்னும், வானங்களில் இருப்பதையும் பூமியில் இருப்பதையும் அவன் அறிகிறான்; மேலும், அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன்" என்று (நபியே) நீர் கூறும்.

இதற்கு முந்திய ஆயத்தில் "இன்னும் அல்லாஹ் தன்னைக் குறித்து உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறான்" என்று கூறப்பட்டிருக்கிற செய்திக்கு இது விபரமாகும். "காஃபிர்களை உங்களது உதவியாளர் களாக நீங்கள் நினைத்திருக்கிற எண்ணத்தையும், உங்களுக் கிடையில், நீங்கள் பகிரங்கமாகச் சொல்லிக் கொள்வதையும் அல்லாஹு தஆலா தெரிந்து கொள்கிறான். வானம் பூமி ஆகியவற்றில் உள்ளதை அவன் அறிபவனாக இருப்பதால் அவனுக்கு ஒன்றும் மறைவாக இல்லை. உங்களுடைய இச்செய்கைக்காக அவன் உங்களைத் தண்டிப்பான். அவனது தண்டனையை விட்டு நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. ஏனெனில், அவன் பேராற்றலுள்ளவன்" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

يَوْمَ تَجِدُ كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ مِنْ خَيْرٍ مُّحْضَرًا ۖ
وَمَا عَمِلَتْ مِن سُوٓءٍ ۚ تَوَدُّ لَوْ أَنَّ بَيْنَهَا وَبَيْنَهُۥٓ أَمَدًۢا
بَعِيدًا ۗ وَيُحَذِّرُكُمُ ٱللَّهُ نَفْسَهُۥ ۗ وَٱللَّهُ رَءُوفٌۢ بِٱلْعِبَادِ ۝

29. ஒவ்வொருவரும் அவரவர் செய்த நன்மையையும், இன்னும் அவரவர் செய்த தீமையையும் தன் முன் கொண்டு வரப்பட்டதாகக் காணும் நாளை (எண்ணிப்பாரும்). இன்னும், நிச்சயமாகத் தனக்கும் அதற்கும் (அந்தநாளைக்கும்) இடையில் (உள்ள தூரமானது) நீண்ட கால தூரம் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவர். இன்னும், அல்லாஹ் உங்களுக்குத் தன்னைப் பற்றி எச்சரிக்கை செய்கிறான். மேலும், அல்லாஹ் (தன்) அடியார்கள் பால் (மிகவும்) இரக்கமுள்ளவன்.

"ஒவ்வொருவரும் அது செய்த நன்மையையும், தீமையையும் தன் முன் கொண்டு வரப்பட்டதாகக் காணும் நாள்" என்பது கியாமத்து நாளாகும். அந்த நாளில் ஒவ்வொருவரும் தங்கள் கிரியைகளைக் குறித்துக் கேள்வி கணக்குக் கேட்கப்படுவர்.

அறிந்துகொள்:- மனிதன் செய்கிற கிரியை அல்லது, சொல்கிற சொல், இறைவனின் பட்டோலையில் பதிந்து விடுகின்றன. பின்னர், உயிர் உடலை விட்டு விலகி, கியாமத்து நாளும் ஏற்படும் போது அது செய்த நன்மையையும் தீமையையும் தனக்கு முன் கொண்டுவரப் பட்டிருப்பதாகக் கண்டு கொள்ளும். அவைகள் தீமையான கிரியைகளாக இருந்தால் அந்த நாள் மிகத் தூரத்திலிருக்கக் கூடாதா வென்று அந்த மனிதர் ஆசைப்படுவார். ஆகவே, அறிவுள்ளவர்கள் தனது அகத்தை அற்பமான தன்மைகளை விட்டுச் சுத்தப்படுத்தவும், உலக சம்மந்தங்களாகிய அழுக்குகளை விட்டுத் தனது இருதயத்தைப் பரிசுத்தமாக்கவும், அல்லாஹுதஆலாவிற்கு இணக்கமான நற்செயல் களைச் செய்வதன் மூலம் அவனது திருப்தியை அடைவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ
وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ۝

30. "நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கிறவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான்; இன்னும், உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன்; பேரன்புடையவன்" என்று (நபியே) நீர் கூறும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஃபுப்னுல் அஷ்ரப் என்பவரையும் அவரைப் பின்பற்றியவரையும் ஈமான் கொள்ளுமாறு அழைத்தபோது அவர்கள் "நாங்கள் அல்லாஹ்வின் புதல்வர்கள், அவனுக்கு மிகப்பிரியமானவர்கள்"

என்று கூறினர். அதற்கு மறுமொழியாக அல்லாஹு தஆலா இந்த ஆயத்தை இறக்கினான்.

அல்லாஹு தஆலா நம்மீது பிரியமாக இருக்க வேண்டுமென்று விரும்பினால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்ற வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றுவதால் அல்லாஹு தஆலா பிழை பொறுப்பான் என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டி ருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பிரியம் வைப்பது அவர் கொண்டு வந்த ஷரீஅத்தைப் பின்பற்றுவதிலும், அவர்கள் காண்பித்த சன்மார்க்கத்தைச் சொல்லாலும் செயலாலும் தழுவி நடப்பதிலும்தான் இருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பிரியம் வைப்பதாக சொல்பவருக்கு இதனைத்தவிர வேறு வழியில்லை. இப்படிச் செய்வதுதான் பிரியம் என்பதற்கு (குத்துபாக அதாவது) உண்மையான பிரியமாகவும், அதன் மல்ஹராகவும் இருக்கிறது. இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வழிதான் அதாவது "தரீக்கத்துதான்" உண்மையான பிரியமாகும். எனவே, அந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது தரீக்கத்திலிருந்து எவருக்குப் பங்கு இல்லையோ அவருக்கு அந்தப் பிரியத்திலும் பங்கு இல்லை என்று காஷானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

قُلْ أَطِيعُوا اللَّهَ وَالرَّسُولَ ۖ فَإِن تَوَلَّوْا فَإِنَّ اللَّهَ
لَا يُحِبُّ الْكَافِرِينَ

31. (ஆதலால்) "நீங்கள் அல்லாஹ்வுக்கும், ரசூலுக்கும் வழிப்படுங்கள். எனவே, நீங்கள் (இதில்) பின்வாங்கினால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பவர்களை நேசிக்கிறதில்லை" என்று (நபியே) நீர் கூறும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுக்கு இறக்கப்பட்ட இதற்கு முந்திய 30 வது ஆயத்தை ஓதிக்காண்பித்தபோது அப்துல்லாஹிப்னு உபய்யி என்பவர் "முஹம்மது தம்முடைய தோழர்களை தமக்கு வழிப்படும்படி செய்து. ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கிறிஸ்துவர்கள் நேசிப்பதுபோல தம்மை தமது தோழர்கள் நேசிக்க வேண்டுமென்று சொல்கிறார்" என்று கூறினார். அப்போது இந்த ஆயத்து இறக்கப்பட்டது.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹளரத் உமர் ஃபாருக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது கையைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் "அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் எனது உயிரைத் தவிர மற்றெல்லா வற்றையும் விட மிகவும் பிரியமானவர்களாயிருக்கிறீர்கள்" என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "முஹம்மதுவின் உயிர் எவன் வசமிருக்கிறதோ அவன் மீது சத்தியமாகக் கூறுகிறேன், உங்களில் எவர் தனது உயிரைப் பார்க்கினும் அதிகமாக என்னை நேசிக்கவில்லையோ அவர் விசுவாசியல்ல" என்று கூறினார்கள். அதற்கு ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "இப்பொழுது அல்லாஹ்வின் மீது சத்தியமாக கூறுகிறேன். தாங்கள் எனது உயிரைப் பார்க்கினும் எனக்கு அதிகப் பிரியமானவர்கள்" என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இப்பொழுது உமரே! உமது ஈமான் நிறப்பமானதாயிற்று" என்று கூறினார்கள் என்று அப்துல்லாஹிப்னு ஹிஷாம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் சொன்னார்கள் என்று இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

ஹதீஸ்:- எனது உம்மத்துகள் அனைவரும் சுவர்க்கத்தில் நுழைவார்கள். ஆனால், விலகிக் கொண்டவரைத் தவிர என்று நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்பொழுது ஸஹாபிகள் "விலகிக் கொண்டவர் என்பவர் யார்?" என்று வினவியதற்கு எவர் எனக்கு கீழ்ப்படிந்தாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார். இன்னும் எவர் எனக்கு மாறு செய்தாரோ அவர் விலகிக் கொண்டார்" என்று கூறினார்கள்.

إِنَّ اللَّهَ اصْطَفَىٰ آدَمَ وَنُوحًا وَآلَ إِبْرَاهِيمَ
وَآلَ عِمْرَانَ عَلَى الْعَالَمِينَ ۝

32. ஆதமையும், நூஹையும், இப்ராஹீம் குடும்பத்தினரையும், இம்ரான் குடும்பத்தினரையும் உலகத்தினர் அனைவரைப் பார்க்கினும் நிச்சயமாக அல்லாஹ் (மேன்மையாகத்) தெரிந்தெடுத்திருக்கின்றான்.

இப்ராஹீமுடைய கோத்திரம் என்றது ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், ஹளரத் இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்களது வம்சத்தில் வந்த நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முதலான நபிமார்களாவார்கள். இம்ரானின் கோத்திரத்தார் என்பதற்கு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய நபிமார்களாகும் என்று சிலரும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவருடைய தாயார் மர்யம் ஸித்தீக்காவுமாகும் என்று வேறு சிலரும் கூறி இருக்கிறார்கள். ஏனெனில், மர்யம் ஸித்தீக்காவின் தந்தையின் பெயரும் இம்ரான்தான். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆகிய இருவருடைய தந்தையின் பெயரும் இம்ரான்தான். என்றாலும், இந்த ஆயத்தில் ஹளரத் மர்யம் ஸித்திக்கா அவர்களையும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் பற்றிய விபரம் கூறப்படுவதால் இந்த ஆயத்தில் கூறப்பட்ட இம்ரான் கோத்திரத்தார் என்றது ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களையும் அவரது தாயையும்தான் குறிக்கிறது. என்று **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** கூறப்பட்டிருக்கிறது.

ذُرِّيَّةً بَعْضُهَا مِنْ بَعْضٍ ۗ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ۝

33. அவர்களில் சிலர் சிலரின் சந்ததிகளில் நின்றுமுள்ளவர்களாவர். மேலும், அல்லாஹ் கேட்பவன், மிக அறிபவன்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கோத்திரத்தாராகிய ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹளரத் இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிலிருந்து உண்டானவர்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களிலிருந்து உண்டானவர்கள். ஹளரத் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிலிருந்து உண்டானவர்கள். இவ்வாறு நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் பனூ இஸ்றாயீல்களில் உதித்த ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் மர்யம் ஸித்தீக்கா, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய எல்லா நபிமார்களும் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களில் நின்றும் உண்டானவர்களே.

அறிந்து கொள்:- வம்சம் என்பது இரண்டு வகை. ஒன்று ரத்த சம்மந்தமுள்ளது. மற்றொன்று ஆத்மா சம்மந்தமுள்ளது. மேலே சொல்லப்பட்ட சம்மந்தமானது ரத்த சம்மந்தத்தைப் பற்றியது. ஆனால், ஆத்மா சம்மந்தப்பட்ட வரையில் இவர்கள் ஒருவருக்கொருவர் நேருக்கு நேரான மக்களாவார். அதாவது தவ்ஹீதிலும், மஃரிஃபத்திலும், மார்க்கத்தின் உஸுலியத்தான சட்டங்களாகிய சன்மார்க்கங்களிலும் ஒரு நபியை மற்றொரு நபி பின்பற்றுகிறார். இம்முறையில் முந்தி வந்த நபிக்கு பிந்தி வருகிற நபி புதல்வராக இருக்கிறார். தவிர உடல் தாயின் கற்பக் கோளறையில் தந்தையின் இந்திரியத்தினால் உண்டாகுவது போல இருதயமானது ஷெய்கு மார்களது ஊதுகையால் அகத்தின் சக்தியிலிருந்து உண்டாகின்றது. இம்முறையில் ஞானாசிரியர் தனது சிஷ்யருக்கு ஆத்மார்த்த தந்தையாகின்றார். இதனைக் குறித்துதான்

ஸெய்யிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் “இரண்டு முறை பிறக்காதவர்கள் வானலோகத்தின் ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டார்கள்” என்று கூறி இருக்கிறார்கள்.

إِذْ قَالَتِ امْرَأَتُ عِمْرَانَ رَبِّ إِنِّي نَذَرْتُ لَكَ
مَا فِي بَطْنِي مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّي ۖ إِنَّكَ أَنتَ
السَّمِيعُ الْعَلِيمُ

34. “என்னுடைய ரப்பே! நிச்சயமாக நான் என்னுடைய வயிற்றிலிருப்பதை உனக்காக உரிமை விடப்பட்டதாக வேண்டுதல் செய்து கொண்டேன். ஆதலால் (என்னுடைய இவ்வேண்டுதலை) என்னிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக; நிச்சயமாக நீதான் (பிரார்த்தனைகளை) நன்கு கேட்பவன், மிகவும் அறிபவன்” என்று இம்ரானின் மனைவி கூறிய நேரத்தை (எண்ணிப்பாரும்).

இம்ரானுடைய மனைவியின் பெயர் ஹன்னா. இவர் ஹளரத் மர்யம் ஸித்தீக்காவின் தாயாராவார். இவர் வெகு காலமாக மக்கட்பேறு கிடைக்காத மலடியாக இருந்தார். ஒரு நாள் ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது ஒரு பறவை தனது குஞ்சுக்கு இரை கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அப்பொழுது தனக்குப் பிள்ளையில்லாததைப் பற்றிய எண்ணம் அவர் மனதில் தோன்றி “நாயனே! எனக்கு ஒரு பிள்ளையைத் தந்தால் அதனை பைத்துல் முகத்தஸ் பள்ளியில் பணிவிடை செய்வதற்காகவும், அதன் பூசாரிகளில் ஒருவராகவும் இருக்க நான் விட்டு விடுகிறேன் என்று நான் நேர்ச்சை செய்து கொள்கிறேன்” என்று இறைவனைப் பிரார்த்தித்தார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஹளரத் மர்யம் ஸித்தீக்காவை கர்ப்பமுற்றார். அவர்கள் கற்பமாக இருக்கும்போதே இம்ரான் இறந்து போனார்.

அக்காலத்தில் மனிதர்கள் தங்களது புதல்வர்களை பைத்துல் முகத்தஸ் பள்ளிக்கு பணிவிடை செய்வதற்காக விட்டு விடுவது

அப்பொழுதிருந்த ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு விடப்படுபவர்கள் உலகம் சம்மந்தமான அலுவல்களைக் கவனிப்பதுமில்லை, திருமணம் செய்வதுமில்லை. நிற்க, குழந்தை பிறந்த பின் ஆண் குழந்தையாக இருந்தால் மட்டுமே விடுவது வழக்கம். பெண் குழந்தைகளை அவ்வாறு விடுவதில்லை. ஏனெனில் பெணகளுக்கு மாதவிடாய் போன்ற சங்கடங்களிருப்பதால் அவர்கள் எந்நேரமும் பள்ளியிலிருக்க முடியாது. இதனைத் தவிர வேறு பல கஷ்டங்களுமிருந்தன. ஆதலால், இவ்வாறு நேர்ச்சை செய்து விடப்படுபவர்கள் ஆடவர்களாகவே இருந்தனர். இவ்வித நிலையில் இம்ரானுடைய மனைவி ஹன்னா என்பவர் கற்பத்திற்கு முன்னே தனது வயிற்றிலிருப்பதை பைத்துல் முகத்தஸின் ஊழியத்திற்காக விட்டு விடுகிறேன் என்று நேர்ந்தது தனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்ற விருப்பத்தினாலேயாகும்.

فَلَمَّا وَضَعَتْهَا قَالَتْ رَبِّ إِنِّي وَضَعْتُهَا أُنثَىٰ
وَاللَّهُ أَعْلَمُ بِمَا وَضَعَتْ وَلَيْسَ الذَّكَرُ كَالْأُنثَىٰ
وَإِنِّي سَمَّيْتُهَا مَرْيَمَ وَإِنِّي أُعِيذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا
مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ

35. பின்னர், (இம்ரானின் மனைவியான) அவள் அ(க்கற்பத்)தைப் பிரசவித்தபோது “என்னுடைய ரப்பே! நிச்சயமாக நான் அ(க்கற்பத்)தைப் பெண்ணாகப் பிரசவித்தேன். தவிர, அவள் பிரசவித்ததை அல்லாஹ் நன்கு அறிந்தவன். மேலும் பெண்ணைப்போல் ஆண் இல்லை; இன்னும் (பெண் குழந்தையான) இவளுக்கு நிச்சயமாக நான் மர்யம் எனப் பெயரிட்டேன்; இன்னும், நிச்சயமாக நான் இவளுக்கும் இவளுடைய சந்ததிக்கும் விரட்டப்பெற்ற ஷைத்தானை விட்டு உன்னிடத்தில் காவல் தேடுகிறேன்” என்று (பிரார்த்தித்துக்) கூறினாள்.

இம்ரானுடைய மனைவியாகிய ஹன்னா தனது கற்பத்தில் இருக்கும் சிசு ஆணாக இருக்கும் என்று நினைத்திருந்ததால் கவலையடைந்து அல்லாஹு தஆலாவிடத்தில் رَبِّ إِنِّي وَضَعْتُهَا أُنثَىٰ "**எனது றப்பே! நிச்சயமாக நான் அதனைப் பெண்ணாகப் பிரசவித்தேன்**" என்று கூறினாள்.

இந்தப் பெண் குழந்தையின் அந்தஸ்து என்ன என்பதை இம்ரானின் மனைவி அறியாமல் இப்படிக் கூறியதற்காக அல்லாஹு தஆலா அதனைக் குறித்து وَاللَّهُ أَعْلَمُ بِمَا وَضَعَتْ وَلَيْسَ الذَّكَرُ كَالْأُنثَىٰ "**அவள் பிரசவித்ததை அல்லாஹ் நன்கு அறிந்தவன், மேலும் பெண்ணைப்போல் ஆண் இல்லை**" என்று கூறினான். ஏனெனில், ஆண் குழந்தையாக இருந்தால் அது அந்த மஸ்ஜிதுக்கு பணிவிடை செய்பவராகவும் பூசாரியாகவும் மட்டும் இருந்திருக்கும். ஆனால், பெண்ணாகப் பிறந்த இக்குழந்தையின் வயிற்றிலிருந்து ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அற்புதமாகப் பிறக்கப் போவதை அல்லாஹ் அறிந்திருந்தான்.

மர்யம் என்ற பதத்திற்கு வணங்குபவள் என்பது பொருள். இம்ரானுடைய மனைவி ஹன்னா தனது குழந்தைக்கு இந்தப் பெயர் வைத்தது அவள் முன்னம் வாக்குறுதி அளித்ததிலிருந்து விலகவில்லை என்பதையும், பைத்துல் முகத்தஸிற்கு பணிவிடை செய்யத் தகுதியான ஆண் குழந்தையாக இல்லாமற் போனாலும், அங்கிருந்து இறைவனை வணங்கிக் கொண்டேனும் இருக்கட்டும் என்பது அவளது விருப்பம் என்பதையும் இந்தப் பெயர் அறிவிக்கிறது.

இம்ரானுடைய மனைவி தனது கற்பத்தைக் குறித்து அல்லாஹு தஆலாவிடம் வாக்குறுதி அளித்திருந்ததாலும் "எடுத்தெரியப்பட்ட ஷைத்தானை விட்டு இவளையும் இவளது சந்ததியையும் உன்னிடம் காவல் தேடுகிறேன்" என்று துஆச் செய்ததாலும் இறைவன் மர்யம் ஸித்தீக்காவையும் அவரது புதல்வர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஷைத்தானை விட்டுக் காப்பாற்றிக் கொண்டான். இவ்விருவரையும் ஷைத்தான் தீண்டவில்லை.

فَتَقَبَّلَهَا رَبُّهَا بِقَبُولٍ حَسَنٍ وَّأَنۢبَتَهَا نَبَاتًا
حَسَنًا ۙ وَّكَفَّلَهَا زَكَرِيَّا ۖ كُلَّمَا دَخَلَ عَلَيْهَا زَكَرِيَّا
الْمِحْرَابَ وَجَدَ عِندَهَا رِزْقًا ۖ قَالَ يَٰمَرْيَمُ أَنَّىٰ
لَكِ هَٰذَا ۖ قَالَتْ هُوَ مِنْ عِندِ اللَّهِ ۖ إِنَّ اللَّهَ يَرْزُقُ
مَن يَشَاءُ بِغَيْرِ حِسَابٍ ﴿٣٧﴾

36. ஆகவே, அவளுடைய ரப்பு அ(ப்பெண் குழந்)தை(யை) நன்றாய் ஒப்புக் கொண்டு நல்ல வளர்ச்சியாக அதை வளரச் செய்து அ(தை வளர்ப்ப)தற்கு ஜக்கரியாவை பொறுப்பேற்கும்படி செய்தான். அவளிடத்தில் ஜக்கரியா (அவளிருந்த) மாடத்திற்கு வரும்போதெல்லாம், (மர்யமாகிய) அவளிடத்தில் (ஒரு)உணவு இருப்பதைப் பெற்றுக் கொள்வார் (அவர் அந்த உணவில் ஆச்சரியமடைந்தவராய்) மர்யமே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது என்று கேட்டார். (அதற்கு) இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்துள்ளது; நிச்சயமாக அல்லாஹ், அவன் நாடுகிறவர்களுக்குக் கணக்கின்றிக் கொடுப்பான் என்று (மர்யம்) கூறினாள்.

ரிவாயத்து:- மர்யம் ஸித்தீக்காவின் தாயார் அவர்கள் ஹளரத் மர்யம் ஸித்தீக்காவை ஒரு துணியில் சுற்றி பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலுக்குக் கொண்டு போய் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மக்களாகிய பாதிரியார்களிடம் வைத்து இதனை எடுத்துக் கொள்ளுங்களென்று கூறினாள். ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அந்தப் பாதிரியார்களுக்குத் தலைவராக இருந்த இம்ரானுடைய புதல்வியாக இருந்ததால் எல்லோரும் குழந்தையை எடுத்து வளர்க்க விருப்பமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால், ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அக்குழந்தையின் தாயாராகிய ஹன்னாவுடன் பிறந்த **ஈஷாஉ** என்பவளை மணந்திருந்ததால்

இக்குழந்தையை வளர்ப்பதற்கு நான்தான் அதிக உரிமை பெற்றிருக்கிறேன் என்று உரிமை கொண்டாடினார். இதன் காரணமாக திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்க்க வேண்டுமென்றும், எவருக்குச் சீட்டு விழுகிறதோ அவர் குழந்தையை வளர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டு உர்துன் நதிக்குச் சென்று, வஹி எழுதுகிற தங்கள் எழுதுகோலை தண்ணீரில் போட்டனர். எவருடைய எழுதுகோல் தண்ணீருக்குள் மூழ்காமல் மிதக்கிறதோ அவர்தான் குழந்தையை வளர்ப்பதென்று முடிவு செய்தனர். இந்தப் போட்டியில் 27 பேர் கலந்து கொண்டனர். ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களது எழுதுகோல் மட்டும்தான் மிதந்தது. இவ்வாறு மூன்று முறை போட்டுப் பார்த்தும் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய எழுதுகோல் மட்டும்தான் மிதந்ததால் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குழந்தையை வளர்ப்பதென முடிவு செய்யப்பட்டது.

குழந்தையை வளர்ப்பதற்காகப் பள்ளியிலேயே ஒரு மாளிகை கட்டி அதில் வைத்திருந்தார்கள். அந்த மாளிகைக்கு ஏழு தலைவாசல்களிருந்தன. அதற்குள் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மட்டும் செல்வார்கள். பின்னர் அங்கிருந்து வரும்போது அந்த ஏழு தலை வாசல்களையும் பூட்டி விடுவார்கள். இவ்வித நிலையில் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மர்யம் ஸித்தீக்காவிடம் செல்லும் போதெல்லாம் அங்கு கனி வர்க்கங்கள் முதலிய உணவுகள் இருப்பதைக் காண்பார்கள். கோடை காலம், வசந்தகாலம், மாரிகாலம், பனிகாலம் முதலிய எல்லாக் காலங்களிலும் கிடைக்கக் கூடிய கனிவர்க்கங்கள் அங்கிருப்பதைப் பார்த்து மர்யம் ஸித்தீக்கா அவர்களிடம் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "உனக்கு இவைகள் எங்கிருந்த வந்தன" வென்று விசாரிப்பார். அதற்கு எனது றப்பிடமிருந்து அடைந்தேன்" என்று மர்யம் ஸித்தீக்கா பதில் கூறுவார்கள்.

நிற்க, ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் தாய்ப்பால் அருந்தவுமில்லை. வேறு பெண்களிடம் முலையுண்ணவுமில்லை. ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் மிகவும் சிறிய குழந்தையாக

இருந்ததால் பேசுவதற்குச் சக்தி பெற்றிருக்கவுமில்லை. ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்ட கேள்வியை விளங்கிக் கொள்ளவும்,அதற்கு பதில் சொல்லவும் சக்தி பெற்றிருக்க வில்லை. இவ்வித நிலையில் ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் பேசியது அற்புதமேயாகும்.

நிற்க, சிறு குழந்தையாக இருந்த மர்யம் ஸித்தீக்கா அவர்கள் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்ட கேள்வியை உணர்ந்ததும் அதற்குப் பதிலளித்ததும், பூட்டப்பட்டுத் தனி அறையினுள் இருந்த மர்யம் ஸித்தீக்கா அவர்களுக்குக் கனி வர்க்கங்கள் முதலிய உணவுகள் வந்ததும், வெய்யிற் காலத்தில் கிடைக்கக் கூடிய கனிகள் மழை காலத்தில் கிடைத்துக் கொண்டிருந்ததும், மழை காலத்திற் கிடைக்கக் கூடிய கனிவர்க்கங்கள் வெய்யிற் காலத்தில் கிடைத்துக் கொண்டிருந்ததும் அற்புதங்களே யாகும். இதிலிருந்து வலிமார்களுக்கும் அற்புதச் செய்கைகள் நிகழுகின்றனவென்பது தெரிய வருகிறது.

هُنَالِكَ دَعَا زَكَرِيَّا رَبَّهُ ۖ قَالَ رَبِّ هَبْ لِي مِن
لَّدُنكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۖ إِنَّكَ سَمِيعُ الدُّعَاءِ ۝

37. "என்னுடைய ரப்பே! உன்னிடமிருந்து எனக்கு நல்ல சந்ததியை நன்கொடையாக அளிப்பாயாக! நிச்சயமாக நீதான் பிரார்த்தனையைக் கேட்பவன்" என்று அவ்விடத்திலேயே ஜக்கரிய்யா தன்னுடைய ரப்பிடம் பிரார்த்தித்தார்.

ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்களுடன் அந்த மிஹ்ராபுக்குள் இருக்கும்போதே ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆயத்தில் கண்டவாறு துஆச் செய்தார்கள்.

فَنَادَتْهُ الْمَلَائِكَةُ وَهُوَ قَائِمٌ يُصَلِّي فِي الْمِحْرَابِ

أَنَّ اللَّهَ يُبَشِّرُكَ بِيَحْيَىٰ مُصَدِّقًا بِكَلِمَةٍ مِّنَ
اللَّهِ وَسَيِّدًا وَحَصُورًا وَنَبِيًّا مِّنَ الصَّٰلِحِينَ ۝

38. ஆகவே, "அல்லாஹ்வில் நின்றுமுள்ள வார்த்தையை உண்மைப்படுத்துபவராகவும், தலைவராகவும், (பெண்களின் இச்சையை விட்டு) விலகிக் கொள்கிறவராகவும், நபியாகவும், நல்லவர்களில் உள்ளவராகவுமான யஹ்யாவை (உமக்குப் பிள்ளையாகக் கொடுப்பது) கொண்டு நிச்சயமாக அல்லாஹ் உமக்கு நற்செய்தி கூறுகிறான்" என்று அவர் மஸ்ஜிதில் தொழுதவராக நின்று கொண்டிருக்கும் போது அவருக்கு அமரர்கள் சப்தம் கொடுத்தார்கள்.

ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தாம் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹு தஆலாவின் நற்செய்தியை அறிவித்தார். ஆனால், ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மலக்குகளுக்குத் தலைவராக இருப்பதால் இங்கு மலக்குகள் அறிவித்தார்கள் என்று பன்மையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மிஹ்ராப் என்பதற்கு மஸ்ஜிது என்றும், மாளிகை என்றும் கருத்து. ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் இருந்த மாளிகை யிலேயே ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தொழுது கொண்டிருந்ததாகவும், அது சமயம் மேற்கண்டவாறு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நற்செய்தி சொன்னதாகவும் சொல்லப்படுகிறது. தவிர, பைத்துல் முகத்தஸ் பள்ளியில் தொழுது கொண்டிருந்த போது மேற்கண்ட சம்பவம் நிகழ்ந்ததாகவும் சிலர் கூறி இருக்கிறார்கள்.

ஸெய்யித் என்பதற்குத் தலைவர் என்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், மற்ற மனிதர்களைப் பார்க்கினும் கண்ணியத்தில் மேம்பட்டவர் என்பது கருத்து. ஏனெனில், இவர் ஒரு பாவமும் செய்யாதவர், பாவமான காரியத்தைச் செய்ய வேண்டும் என்று இவர் முயன்றதுமில்லை.

ஹஸூர் அதாவது தனது சுகத்தை அடக்கிக் கட்டுப்படுத்தியவர் பெண்களிடத்தில் பிரவேசிக்கச் சக்தியும் வசதியுமிருந்தும் தன் மனதை அடக்கிக் கொண்டவர். இவர் திருமணம் செய்திருந்தார். என்றும், திருமணம் செய்து காம இச்சையை அடக்கிக் கொண்டார் என்றும் சிலர் கூறி இருக்கிறார்கள்.

கலிமத்துன் மினல்லாஹி அதாவது அல்லாஹ்வில் நின்றுமுள்ள வார்த்தை என்பது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறிக்கிறது. ஏனெனில், இவர் தந்தையில்லாமல் "குன்" என்ற இறைவனின் வார்த்தையினால் மட்டுமே உற்பத்தியானவர்.

ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களது உபதேசத்தால் சபையினர் ஞான உயிர் பெற்றுக் கொள்பவர்களாக இருந்தனர். ஆதலின், இவருக்கு **யஹ்யா** என்ற பெயர் வந்தது. அன்றியும், இவரது அன்னையின் கற்பக்கோளறை இவரால் உயிர் பெற்றது என்பதற்காக இவருக்கு **யஹ்யா** என்ற பெயர் வந்தது என்றுங் கூறுவர். இவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை முதலாவதாக விசுவாசித்தார்.

ரிவாயத்து:- ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களது தாயார் ஈஷாஉ என்பவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது தாயாரான ஹளரத் மர்யம் ஸித்தீக்காவைக் கண்டபோது "நான் கருத்தரித்திருக்கிறேன் என்பதை நீ உணரவில்லையா?" என்று வினவினார். அதற்கு மறுமொழியாக அவர் "நானும் தரித்திருக்கிறேன் என்பதை நீ உணரவில்லையா?" என்று கூறினார். அப்பொழுது ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களது "தாயார் எனது வயிற்றிற்குள்ளிருப்பது உனது வயிற்றிற்குள்ளிருப்பதற்கு சுஜூது செய்வதாகக் கண்டேன்" என்று கூறினார். இதுதான் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை "உண்மைப்படுத்தி வைப்பவர்" என்பதற்கு விளக்கம். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்க்கினும் ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆறு மாதத்திற்கு மூத்தவர்கள். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹு தஆலா

வானுலகத்திற்கு உயர்த்திக் கொள்வதற்கு முன்னதாகவே யூதர்கள் ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொன்று விட்டனர்.

ரிவாயத்து:- ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிறு குழந்தையாக இருந்த காலத்தில் மற்றைய பிள்ளைகள் விளையாடுவதற்கு அழைத்ததற்கு "விளையாடுவதற்காக நம்மை அல்லாஹு தஆலா படைக்கவில்லை" என்று கூறி அவர்களுடன் விளையாட மறுத்து விட்டார்கள்.

قَالَ رَبِّ أَنَّىٰ يَكُونُ لِي غُلَامٌ وَقَدْ بَلَغَنِيَ الْكِبَرُ وَامْرَأَتِي عَاقِرٌ ۖ قَالَ كَذَٰلِكَ اللَّهُ يَفْعَلُ مَا يَشَاءُ ۝

39. (அதற்கு அவர்) "என் ரப்பே! எனக்கோ வயோதிகம் வந்து விட்டது; என் மனைவியோ மலடி, எங்ஙனம் எனக்குப் புதல்வன் உண்டாகுவான்?" என்று கூறினார். (அதற்கு அந்த அமரர்) "இம்மாதிரிதான் அல்லாஹ் நாடியதைச் செய்கிறான்" என்று கூறினார்.

சந்தான விருத்திக்கு வழக்கமாக ஏற்பட்ட வயதைக் கடந்து வயோதிகத்தை ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அடைந்து விட்டதால் இவ்வாறு கேட்டார்கள். ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தொண்ணூற்று ஒன்பது வயது என்றும், அவரது மனைவிக்கு தொண்ணூற்றெட்டு வயதென்றும் சொல்லப்படுகிறது. சிலர் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நூற்றி இரண்டு வயதிருந்ததாகவும், வேறு சிலர் நூற்றி இருபது வயதிருந்ததாகவும் சொல்லி இருக்கிறார்கள்.

قَالَ رَبِّ اجْعَل لِّي آيَةً ۖ قَالَ آيَتُكَ أَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلَاثَةَ أَيَّامٍ إِلَّا رَمْزًا ۗ وَاذْكُر

رَّبَّكَ كَثِيرًا وَسَبِّحْ بِالْعَشِيِّ وَالْإِبْكَارِ ۝

40. "என் ரப்பே! (அவ்வாறாயின்) எனக்கு ஒரு அடையாளத்தை ஏற்படுத்துவாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறினார். (அதற்கு) உமக்கு அடையாளமாவது மனிதர்களுடன் மூன்று தினங்கள் வரை சாடையாகவே தவிர நீர் பேசமாட்டீர். மேலும், நீர் உம்முடைய ரப்பை அதிகமாக ஜபித்துக் கொண்டிரும். இன்னும், நீர் காலையிலும், மாலையிலும், துதி செய்து கொண்டிரும் என்று (அல்லாஹ்) கூறினான்.

இறைவனளித்த இந்த அருட்கொடைக்கு ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறக்கும் வரை காத்திருக்காமல் கருத்தரித்த உடனேயே இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பது ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களது கருத்து. ஆதலின், கர்ப்பத்தில் சிசு தரிப்பது ஆரம்பத்தில் தெரியாது. ஆகையால் கர்ப்பம் தரித்ததைத் தெரிந்து கொள்வதற்கு ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அடையாளங் கேட்டார்கள். அதற்காக இறைவன் இந்த அடையாளத்தைக் கூறினான்.

ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கர்ப்பத்தில் வந்தவுடன் ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களது நாவை அல்லாஹு தஆலா தடுத்து விட்டான். ஆகவே அவர் உலக சம்மந்தமான காரியங்களைக் குறித்துப் பேச முடியாதவராக இருந்தார். ஆனால் அல்லாஹு தஆலாவுடைய திக்ரு முதலியவற்றைச் சொல்வதற்கு அவரது நா உபயோகமாகவே இருந்தது. நா இவ்வித நிலையிலிருந்தது பிரத்தியட்சமான அற்புதச் செய்கையாகும்.

"அல்லாஹு தஆலாவை நாவினால் இரைந்து சப்தமிட்டு திக்ரு செய்யாமல் மனதிற்குள் திக்ரு செய்ய வேண்டும்" என்று இதன் மூலம் கட்டளை யிட்டிருப்பதாகச் சிலர் கூறி இருக்கிறார்கள். ஏனெனில், அல்லாஹுதஆலாவுடைய மஅரிஃபத்து என்னும் கடலில் மூழ்குபவர்கள் ஆரம்பத்தில் சில காலம் வரை நாவினால் இரைந்து

திக்ரு செய்வார்கள். அப்புறம் அல்லாஹ்வின் திக்ரினால் அவர்களது இருதயத்தில் ஞானப் பிரகாசம் நிறைந்து விட்ட பின்னர் அவர்களது நா அடைபட்டு விடுகின்றது. கல்புடைய திக்ரு அதாவது இருதய ஜபம் மட்டும் எஞ்சி இருக்கின்றது. இதனால்தான் "எவர் அல்லாஹ்வை அறிந்தாரோ அவரது நா மழுங்கிவிடுகிறது" என்று பெரியோர்கள் கூறி இருக்கின்றனர். எனவே, ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நாவினால் திக்ரு செய்யாமல் இருதயத்தில் ஹுலூரியத்துடன் ஜபிக்கும் படி கட்டளை யிடப்பட்டிருக்கிறார்கள். இன்னும் மஅரிஃபத் என்பதானது இவ்விரண்டும் நிலையாயிருப்பதற்குப் பெயர்.

அறிந்துகொள்:- திக்ருகள் பல தரங்களில் இருக்கின்றன. திக்ருல் கல்பீ அதாவது மௌனமாக ஜபித்தல் மௌனமாக திக்ருச் செய்வதைப் பார்க்கினும் திக்ருல்லிஸான் அதாவது வெளிப்படையான ஜபம். இது குறைந்த அந்தஸ்திலிருக்கிறது.

ரிவாயத்து:- ஹளரத் ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் திக்ருகளில் உயர்ந்த படித்தரத்திற்கு வந்தபோது அவரிடத்தில் இப்லீஸ் வந்து "ஈஸாவே! அல்லாஹ்வை நீர் திக்ருச் செய்ய வேண்டும்" என்று கூறினான். இப்லீஸுடைய இயற்கை குணம் திக்ருச் செய்வதை விட்டு மனிதர்களை விலக்குவதாக இருக்க, திக்ரு செய்யும்படி ஒருவரைப் பார்த்து அவன் ஏவுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். எனவே, திக்ருல் கல்பை விட்டு திக்ருல்லிஸானுக்கு அவரை இறக்கி அவரைத் தவறும் படி செய்வதற்காக அவன் முயன்றான் என்பது பின்னர் வெளியாயிற்று. ஆகவே, அறிவுடையோர் இரவிலும் பகலிலும் அல்லாஹு தஆலாவை திக்ருச் செய்வது அவசியமாகும். ஏனெனில், மனதின் இச்சையை திக்ரு அகற்றுகிறது. அகத்தில் அதனை அகற்றிவிட்டால் அப்புறம் ஷைத்தானுக்குப் புறத்தில் வேலை இல்லை.

"திக்ருல்லிஸான் அதாவது நாவினால் திக்ருச் செய்வதன் மூலமாகத்தான் கல்புடைய திக்ரை நிரந்தரமாக வைப்பதை அடியான் அடைகிறான். தி ருக்குக் குணபாடுமிருக்கிறது. எனவே, அடியான் தனது நாவினாலுட கல்பினாலும் திக்ருச் செய்பவனாக ஆகிவிட்டால் அவன் தனது ஸுலூக்குடைய காரியத்தில் காமிலாகி விடுகிறான்"

என்று இமாம் குஷைரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَإِذْ قَالَتِ الْمَلَائِكَةُ يَا مَرْيَمُ إِنَّ اللَّهَ اصْطَفَاكِ
وَطَهَّرَكِ وَاصْطَفَاكِ عَلَىٰ نِسَاءِ الْعَالَمِينَ ۝

41. இன்னும், "மர்யமே! நிச்சயமாக உன்னை அல்லாஹ் தெரிந்தெடுத்திருக்கிறான்; இன்னும், உன்னை (ஆடவர் தொடுவதை விட்டுச் சுத்தப்படுத்தி இருக்கிறான்; உன்னை (உன் காலத்திலுள்ள) உலகத்துப் பெண்களைப் பார்க்கினும் (மேலாகத்) தெரிந்தெடுத் திருக்கின்றான்" என்று அமரர் கூறிய நாளை (நபியே எண்ணிப்பாரும்).

ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் மர்யம் ஸித்திக்காவுடன் பேசிய இந்த உரையாடல் நபிமார்களுக்கு அனுப்பப்படும் வஹி போன்றதன்று. ஏனெனில் **"மேலும் (நபியே) உமக்கு முன்னர் ஆடவர்களையே தவிர (வேறு எவரையும்) நபியாக நாம் அனுப்பவில்லை"** என்று ஸூரத்துன்னஹ்ல் 43 வது ஆயத்தில் கூறப்பட்டிருப்பதால் பெண்களுக்கு நுபுவ்வத்து கிடைக்கவில்லை என்பது இஜ்மாஉப்படி உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆதலின், மர்யம் ஸித்தீக்கா அவர்களது உயரிய பெருந்தன்மைகளை அங்கீகரித்து அவர்களுக்குக் கண்ணியத்தைக் கொடுப்பதற்காகவே இந்த உரையாடல் நிகழ்ந்ததே தவிர இது வஹியுமல்ல, வஹியினால் அறியப்படுகிற நுபுவ்வத்துமல்ல.

إِنَّ اللَّهَ اصْطَفَاكِ **நிச்சயமாக அல்லாஹ் உன்னைத் தெரிந்தெடுத்திருக்கிறான்** என்ற வசனம் ஹளரத் மர்யம் ஸித்தீக்காவை அல்லாஹுதஆலா அங்கீகரித்துக் கொண்டதையும், ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பொறுப்பேற்று வளர்க்கும்படி அவன் செய்ததையும், சுவர்க்கத்து உணவுகளை அளித்தது முதலியவற்றையும் குறிக்கிறது.

وَطَهَّرَكِ இன்னும் அவன் உன்னை சுத்தப்படுத்தி இருக்கிறான் என்பது குஃப்ரு, ஷிர்க்கு, கேவலமான செய்கைகள், தீய பழக்கங்கள் முதலியவைகள் இல்லாமலும், ஆடவர்களால் தீண்டப்படாமலும், மாதவிடாய் முதலியவைகள் இல்லாமலும் இருந்ததை அறிவிக்கிறது.

وَاصْطَفٰكِ عَلٰى نِسَآءِ الْعٰلَمِيْنَ இன்னும் உலகத்துப் பெண்களைப் பார்க்கினும் (மேலாகத்) தெரிந்தெடுத்துக் கொண்டான் என்பது ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைத் தந்தையில்லாமல் அவரது வயிற்றிலிருந்து பிறக்கும்படி செய்ததை அறிவிக்கிறது. இவ்விதமான அருட்கொடை இவ்வுலகில் வேறெந்த பெண்ணுக்கும் கிடைக்கவில்லை.

يٰمَرْيَمُ اقْنُتِيْ لِرَبِّكِ وَاسْجُدِيْ وَارْكَعِيْ مَعَ الرّٰكِعِيْنَ ۝

42. (ஆதலால்) "மர்யமே! நீ உன்னுடைய ரப்புக்குக் கீழ்ப்படிந்து சுஜூது செய்வீராக; இன்னும், (தொழுகையில் அவனை) குனிந்து வணங்குபவர்களுடன் நீயும் குனிந்து வணங்குவீராக" (என்றும் அந்த அமரர் கூறினார்).

ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் இக்கட்டளைகளைப் பெற்ற பின் தொழுகையில் அதிகநேரம் நிற்பதுண்டு, இதனால் அவ்வம்மையின் கால்களில் இரத்தம் சுறந்து வீங்கி விடுவது வழக்கம்.

தொழுகையில் ருக்கூ உக்குப் பின் சுஜூது ஏற்பட்டிருக்க இங்கு முதலில் சுஜூதைக் கூறி இருப்பதற்குக் காரணம், தொழுகையிலுள்ள ருக்னுகளில் சுஜூது மிகவும் மேலானதாக இருப்பதனாலேயாகும். அல்லது அக்காலத்திலிருந்த ஷரீஅத்தில் முதலில் சுஜூதும் அப்புறம் ருக்கூஉம் ஏற்பட்டிருக்கலாம்.

وَارْكَعِيْ مَعَ الرّٰكِعِيْنَ இன்னும் (தொழுகையில் அவனை) குனிந்து வணங்குபவர் களுடன் நீயும் குனிந்து வணங்குவீராக என்றது ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் இமாம் ஜமாஅத்தாகத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்று கட்டளையிடப் பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறது. சுஜூது செய்பவர்களுடன் சேர்ந்து சுஜூது செய்வாயாக என்று கூறாமல் ருக்கூவைக் குறித்துச் சொன்னது ருக்கூஉவில் சேரத் தவறிவிட்டால் அந்த ரக்அத்தில் இமாம் ஜமாஅத்தாகத் தொழுததாக ஏற்பட மாட்டாது என்பதனாலே யாகும்.

ذٰلِكَ مِنْ اَنْۢبَآءِ الْغَيْبِ نُوْحِيْهِ اِلَيْكَ ؕ وَمَا كُنْتَ لَدَيْهِمْ اِذْ يُلْقُوْنَ اَقْلَامَهُمْ اَيُّهُمْ يَكْفُلُ مَرْيَمَ ۪ وَمَا كُنْتَ لَدَيْهِمْ اِذْ يَخْتَصِمُوْنَ ۝

43. (நபியே மர்யம், யஹ்யா ஆகியவர்களின் விஷயங்களான) இது மறைவான விஷயங்களில் நின்றுமுள்ளதாகும். இதை உமக்கு அறிவிக்கின்றோம். மேலும், மர்யமுக்குப் பொறுப்பேற்றுக் கொள்பவர் யார் என்பதில் (யூதப் பாதிரிகள்) தங்களின் எழுதுகோல்களை (எடுத்துத் தண்ணீரில்) போட்ட போது நீர் அவர்களிடத்தில் இருக்கவுமில்லை. இன்னும் (மர்யமைப் போஷிப்பதில் ஒவ்வொருவரும் முன்வந்து தங்களுக்குள்) சச்சரவு செய்து கொண்டிருந்த சமயத்திலும் நீர் அவர்களுடன் இருக்கவில்லை.

தாலிக்க (அதாவது இது) என்றதற்கு இம்ரானுடைய மனைவியான ஹன்னா, அவரது புதல்வியான மர்யம் ஸித்தீக்கா, அவரது சிறிய தாயின் கணவரான ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ் ஸலாம், அவரது புதல்வரான ஹளரத் யஹ்யா அலைஹிஸ்ஸலாம், மர்யம் ஸித்தீக்காவின் புதல்வரான ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்களைக் குறித்த செய்தி என்பது கருத்து. இவற்றை நேரில் பார்த்திருக்க வேண்டும், அல்லது புத்தகத்தில் படித்திருக்க வேண்டும், அல்லது அல்லாஹு தஆலாவால் அறிவிக்கப்பட்ட வஹியின் மூலமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் அக்காலத்தில் இல்லாததால் நேரில் பார்க்க முடியாது, உம்மியாக இருந்ததால் புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ள முடியாது, உலகிலுள்ள மனிதரில் எவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆசிரியராக இல்லாததால் பிறர் சொல்லிக் கொடுக்கக் கற்றுக் கொள்ளவுமில்லை. ஆகவே, நான்காவதாகிய வஹியின் மூலமாக அறிவிப்பது மட்டும்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்குரிய முறையாக இருக்கிறது.

إِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ يٰمَرْيَمُ اِنَّ اللّٰهَ يُبَشِّرُكِ بِكَلِمَةٍ
مِّنْهُ ۖ اسْمُهُ الْمَسِيْحُ عِيْسَى ابْنُ مَرْيَمَ وَجِيْهًا
فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ وَمِنَ الْمُقَرَّبِيْنَ ۙ

44. "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிலிருந்து ஒரு வார்த்தை (ஒரு குழந்தை) யை உனக்கு நற்செய்தி கூறுகிறான். அவருடைய பெயர் இம்மையிலும் மறுமையிலும் பெருமை யுடையவராகிய மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹ் என்பதாகும்; இன்னும், அவர் (அல்லாஹ்விடம்) நெருங்கியவர்களில் உள்ளவராக இருப்பார்" என்று அமரர் கூறியபோது,

கலிமத் என்பதற்கு சொல், பதம், வார்த்தை என்பன பொருள்கள். இந்த இடத்தில் கலிமத் என்ற சொல்லைக் கொண்டு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நாடப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், எல்லாபொருட்களும் சிருஷ்டிக்கப்படுவதற்கு அசல் காரணமாக உள்ளது அல்லாஹுத்தஆலாவின் "குன்" அதாவது நீ உண்டாகு என்ற வார்த்தையாகவே இருந்தாலும் அவைகள் உற்பத்தியாகுவதற்குப் புறத்திலும் காரணங்கள் இருக்கின்றன. முக்கியமாக ஜீவ வர்க்கத்திற்கு தாய், தந்தை ஆகியவர்கள் முக்கிய காரணமாக இருக்கிறார்கள். ஆனால் ஹளரத் ஈஸா அலைஹிஸ்

ஸலாம் அவர்களுக்கு இவ்விருவரில் தாய் மட்டும்தான் இருக்கிறாரே யன்றி தந்தை இல்லை. தந்தை இல்லாமல் கருக்கூடுவது மனித வர்க்கத்தில் வழக்கமாக இல்லாததால் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது உற்பத்திக்கு வழக்கமாக ஏற்பட்ட புறக்காரணம் இல்லாததால் "கலிமத்" என்ற அகக் காரணத்தை மட்டும் சொல்லப்பட்டது. அல்லாமலும், காரணத்தைக் கூறி காரியத்தை நாடும் அறபி இலக்கியத்தின் சட்ட வழக்கத்தை யொட்டி ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை, அவர்களது உற்பத்திக்குரிய காரணத்தைக் கூறி நாடப்பட்டிருக்கிறது.

அல்மஸீஹ் என்பது கௌரவமான சிறப்புப் பெயர்களில் ஒன்று. சஞ்சாரி என்றும், தடவுபவர் என்றும் இதற்குப் பொருள். ஹீப்ரு மொழியில் மஷீஹா என்ற சொல்லிலிருந்து இது மருவியது. ஹீப்ரு மொழியில் முபாரக்கானவர், புனிதர் என்பன பொருள்கள்.

وَجِيْهًا فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ **இம்மையிலும் மறுமையிலும் சிறப்பிக்கப்பட்டவர்** என்பது இவ்வுலகில் நபித்துவத்தை யடைந்தார், மனிதர்களுக்கு முன்னிலை வகிப்பவரானவர் என்பதையும், மறுமையில் தம்முடைய உண்மை சிஷ்யர்களுக்கு ஷஃபாஅத்துச் செய்வார் என்பதையும், சுவர்க்கத்தில் பெரும் பதவியை அடைவார் என்பதையும் அறிவிக்கிறது.

وَيُكَلِّمُ النَّاسَ فِى الْمَهْدِ وَكَهْلًا وَّمِنَ
الصّٰلِحِيْنَ ۝

45. மேலும், அவர் மடியில் குழந்தையாயிருக்கும் போதிலும் நடு வயதிலும் மனிதர்களிடத்தில் பேசுவார். இன்னும், நல்ல அடியார்களில் உள்ளவராகவும் இருப்பார் (என்றும் அந்த அமரர் கூறினார்).

சிறு குழந்தைகளும் கூட வாய் பேச முடியாவிடினும் ஊ ஊ என்று பேசுவதுண்டு. இம்மாதிரி பேசுவதை இங்கு குறிப்பிடவில்லை.

நபிமார்கள் பேசும் பேச்சுக்களை அவர் குழந்தையாயிருக்கும் போதும் நடுவயது வந்த போதும் பேசுவார் என்பதும் இவ்விரு காலத்திலும் எந்தவித வித்தியாசமுமிருக்காது என்பதும் கருத்து. இவ்வாறு பேசியது முஅஜிஸா என்பதிற் சந்தேகமில்லை என்று **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** சொல்லப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- "நானும் ஈஸாவும் தனிமையிலிருக்கும் போது அவர் என்னுடன் பேசுவார், நானும் அவருடன் பேசுவேன், ஆனால், வேறு ஒரு மனிதர் என்னுடன் இருப்பாராயின் எனது வயிற்றிற்குள் அவர் தஸ்பீஹ் செய்வார். அதனை நான் செவியேற்பேன்", என்று ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் கூறியதாக முஜாஹிது ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்பவர் கூறி இருக்கிறார்.

ரிவாயத்து:- ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முப்பது வயதான போது அவரை பனூ இஸ்ராயீல்களுக்கு இறைவன் நபியாக அனுப்பினான். அவர் நபியாக முப்பது மாதம் இருந்தார். பின்னர், வானத்தின் பால் உயர்த்தப்பட்டார். மற்றொரு சொற்படி ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முப்பதாவது வயதின் ஆரம்பத்தில் வஹி வந்தது. அவர் தமது நபித்துவத்தில் மூன்று வருடங்களும் சில மாதங்களும் இருந்தார். பின்னர் உயர்த்தப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அல்கஹ்லு என்பது முப்பதிற்கு மேற்பட்டு நாற்பது வயது வரையுள்ள காலத்திற்குப் பெயர். இந்த அர்த்தத்தின்படி அவர் கஹுலத்தை அடைந்து விட்டதாகவும் இந்த ஆயத்திற் சொல்லப்பட்டபடி மனிதர்களிடம் நடு வயதில் பேசியதாகவும் பின்னர் உயர்த்தப் பட்டதாகவும் ஏற்படுகிறது. ஆனால், நாற்பது வயதுதான் கஹுலத்திற்கு ஆரம்பகாலம் என்று சிலர் கூறி இருக்கிறார்கள். இவர்களது இக்கருத்துப்படி ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இளைஞராக இருக்கும் போதே வானுலகிற்கு உயர்த்தப்பட்டதாகவும் கடைசி காலத்தில் அவர் வானுலகிலிருந்து இறங்கியபின் கஹுலத்தான காலம் வரை உயிருடனிருந்து இந்த ஆயத்திற் சொல்லப்பட்டபடி மனிதர்களிடம் பேசுவார் என்றும் ஏற்படுகிறது.

قَالَتْ رَبِّ اَنّٰى يَكُوْنُ لِىْ وَلَدٌ وَّلَمْ يَمْسَسْنِىْ
بَشَرٌ ؕ قَالَ كَذٰلِكِ اللّٰهُ يَخْلُقُ مَا يَشَآءُ ؕ اِذَا قَضٰٓى
اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ ۝

46. அதற்கு, "என் ரப்பே! என்னை எந்த மனிதரும் தீண்டாமலிருக்க, எனக்கு எங்ஙனம் குழந்தை உண்டாகும் என்று (மர்யம்) கூறினாள்: (அதற்கு) "இம்மாதிரிதான் அல்லாஹ், தான் நாடுவதைச் சிருஷ்டிக்கிறான். ஒரு காரியத்தை அவன் கற்பனை செய்தால் அதற்கு அவன் ஆகுக என்றுதான் கூறுகிறான்; அது ஆகிவிடுகிறது" என்று (அந்த அமரர்) கூறினார்.

ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் எத்துணை உன்னத நிலையிலிருந்தாலும் மனிதப்பிறவியாவார். ஆதலால் தமக்குப் புதல்வர் பிறக்கப் போவதைக் குறித்து ஆச்சரியமடைந்தார். ஏனெனில், தமக்கு திருமணமில்லை. கன்னிப் பெண்ணாக இருக்கிற ஒருத்தி தந்தையின்றி குழந்தையைப் பிரசவிப்பது எவ்வாறு நிகழும்? உலகில் ஆண் பெண்ணின் சங்கமத்தாலன்றோ சந்தான விருத்தி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்க கணவனின்றி கற்பம் தரித்துக் குழந்தையைப் பெறுவது எப்படி? என்று இறைவனிடம் பிரார்த்தித்ததும், அதற்கு இறைவனளித்த பதிலும் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

وَلَمْ يَمْسَسْنِىْ بَشَرٌ **என்னை எந்த மனிதரும் தீண்டாமலிருக்க** என்ற இவ்வசனம் சாதாரணமாக ஒரு பெண்ணை ஒரு ஆடவன் தொடுவதைக் குறித்ததன்று. இவ்வாக்கியம் ஆண் பெண்ணுடைய சங்கமத்தைக் குறித்துச் சொல்லப்பட்டதாகும்.

ரிவாயத்து:- மர்யம் ஸித்தீக்கா அவர்கள் தமது மாளிகையாகிய மிஹ்ராபில் திரைக்கப்பால் வசித்து வந்தார்கள்.

இந்நிலையில் ஒருநாள் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வெண்ணிற ஆடை அணிந்த அழகிய இளைஞராக மர்யம் ஸித்தீக்கா அவர்கள் முன் தோன்றினார்கள். இவ்வுருவத்தைப் பார்த்தவுடன் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் (சாமான்ய மனிதர் கெட்ட எண்ணத்துடன் வந்திருப்பதாக எண்ணிக் கொண்டு) அவரை நோக்கி "மனிதனே! உம்மை விட்டு என்னைக் காப்பாற்றும்படி இறைவனிடம் காவல் தேடுகிறேன்" என்று கூறினார். பின்னர், ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மர்யம் ஸித்தீக்கா அவர்களது சட்டைக்குள் ஊதினார்கள். அது கற்பகோளறையிற் சென்றது (அதாவது அதற்குப் பின் கருத்தரித்தது).

மர்யம் ஸித்தீக்காவுக்கு உறவினரான யூசுஃப் நஜ்ஜார் என்பவர் கர்ப்பந்தரித்திருப்பதைப் பார்த்து இதற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தார். ஏனெனில், ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் கூடா ஒழுக்கமுள்ள பெண் என்று எண்ணுவதற்கு இடமில்லை. ஆடவரில்லாமல் கருத்தரிப்பதற்கு இடமில்லை என்ற எண்ணத்தால் ஹளரத் மர்யம் ஸித்தீக்காவை நோக்கி "என் மனத்திலொன்றிருக்கிறது, அதனை மறைப்பதைப் பார்க்கினும் வெளிப்படையாகக் கேட்பது என் மனதிற்கு அதிகத் தூய்மையாகும்" என்று கூறினார். அதற்கு மர்யம் ஸித்தீக்கா "கேளுங்கள்" என்று கூறினார்கள். அதற்கு அவர் "வித்தில்லாமல் பயிர் உண்டாகுமா?" என்றார். அதற்கு மர்யம் ஸித்தீக்கா "ஆம், உண்டாகும்" என்று கூறினார். பின்னர், "ஆணில்லாமல் பிள்ளை உண்டாகுமா?" என்றார். அதற்கு மர்யம் ஸித்தீக்கா "ஆம் என்று கூறி அல்லாஹு தஆலா முதலாவதாகப் பயிரை உண்டாக்கிய போது வித்தில்லாமற்றான் பயிரை உண்டாக்கினான். அப்பொழுது வித்து இறைவன் உண்டாக்கிய பயிரிலிருந்துதான் உண்டாயிற்று. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் ஆகிய இருவரையும் அல்லாஹு தஆலா எந்த ஆணிலிருந்தேனும் அல்லது பெண்ணிலிருந்தேனும் சிருஷ்டித்தானா என்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள்" என்றுங் கூறினார். அப்பொழுது யூஸுப் நஜ்ஜார் விஷயத்தை உணர்ந்து கொண்டு "இறைவன் மர்யம் ஸித்தீக்காவைக்

கண்ணியப்படுத்துவதற்காகச் செய்துள்ள காரியம்" என்று தெரிந்து கொண்டார்.

وَيُعَلِّمُهُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَالتَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ ۚ

47. இன்னும், எழுத்தையும், ஞானத்தையும், தவ்ராத் (வேதத்)தையும், இஞ்ஜீலையும் அவருக்குக் கற்றுக் கொடுத்தான்.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அக்காலத்தில் மிகவும் திறமையான எழுத்தாளராக (காத்திபாக) இருந்தார்கள். தவ்ராத், இன்ஜீல் ஆகிய இரண்டு வேதங்களும் மனனமாக இருந்தன. தவிரவும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தாய் வயிற்றிற்குள் சிசுவாக இருந்த காலத்திலேயே தாய் தனித்திருக்கும் போது தாய் காதில் விழும்படி தவ்ராத் வேதத்தை ஓதுவார்கள் என்று ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

وَرَسُوْلًا اِلٰى بَنِىْٓ اِسْرَآءِيْلَ ۙ اَنِّىْ قَدْ جِئْتُكُمْ بِاٰيَةٍ
مِّنْ رَّبِّكُمْ ۙ اَنِّىْٓ اَخْلُقُ لَكُمْ مِّنَ الطِّيْنِ كَهَيْـَٔةِ
الطَّيْرِ فَاَنْفُخُ فِيْهِ فَيَكُوْنُ طَيْرًا ۢ بِاِذْنِ اللّٰهِ ۚ
وَاُبْرِئُ الْاَكْمَهَ وَالْاَبْرَصَ وَاُحْىِ الْمَوْتٰى بِاِذْنِ اللّٰهِ ۚ
وَاُنَبِّئُكُمْ بِمَا تَاْكُلُوْنَ وَمَا تَدَّخِرُوْنَ ۙ فِىْ
بُيُوْتِكُمْ ۚ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيَةً لَّكُمْ اِنْ كُنْتُمْ
مُّؤْمِنِيْنَ ۚ

48. இன்னும், இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு (அவரைத்) தூதராகவும் (அனுப்புவான் என்றும்) அவ்வானவர் கூறினார். பின்பு ஈஸா (அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ்வின் தூதராக வந்தபோது) "உங்களுக்கு நான் நிச்சயமாக உங்கள் ரப்பிடத்திலிருந்து ஒரு அத்தாட்சியைக் கொண்டு வந்திருக்கிறேன்; நிச்சயமாக நான் உங்களுக்குக் களிமண்ணிலிருந்து பறவையின் உருவம்போல் அமைத்து அதில் நான் ஊதுவேன். உடனே அது அல்லாஹ்வின் கட்டளையால் பறக்கின்றதாக ஆகிவிடும். இன்னும், நான் பிறவிக் குருடனையும் வெண்குஷ்டரோகியையும் சுகப்படுத்துவேன்; இன்னும், அல்லாஹ்வின் கட்டளைப்படி இறந்தவர்களை உயிர்ப்பிப்பேன், இன்னும், உங்கள் வீடுகளில் நீங்கள் சேமித்து வைத்திருப்பதையும்; நீங்கள் புசிப்பவற்றையும் உங்களுக்கு அறிவிப்பேன்; நீங்கள் விசுவாசிகளாக இருந்தால் (நான் அல்லாஹ்வின் தூதன் என்பதற்கு) இவற்றில் நிச்சயமாக உங்களுக்கு அத்தாட்சி இருக்கிறது.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ராயீல்களுக்கு நபியாக அனுப்பப்பட்டிருந்தார்கள். பனூ இஸ்ராயீல்களிலும் குறிப்பிட்ட சில கூட்டத்தாருக்கு மட்டும் அவர் நபியாக இருந்தார் என்றும் சில யூதர்கள் கூறி இருக்கிறார்கள். ஹளரத் யஃகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது புதல்வரான ஹளரத் யூஸுஃபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தாம் பனூ இஸ்ராயீல்களில் முதலாவது நபி. ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ராயீல்களில் கடைசி நபியாவார்கள்.

اَنِّيْٓ اَخْلُقُ **நிச்சயமாக நான் அமைப்பேன்** என்ற வசனத்திலுள்ள **அக்லுகு** என்ற பதத்திற்கு நான் சிருஷ்டிப்பேன் என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால், சிருஷ்டிக்கும் தொழில் சிருஷ்டிக்கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவிற்கு மட்டும் சொந்தமாக இருப்பதால் அடியார்களுக்கு அந்தப் பொருள் பொருத்தமானதல்ல. ஆகவே, அடியார்களைப் பற்றி அப்பதம் உபயோகிக்கப்படும் போது அமைப்பேன், செய்வேன் என்பன போன்ற அர்த்தங்கள் செய்வது அவசியமாகும்.

ரிவாயத்து:- "ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமக்கு நபித்துவம் கிடைத்திருப்பதாகக் கூறி தம்மை மனிதர்கள் பின்பற்ற வேண்டும் என்று அழைத்து அவர்களிடம் அற்புதச் செய்கைகளையும் காண்பித்தபோது வௌவாலை உண்டாக்க வேண்டும் என்று அந்த மனிதர்கள் அவரைக் கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது அவர் களிமண்ணை எடுத்து அதில் வௌவால் போன்ற உருவத்தைச் செய்து பின்னர் அதில் ஊதினார். அப்பொழுது அது வானத்திற்கும் பூமிக்குமிடையில் அந்தரத்தில் பறந்தது".

"மனிதர்கள் அதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் வரையில்தான் அது பறந்து கொண்டிருக்கும், மனிதர்களது கண்ணுக்கு அது மறைந்தவுடன் அது செத்து விழுந்துவிடும். ஏனெனில், சிருஷ்டிகர்த்தாவின் செய்கைக்கும் சிருஷ்டிப் பொருளின் செய்கைக்கு மிடையில் வித்தியாசமிருக்க வேண்டும் என்பதற்காக இப்படி நிகழ்ந்தது" என்று வஹப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

வௌவாலை உண்டாக்க வேண்டும் என்று மனிதர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கேட்டது அது எல்லா சிருஷ்டிகளிலும் மிக நூதனமானது என்பதற்காகவேயாகும். அது இரத்தமும் சதையும் கொண்ட பிராணி. இறக்கை யில்லாமல் பறக்கிறது. மிருகங்கள் குட்டி போடுவது போல் குட்டி போடுகிறது. பறவைகள் முட்டையிடுவது போல் முட்டையிடுவதில்லை. அதற்கு மடுவு இருக்கிறது. அதிலிருந்து பால் வெளியாகிறது. அது சூரிய வெளிச்சத்தை பார்க்கவும் முடியாது. இருண்ட இருளிலும் கண் தெரியாது. சூரியன் மறைவுக்குப் பிறகு ஒரு மணி நேரம்தான் அது பார்க்க முடியும். மனிதன் சிரிப்பது போல் அது சிரிக்கும், அதற்குப் பற்களுமுண்டு, பெண்களுக்கு மாதவிடாய் வருவதுபோல் அதற்கு மாதவிடாயும் வரும்.

அல்அக்மஹ் அதாவது பிறக்கும் போதே குருடராகப் பிறப்பவர், **அல்அப்ரஸ்** அதாவது வெண் குஷ்டரோகி இவ்விரு வியாதிகளுக்கும் மருந்தில்லை. மருத்துவர்கள் இந்த நோய்கள்

உள்ளவர்களைக் குணப்படுத்த இயலுவதில்லை. அக்காலத்தில் மருத்துவக் கல்வி மிக உச்ச ஸ்தானத்தை அடைந்திருந்தது. இவ்விரு வியாதிகளையும் குறித்து மனிதர்கள் மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்ட போது ஹக்கீம் ஜாலினூஸும் அவருடைய நண்பர்களும் பிறவிக் குருடர்கள் மருத்துவத்தால் குணமடைய மாட்டார்கள். வெண் குஷ்டமும் முதிர்ந்து விட்டால் மருத்துவத்தால் நீங்காது என்று கூறினர். எனவே, ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் பிறவிக் குருடரையும் வெண் குஷ்டரோகியையும் மனிதர்கள் அழைத்து வந்தனர். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனைப் பிரார்த்தித்த பின்னர் அவ்விருவரையும் தமது கரங்களால் தடவினார்கள். உடனே அவ்விருவரும் குணமடைந்தனர். இதனைக் கண்ட சிலர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை விசுவாசித்தனர், மற்றவர்கள் நிராகரித்து சூனியக்காரர் என்று கூறினர். இவ்விதமான நோயாளி களில் ஐம்பதாயிரம் பேரை ஒரே நாளில் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் குணப்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது.

وَأُحْيِ الْمَوْتَىٰ بِإِذْنِ اللَّهِ **இன்னும் அல்லாஹ்வின் கட்டளைப் படி மரணித்தவர்களை உயிர்ப்பிப்பேன்** என்ற இவ்வசனத்திற்கு விபரமாவது, மரணித்தவர் களை உயிர்ப்பிப்பதைக் குறித்து மனிதர்கள் ஹக்கீம் ஜாலீனூஸை விசாரித்தார்கள். அதற்கு அவர் "மரணித்தவர்கள் சிகிச்சை செய்வதன் மூலம் உயிர்பெறமாட்டார்கள். ஆகவே, அவர் மரணித்தவர் களை உயிர்ப்பிப்பாராயின் அவர் நபிதான், மருத்துவர் அல்லர்" என்று கூறினார். ஆகவே, மரணித்தவர்களை உயிர்ப்பிக்கும்படி அவர்கள் கூறினர். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்வேண்டு கோளுக்கிசைந்து நான்கு பேரை உயிர்ப்பித்தார்கள்.

இவர்களிலொருவர் **ஆஜர்** என்பவர். இவர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது நண்பர்களில் ஒருவர். எனவே, மரணித்த ஆஜருடைய சகோதரி ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அனுப்பப்பட்டாள். அவள் மரணச் செய்தியை அறிவித்ததன் பேரில் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவரை அடக்கஞ் செய்திருந்த கப்ருக்குச் சென்று, (நாயனே! ஏழு

வானங்களுக்கும் ஏழு பூமிகளுக்கும் றப்பானவனே! பனூ இஸ்ராயீல்கள் பால் உனது மார்க்கத்தில் அவர்களை நான் அழைப்பதற்காகவும், மரணித்தவர்களை நான் உயிர்ப்பிப்பேன் என்று அவர்களுக்கு நான் அறிவிப்பதற்காகவும் என்னை நீ ரசூலாக அனுப்பினாய். ஆகவே, ஆஜரை நீ உயிர்ப்பிப்பாயாக) என்று துஆச் செய்தார். உடனே, ஆஜர் உயிர் பெற்றெழுந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாட்களாகி விட்டபடியால் அவரது உடலிலிருந்து ஊன் வடிந்து கொண்டிருந்தது. பின்னர் அவர் சில காலம் உயிருடனிருந்து குழந்தையையும் பெற்றார்.

மற்றொருவர் ஒரு வயோதிக பெண்ணின் புதல்வர். இவரை அடக்கம் செய்வதற்காக ஜனாஸாவில் வைத்துக் கொண்டு போனார்கள். அப்பொழுது ஹளரத் ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவரை உயிர்ப்பிக்கும்படி துஆச் செய்ததன் காரணமாக அவர் உயிர்பெற்று அக்கட்டிலின் மீது எழுந்து உட்கார்ந்தார். பிறகு அவர் தமது உடையை அணிந்து அக்கட்டிலைச் சுமந்து கொண்டு தமது வீட்டிற்குத் திரும்ப வந்து சில காலம் உயிருடனிருந்ததுடன் குழந்தையையும் பெற்றார்.

இன்னொருவள் சுங்கவரி வாங்குபவனின் புதல்வி. இவளும் மரணித்த பின் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது துஆவினால் உயிர் பெற்றுச் சில காலமிருந்து குழந்தையையும் பிரசவித்தாள்.

இவ்வாறு உயிர்ப்பித்ததைக் கண்ட அந்த மனிதர்கள் சமீப காலத்தில் மரண மடைந்தவர்களை உயிர்ப்பிக்கிறார். இவர்கள் உண்மையாகவே மரணமடையாமல் ஸத்தா என்ற ஒருவகை நோயால் மரணித்தவர்களைப் போல் இருந்திருக்கக் கூடும். இவர்களுக்கிருந்த நோயின் நுட்பத்தை உணர்ந்து அவர் சிகிச்சை செய்திருக்கக் கூடும். ஆதலால், நீண்ட காலத்திற்கு முன் இறந்தவரை உயிர்ப்பிக்கும்படி கூறவேண்டும் என்று முடிவு செய்து ஹளரத் நூஹு அலைஹிஸ் ஸலாம் அவர்களது புதல்வரான ஸாம் என்பவரை உயிர்ப்பிக்கும்படி கூறினார்கள். அவரை அடக்கிய இடத்தைக் காண்பிக்கும்படி செய்து

இஸ்முல் அஃலமை ஓதி துஆச் செய்ததன் காரணமாக அவர் உயிர் பெற்று கப்ரை விட்டு எழும்பினார். ஆனால், அவரது தலை நறைத்திருந்தது. அதனைக் குறித்து ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் "தங்களது தலை நறைத்தது எப்படி? உங்கள் காலத்தில் நறை இருக்கவில்லையே" என்று விசாரித்தார்கள். அதற்கவர் "ரூஹுல்லாவே! என்னைத் தாங்கள் அழைத்த போது ரூஹுல்லாவிற்கு நீ பதிற் சொல் என்று ஒரு சப்தத்தைச் செவியேற்றேன். கியாமத்து நாள் வந்து விட்டதோ வென்று நான் எண்ணிப் பயந்ததால் எனது தலை நறைத்து விட்டது" என்று கூறினார். பின்னர், உயிர் கைப்பற்றுவதைப் பற்றி அவரிடம் வினவியபோது "அப்பொழுதேற்பட்ட கசப்பு என் தொண்டைக் குழியை விட்டு இன்னமும் போக வில்லை" என்று கூறினார். பிறகு அங்கிருந்த மனிதர்களை நோக்கி "இவர் நபி இவரை நீங்கள் உண்மைப் படுத்துங்கள்" என்று கூறினார். அதன் காரணமாக சிலர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை விசுவாசித்தார்கள். மற்றவர்கள் நிராகரித்தனர். பின்னர், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவரை மரணித்து விடும்படி கூறினார்கள். அதற்கவர் தமக்கு மரணத்தின் வேதனை திரும்பவும் வரக்கூடாதென்று கேட்டுக் கொண்டார். அப்பொழுது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் துஆச் செய்தார்கள்.

மீண்டும் அந்த மனிதர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் அற்புதங்களைக் காண்பிக்கும்படி வேண்டினர். அப்போது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் وَأُنَبِّئُكُم بِمَا تَأْكُلُونَ وَمَا تَدَّخِرُونَ فِي بُيُوتِكُمْ **மேலும் உங்களது வீடுகளில் நீங்கள் உண்பதையும் நீங்கள் சேமித்து வைக்கிறதையும் உங்களுக்கு நான் அறிவிப்பேன்** என்று கூறினார்கள். எனவே, மனிதர்கள் இதற்கு முன் உண்டதையும், இனிமேல் உண்ணப் போவதையும் கூறுவார்கள். மத்ரஸாவில் ஓதுகிற பிள்ளைகளிடம் அவர்களுடைய வீடுகளில் செய்கிறதையும் அவர்கள் உண்பதையும் சொல்லுவார்கள். குழந்தைகள் மத்ரஸாவை விட்டு வீட்டிற்குச் செல்லும் போது அங்குள்ளவர்களிடம் அந்தப் பொருட்களைக் கேட்டு அழுது

தொந்தரவு செய்து வாங்கி உண்பார்கள். இதனைக் கண்ட அந்த குழந்தைகளின் பெற்றோர்கள் "அந்தச் சூனியக்காரருடன் நீங்கள் விளையாட வேண்டாம்" என்று கூறி ஒரு நாள் அவர்கள் எல்லோரையும் ஒரு வீட்டிற்குள் அடைத்துப் பூட்டி ஒழித்து வைத்துக் கொண்டார்கள். ஹளரத ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அக்குழந்தைகளைத் தேடிக் கொண்டு அங்கு சென்றார்கள். அங்குள்ளவர்கள் "பிள்ளைகள் இங்கில்லை" என்று கூறினார்கள். அதற்கு அவர் "அந்த வீட்டிற்குள் இருப்பவர்கள் யார்?" என்று வினவினார். அதற்கு அவர்கள் "பன்றிகள்" என்று கூறினார்கள். அதற்கு ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "அப்படியே ஆகுக" என்று கூறிவிட்டு வந்தார்கள். அந்த வீட்டைத் திறந்து பார்த்த போது அங்கு பன்றிகள் இருக்கக் கண்டார்கள்.

وَمُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيَّ مِنَ التَّوْرَاةِ وَلِأُحِلَّ
لَكُم بَعْضَ الَّذِي حُرِّمَ عَلَيْكُمْ وَجِئْتُكُم بِآيَةٍ
مِّن رَّبِّكُمْ فَاتَّقُوا اللَّهَ وَأَطِيعُونِ ۝

49. இன்னும், (நான்) எனக்கு முன்னாலுள்ள தவ்ராத்தை உண்மைப்படுத்துபவனாகவும், இன்னும், (அதில்) உங்கள் மீது விலக்கப்பெற்ற சிலவற்றை உங்களுக்கு ஆகுமாக்குவதற்காகவும்; இன்னும் உங்கள் ரப்பிடமிருந்து ஓர் அத்தாட்சியையும் உங்களிடம் நான் கொண்டு வந்தேன். எனவே, நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி, என்னைப் பின்பற்றுங்கள்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஷரீஅத்தில் மீன் இறைச்சி, ஒட்டகை இறைச்சி, கொளுப்பு, குடலைச் சுற்றிலுமுள்ள கொளுப்பு, நகமுள்ள பிராணிகளின் இறைச்சி ஆகியவைகள் ஹராமாக்கப் பட்டிருந்தன. இவற்றை ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஹலாலாக்கினார்கள்.

إِنَّ اللَّهَ رَبِّي وَرَبُّكُمْ فَاعْبُدُوهُ ۗ هَٰذَا صِرَاطٌ مُّسْتَقِيمٌ

50. நிச்சயமாக அல்லாஹ்தான் எனக்கும் ரப்பாகவும், உங்களுக்கும் ரப்பாகவும் இருக்கிறான். ஆதலால் அவனையே நீங்கள் வணங்குங்கள். இதுதான் நேரான வழி (என்றுங் கூறினார்).

إِنَّ اللَّهَ رَبِّي وَرَبُّكُمْ **நிச்சயமாக அல்லாஹ் எனக்கும் றப்பு, உங்களுக்கும் றப்பு,** என்ற இவ்வசனம் அல்லாஹு தஆலாவை விசுவாசிக்க வேண்டியதைப் பற்றியும் فَاعْبُدُوهُ **அவனை வணங்குங்கள்** என்ற வசனம் அவனது ஏவலுக்குக் கீழ்ப்படிந்து விலக்கலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியதைப் பற்றியும் அறிவிக்கிறது. **ஹாதா** அதாவது **இது** என்ற பதம் அல்லாஹ்வையும் அவனது ரசூலையும் விசுவாசித்து அவனுக்குக் கீழ்ப்படிவதைச் சுட்டிக் காட்டுகிறது.

فَلَمَّا أَحَسَّ عِيسَىٰ مِنْهُمُ الْكُفْرَ قَالَ مَنْ أَنصَارِي إِلَى اللَّهِ ۖ قَالَ الْحَوَارِيُّونَ نَحْنُ أَنصَارُ اللَّهِ آمَنَّا بِاللَّهِ وَاشْهَدْ بِأَنَّا مُسْلِمُونَ

51. (யூதர்களாகிய) அவர்களிலிருந்து (ஒரு சாரார் தன்னை) நிராகரிப்பதை (ஹளரத் ஈஸா நபியவர்கள்) உணர்ந்தபோது, அல்லாஹ்வின் சார்பில் எனக்கு உதவியாளராக இருப்பவர் யார் என அவர் கூறினார். (அதற்கு) ஹவாரியீன்கள் நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளராக இருக்கிறோம். அல்லாஹ்வை நாங்கள் விசுவாசித்தோம்; இன்னும், நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்களாக (வழிப்பட்டவர்களாக) இருக்கிறோம் என்பதற்கு நீர் சாட்சியாக இருப்பீராக என்று கூறினர்.

மேலே சொல்லப்பட்ட ஆயத்துகளிற் கண்ட விதமாக ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அந்த மனிதர்களை சன்மார்க்கத்தின்பால் அழைத்து, அவர்களுக்கு பல அற்புதச் செய்கைகளைக் காண்பித்துங் கூட அவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பூரணமாக அங்கீகரிக்கவில்லை. பெரும் பான்மையினர் நிராகரித்ததுடன் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொலை செய்து விடவும் சதி செய்தனர். இதனைக் குறித்துத்தான் فَلَمَّا أَحَسَّ عِيسَىٰ مِنْهُمُ الْكُفْرَ **ஈஸா அவர்களிலிருந்து (ஒரு சாரார் தன்னை) நிராகரிப்பதை உணர்ந்தபோது** என்று கூறப்பட்டிருக்கிறது.

அல்ஹவாரிய்யூன் என்பது **அல்ஹவாரீ** என்பதன் பன்மைச் சொல். ஒருவருக்கு ஒருவர் மிகவும் நெருங்கிய அன்பராகவும் களங்கமற்ற மனத்தினையுடையவராகவும் இருந்தால் அவருக்கு **ஹவாரீ** என்று சொல்லப்படும். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 12 பேர் ஹவாரிய்யீன்களாக இருந்தனர். இவர்களில் சிலர் அரசர்களாகவும், சிலர் மீன் வேட்டைக்காரர்களாகவும், சிலர் வண்ணார்களாகவும், சிலர் சாயக்காரர்களாகவும் இருந்தனர். இவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு உதவியாளர்களாக இருந்ததால் இவர்கள் ஒவ்வொருவரும் தம்மை ஹவாரீ என்று அழைத்துக் கொண்டனர்.

அன்ஸாருல்லாஹி அதாவது அல்லாஹ்வின் உதவி யாளர்கள் என்பதற்கு அல்லாஹ்வின் சன்மார்க்கத்திற்கு உதவி புரிகிறவர்கள் என்பது கருத்து.

رَبَّنَا آمَنَّا بِمَا أَنزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُولَ فَاكْتُبْنَا مَعَ الشَّاهِدِينَ

52. (இன்னும், ஹவாரியீன்களாகிய அவர்கள்) எங்கள் ரப்பே! நீ இறக்கியதை விசுவாசித்து (உன்னுடைய) இந்தத் தூதரைப்

பின்பற்றினோம். ஆதலால் எங்களை (ஏக தெய்வக் கொள்கைக்கு) சாட்சியம் சொன்னவர்களுடன் எழுதுவாயாக (என்று இறைவனைப் பிரார்த்தித்தனர்).

مَآ أَنْزَلْتَ நீ இறக்கியதை என்பது இந்த ஆயத்தில் இஞ்ஜீல் வேதத்தைக் குறிக்கும்.

الرَّسُوْلَ அர்ரஸூல் அதாவது இந்த ரஸூல் என்பது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களாவார்கள்.

الشّٰهِدِيْنَ அஷ்ஷாஹிதீன் அதாவது சாட்சி சொல்பவர்கள் என்பதற்கு அல்லாஹுதஆலாவுடைய வஹ்தானிய்யத்தாகிய ஏகத்துவத்தை சாட்சியம் சொல்பவர்கள், அல்லது நபிமார்கள், அல்லது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகள் என்பது கருத்து. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகள் மனிதர்கள் அனைவர் மீதும் கியாமத்து நாளில் சாட்சி சொல்பவர்கள்.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஹவாரியீன்கள் கேட்ட இந்த துஆவிலிருந்து நல்லோர்களைப் பற்றி எழுதப் பட்டுள்ள நூல் வானுலகில் மலக்குகளுடன் இருக்கிறது என்று தெரிய வருகிறது.

وَمَكَرُوْا وَمَكَرَ اللّٰهُ ۗ وَاللّٰهُ خَيْرُ الْمٰكِرِيْنَ ۝

53. (இஸ்ரவேலர்களில் நிராகரிப்போர் ஈஸா நபி அவர்களைக் கொலை செய்யும் பொருட்டு) அவர்கள் சதி செய்தனர்; அல்லாஹ்வும் (ஈஸா நபியை வெட்ட வந்தவனை அவரைப் போல் உருமாற்றி ஏனையோர் அவனை வெட்டும்படி) சதி செய்தான்; மேலும் அல்லாஹ் சதி செய்வோர்களில் மேலானவன்.

مَكَرَ اللّٰهُ **அல்லாஹ் சதி செய்தான்** என்பதற்கு யூதர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொலை செய்வதற்குச் செய்த சதி நிறைவேறாமல் செய்து விட்டான் என்பது கருத்து.

ஃபாயிதா:- ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அவர்களுடைய தாயாரையும் யூதர்கள் ஊரை விட்டுத் துரத்தி விட்டனர். பின்னர் சில நாட்கழித்து ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது தாயாருடனும் ஹவாரிய்யீன்களுடனும் ஊருக்குள் வந்து மனிதர்களை நேர்வழியில் அழைத்தபோது, யூதர்கள் இவ்விருவரையும் குறித்து "சூனியக்காரியின் மகன் சூனியக்காரன், விபச்சாரியின் மகன் விபச்சாரப் புதல்வன் வந்து விட்டான்" என்று சொன்னார்கள். இதனைச் சகிக்க மாட்டாமல் அவ்வாறு சொன்னவர் களை அவ்விருவரும் சபித்தார்கள். ஆகவே, இவ்வாறு ஏசியவர்கள் அனைவரும் பன்றிகளாய்ப் போனார்கள். இந்தச் செய்தி யூத அரசனுக்கு எட்டியபோது ஈஸாவை விட்டு வைப்பது சரியில்லை, கொன்றுவிடுவதுதான் சரியானது என்று ஆலோசித்து முடிவு செய்தான்.

ஆகவே, அல்லாஹு தஆலாவின் உத்தரவின் படி ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை ஒரு வீட்டிற்குள் கொண்டு வந்துவிட்டு அப்படியே அவர்களை வானுலகிற்குக் கொண்டு போய் விட்டார்கள். பிறகு, யூதர்களின் அரசன் அவ்வீட்டிற்குள் புகுந்து ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொன்று விட்டு வரும்படி தத்து யானூஸ் என்பவனுக்குக் கட்டளையிட்டான். அவன் உள்ளே சென்று பார்க்கும் போது அங்கு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இல்லாதிருப்பதை அறிந்து அங்கு சிறிது தாமதித்ததால், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை வெட்டுகிற அலுவலில் இருக்கிறான் என்று யூதர்கள் எண்ணிக் கொண்டனர். இதற்குள் அவனது முகம் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது முகத்தைப் போல் மாறிவிட்டது. அவன் வீட்டிற்குள்ளிருந்து வெளியில் வந்து, 'ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அங்கில்லை' என்று சொன்னான். ஆயினும், அவனது முகம் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது முகத்தைப் போலிருந்ததால் யூதர்கள் "நீதான் ஈஸா" என்று கூறி அவனை கழுவிலேற்றிக் கொன்று விட்டனர். ஆயினும், அவனைக் கூர்மையாகப் பார்த்த போது அவனது முகம் மட்டும்

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது முகத்தைப் போலவும், அவனது உடல் முன் போலவும் இருக்கக் கண்டு திகைப்புற்று "இவன் ஈஸாவாயிருந்தால் நம்முடையவன் எங்கே? இவன் நமது மனிதன் என்றால் ஈஸா எங்கே?" என்று அவர்கள் தர்க்கம் செய்து கொண்டனர்.

அப்பால், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை கொன்று விட்டுக் கழுவிலேற்றி விட்டதாக ஹளரத் மர்யம் ஸித்தீக்கா கேள்விப்பட்டு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது துஆவின் பரக்கத்தால் பைத்தியம் நீங்கிய ஒரு பெண்ணுடன் வந்து கழுமரத்தினண்டையிலிருந்து அழுதார்கள். அப்பொழுது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானிலிருந்து இறங்கி வந்து "ஏன் அழுகிறீர்கள்" என்று வினவ, உம்மைத் தேடித்தான் அழுகிறோம் என்று பதில் கூறியதற்கு "அல்லாஹு தஆலா என்னை உயர்த்திக் கொண்டான், எனக்கொரு தீங்குமில்லை. கழுவிலிருப்பவன் என்னைப் போல் மாற்றப்பட்டவன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள்.

பின்னர், ஏழு நாள் சென்று அல்லாஹு தஆலா ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு "மஜ்தலானிய்யா வென்ற இடத்திலிருக்கிற மலையில் நீர் இறங்க வேண்டும். அந்த மலை உம்மைத்தேடி அழுது சலிப்பதைப் போல் வேறு ஒன்றும் அழுது சலிக்கவில்லை. அங்கு உமது ஹவாரிய்யீன்களை ஒன்று திரட்டி அவர்கள் பல ஊர்களுக்கும் சென்று மனிதர்களைச் சன்மார்க்கத்தில் அழைக்கும் படி கட்டளையிடும்" என்று கூறினான். அதன் காரணமாக அவர்கள் அம்மலையில் இறங்கிய போது அந்த மலை முழுவதும் பிரகாசமாகி விட்டது. ஹவாரிய்யீன்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களுக்குப் பல ஊர்களுக்கும் சென்று சன்மார்க்கப் பிரசாரம் செய்யும்படி கட்டளையிடப்பட்டது. பின்னர், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீண்டும் வானத்திற்கு உயர்த்தப்பட்டார்கள்.

ரிவாயத்து:- அல்லாஹு தஆலா ஒரு வெண்மேகத்தை அனுப்பினான். அது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை உயரத் தூக்கிற்று. அப்பொழுது ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள்

தமது புதல்வரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதார்கள். அப்பொழுது, "நம்மை கியாமத்து நாள் ஒன்று சேர்த்து விடும்" என்று ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறி வானத்திற்குச் சென்று விட்டார்கள். அது சமயம் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வயது முப்பத்து மூன்று. பின்னர் ஆறு வருடம் கழித்து ஹளரத் மர்யம் ஸித்தீக்கா வஃபாத்தானார்கள்.

إِذْ قَالَ اللّٰهُ يٰعِيسٰىٓ إِنِّىْ مُتَوَفِّيْكَ وَرَافِعُكَ إِلَىَّ
وَمُطَهِّرُكَ مِنَ الَّذِيْنَ كَفَرُوْا وَجَاعِلُ الَّذِيْنَ
اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا إِلٰى يَوْمِ الْقِيٰمَةِ ۚ
ثُمَّ إِلَىَّ مَرْجِعُكُمْ فَأَحْكُمُ بَيْنَكُمْ فِيْمَا كُنْتُمْ
فِيْهِ تَخْتَلِفُوْنَ ۝

54. "ஈஸாவே! நிச்சயமாக நான் உமக்கு (ச் செய்த வாக்குறுதியை உலகத்திலேயே) நிறைவேற்றுகிறவன்; மேலும், (யூதர்களின் சதியை விட்டு இப்பொழுது) உம்மை என்னிடம் உயர்த்திக் கொள்ளுகிறவனாகவும், நிராகரிப்பவர்களை விட்டும் உம்மைச் சுத்தம் செய்கிறவனாகவும் இருக்கிறேன்; இன்னும், உம்மைப் பின்பற்றியவர்களை இறுதி நாள் வரையிலும் நிராகரிப்பவர்களுக்கு மேலாக ஆக்குவேன்; பின்பு, என்னிடத்திலேயே உங்களது மீளுதல் இருக்கிறது. எனவே, நீங்கள் எதில் பிணங்கிக் கொண்டிருந்தீர்களோ அதில் நான் உங்களுக்கிடையில் தீர்ப்புச் செய்வேன்" என்று அல்லாஹ் கூறியதை (எண்ணிப் பாரும்).

إِنِّىْ مُتَوَفِّيْكَ **நிச்சயமாக நான் உமக்கு (ச் செய்த வாக்குறுதியை உலகத்திலேயே) நிறைவேற்றுகிறவன்** என்ற வசனம் காஃபிர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை வெட்டவும் மாட்டார்கள்; கழுவிலேற்றவும் மாட்டார்கள், அவருக்கு அல்லாஹு

தஆலா ஏற்படுத்தியுள்ள வாழ்நாள் முழுவதையும் அவர் முழுமையாக அனுபவிப்பார் என்பதை அறிவிக்கிறது.

وَجَاعِلُ الَّذِينَ اتَّبَعُوكَ فَوْقَ الَّذِينَ كَفَرُوا إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ **இன்னும், உம்மைப் பின்பற்றியவர்களை இறுதி நாள்வரையிலும் நிராகரிப்பவர்களுக்கு மேலாக ஆக்குவேன்** என்ற இவ்வசனத்திற் சொல்லப்பட்டிருப்பவர்கள் தற்போது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் கிறிஸ்துவர் களல்லர். ஏனெனில், இவர்கள் திரியேகதத்துவத்தை ஏற்படுத்தியதன் மூலம் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் போதித்த உண்மையான சன்மார்க்கத்தை விட்டு விலகி விட்டார்கள். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நபியென்று அங்கீகரிக்காத மற்றவர்களும் அல்லர். ஆகவே, இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் முஸ்லிம்கள்தான். இவர்கள் ஷரீஅத்தில் கொஞ்சம் வித்தியாசப் பட்டிருந்தாலும் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உட்பட எல்லா நபிமார்களும் போதித்த தீனுல் இஸ்லாத்தை பின்பற்று கிறார்கள்.

ரிவாயத்து:- தஜ்ஜால் வரும் காலத்தில் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானத்திலிருந்து இறங்கி சிலுவைகளை உடைப்பார்கள், பன்றிகளைக் கொல்லுவார்கள், தஜ்ஜாலை வெட்டுவார்கள், இஸ்லாமைத் தவிரவுள்ள மற்றைய மதங்களை எல்லாம் இல்லாதொழித்து விடுவார்கள். இஸ்லாத்தின் படியே நடப்பார்கள், தஜ்ஜாலை கொன்ற பின் அறபியரில் மணமுடிப்பார்கள், குழந்தைகளைப் பெறுவார்கள், நாற்பது வருட காலம் வரை பூமியிலிருந்து மரணிப்பார்கள். இந்த உம்மத்தில் ஒருவராக ஆக வேண்டுமென்று இறைவனிடம் அவர் கேட்ட துஆவை இறைவன் அங்கீகரித்திருப்பதால் முஸ்லிம்கள் அவருக்காக ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்று வார்கள்.

فَأَمَّا الَّذِينَ كَفَرُوا فَأُعَذِّبُهُمْ عَذَابًا شَدِيدًا
فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَمَا لَهُمْ مِنْ نَاصِرِينَ ۝

55. ஆகவே, எவர்கள் நிராகரிப்பவரானார்களோ அவர்களை இம்மையிலும் மறுமையிலும் கடினமான வேதனையாக வேதனை செய்வேன்; மேலும், அவர்களுக்கு (யாரும்) உதவியாளர்கள் இருக்கமாட்டார்கள்.

காஃபிர்களை இம்மையில் வேதனை செய்வது என்பது வாளாயுதத்தைக் கொண்டு யுத்தம் செய்து அவர்களைத் தோற்கடித்துக் கைதி செய்து, ஜிஸ்யா வரி ஏற்படுத்துதல், நாட்டில் நோய்கள் பரவுதல் முதலியவைகளாகும். இவைகள் காஃபிர்கள் விஷயத்தில் வேதனையாகவும் முஸ்லிம்கள் விஷயத்தில் நன்மையாகவுமிருக்கும்.

وَأَمَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ فَيُوَفِّيهِمْ
أُجُورَهُمْ وَاللَّهُ لَا يُحِبُّ الظَّالِمِينَ ۝

56. இன்னும், எவர்கள் விசுவாசித்து நல்ல காரியங்களையும் செய்தார்களோ அவர்களுக்கு அவர்களுடைய (நற்) கூலியை (அல்லாஹ்) நிறைவேற்றுவான்; மேலும், அல்லாஹ் அநியாயக்காரர்களை நேசிக்கமாட்டான்.

அஸ்ஸாலிஹாத் அதாவது நற்செயல்கள் என்பது சன்மார்க்கத்திற்கு இணக்கமான காரியங்கள் என்பது கருத்து. நற்செயல்கள் என்று சொல்லிக் கொண்டு காஃபிர்கள் செய்யுங் காரியங்களெல்லாம் நற்செயல்களாக மாட்டா.

ذَٰلِكَ نَتْلُوهُ عَلَيْكَ مِنَ الْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ۝

57. (மேற்கூறப்பெற்ற) இதுவாகிறது (நம்முடைய) வசனங்களாகவும், நுண்ணிய உபதேசங்களாகவுமிருக்கிற நிலையில் இதை நாம் உமக்கு ஓதிக் காண்பிக்கிறோம்.

இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களது நபித்துவத்தை உறுதி செய்கிறது. எவ்வாறெனில், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் முதலியவர்களைப் பற்றிய முற்காலத்துச் செய்திகளை நூற்கள் மூலமாகப் படித்து உணர வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுதப்படிக் காதவர்கள். ஆதலால் நூலின் மூலமாகத் தெரிந்து கொள்ளமுடியாது. பிறர் சொல்லத் தெரிந்து கொள்வதுதான் ஒரு வழி இருக்கிறது. இதற்கேற்ப இறைவனே இவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குச் சொல்லிக் காண்பித்திருப்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது நபி யென்பதை அறிவிக்கிறது.

إِنَّ مَثَلَ عِيسَىٰ عِندَ اللَّهِ كَمَثَلِ آدَمَ ۖ خَلَقَهُ مِن
تُرَابٍ ثُمَّ قَالَ لَهُ كُن فَيَكُونُ ۝

58. நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் ஈஸாவுக்கு உதாரணமாகிறது ஆதமுடைய உதாரணத்தைப் போல்தான்; அவரை மண்ணினால் சிருஷ்டித்துப் பின்னர் "ஆகுக" என்று அவருக்குச் சொன்னான். உடனே அவர் (மனிதராக) ஆகி விட்டார்.

நஜ்ரான் என்னும் ஊரிலுள்ள கிறிஸ்துவர்கள் மதீனமா நகருக்கு வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தந்தை இல்லாததால் 'அவர் இறைவன்' என்று ஏற்படுகிறது, என்று கூறினார்கள். அவர்களது இக்கூற்றை மறுத்து இந்த ஆயத்து அருளப்பட்டது.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போல்தான் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இருக்கிறார்கள். அன்றியும் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தாயாருண்டு, தந்தை மட்டும்தான் இல்லை. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தாயும் தந்தையுமில்லை. அவர்கள்

மண்ணினால் படைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டவர்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

الْحَقُّ مِن رَّبِّكَ فَلَا تَكُن مِّنَ الْمُمْتَرِينَ ۝

59. (ஈஸா நபி சம்பந்தமான) உண்மை உம்முடைய ரப்பிடமிருந்துள்ளதாக இருக்கிறது; எனவே, (அவர் தந்தையின்றிப் பிறந்தவரென்பதில்) நீர் சந்தேகங் கொள்கிறவர்களில் நீர் ஆகி விட வேண்டாம்.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஹளரத் மர்யம் ஸித்தீக்கா ஆகியவர்கள் சம்மந்தமாக கிறிஸ்துவர்கள் கூறுவதும், யூதர்கள் கூறுவதும் உண்மையான செய்திகளல்ல, அல்லாஹுதஆலா கூறி இருப்பவைகள்தான் உண்மையானவை. ஆகவே, இவற்றில் யூத கிறிஸ்துவர்கள் சொல்வனவற்றைக் கேட்டு சந்தேகங் கொண்டவர் களிலாகி விடாமல் உறுதியாக இருக்க வேண்டும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்கள் மூலமாக ஏனைய முஸ்லிம்களும் கட்டளை யிடப்பட்டிருக்கிறார்கள்.

فَمَنْ حَاجَّكَ فِيهِ مِن بَعْدِ مَا جَاءَكَ مِنَ الْعِلْمِ فَقُلْ
تَعَالَوْا نَدْعُ أَبْنَاءَنَا وَأَبْنَاءَكُمْ وَنِسَاءَنَا وَنِسَاءَكُمْ
وَأَنفُسَنَا وَأَنفُسَكُمْ ثُمَّ نَبْتَهِلْ فَنَجْعَل لَّعْنَتَ
اللَّهِ عَلَى الْكَاذِبِينَ ۝

60. எனவே, (ஈஸாவாகிய) அவர் விஷயத்தில் உமக்கு அறிவு வந்த பின்பும் எவரேனும் உம்மிடம் தர்க்கஞ் செய்தால், (அவர்களை) வாருங்கள்! எங்கள் ஆண் மக்களையும், உங்கள் ஆண்

மக்களையும், எங்கள் பெண் மக்களையும் உங்கள் பெண் மக்களையும், எங்களையும், உங்களையும் அழைத்து (ஒன்று சேர்த்துக் கொள்வோம். பின்பு (முபாஹலா) பிரார்த்தனை செய்து பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் கோபத்தை ஏற்படுத்திக் கொள்ளுவோம் என்று (நபியே) நீர் கூறும்.

நஜ்ரான் என்னும் ஊரிலிருந்து வந்த கிறிஸ்துவக் கூட்டத்தினர் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சம்மந்தமாகவும், ஹளரத் மர்யம் ஸித்தீக்கா அவர்கள் சம்மந்தமாகவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தர்க்கம் செய்தனர். ஆகவே, இந்த ஆயத்தில் கண்டபடி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தக் கிறிஸ்துவக் கூட்டத்தினரை முபாஹலாவிற்கு அழைத்தார்கள். அக்கிறிஸ்துவர்கள் தங்களுடன் வந்திருந்த தங்கள் தலைவரிடம் முபாஹலாவிற்குச் செல்வதைக் குறித்து ஆலோசனை கேட்டார்கள். அதற்கவர் “நீங்கள் அவரை நபி யென்று அறிந்திருக்கிறீர்கள். நபிமார்களிடம் பிள்ளையைப் பிடித்துச் சத்தியம் செய்தவர்களில் எவரும் உயிருடனிருப்பதை நான் பார்த்ததில்லை. ஆகவே அவரிடம் முபாஹலாவிற்கு நீங்கள் போகாமல் நஜ்ரானுக்கே திரும்பச் சென்று விடுங்கள்” என்று சத்தியமாகக் கூறினார். ஆகவே, இச்செய்தியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறிவிட்டு முபாஹலாச் செய்யாமல் திரும்ப ஊருக்குச் சென்று விடலாம் என்று அவர்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தபோது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹளரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை இடுக்கிக் கொண்டும், ஹளரத் இமாம் ஹஸன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைக் கையில் பிடித்துக் கொண்டும், ஹளரத் ஃபாத்திமா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களை தமக்குப் பின்னாலும், அவர்களுக்குப் பின்னர் ஹளரத் அலி ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை நிறுத்திக் கொண்டும், “நான் அல்லாஹு தஆலாவிடம் துஆக் கேட்பேன். நீங்கள் ஆமீன் என்று சொல்ல வேண்டும்” என்று கூறிக் கொண்டிருந்தார்கள். இவர்களைப் பார்த்த அந்த கிறிஸ்துவர்களின்

தலைவர்களில் ஒருவரான அந்தப் பாதிரி தமது தோழர்களை நோக்கி நான் “இன்று சில முகங்களைப் பார்த்தேன். இறைவன் அந்த முகங்களைக் கொண்டு மலையை வேருடன் பிடுங்க நாடினால் பிடுங்கி விடுவான். அவருடன் சத்தியத்திற்கு இப்பொழுது போனால் கியாமத்து நாள் வரையில் பூமியில் ஒரு கிறிஸ்துவக் கருவும் மிஞ்சாது” என்று கூறிவிட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி “அபுல் காஸிமே! சத்தியத்திற்கு வராமல் அவரவர் விருப்பப்படி இருந்து கொள்ளலாம் என்று நினைக்கிறோம்” என்று கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அவ்வாறாயின் நீங்கள் இஸ்லாமில் வந்து விடுங்கள்” என்று கூறினார்கள். இறுதியாக அக்கிறிஸ்துவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் திரை கொடுப்பதாகக் கூறிச் சம்மதித்து விட்டு சென்றார்கள். அந்த கிறிஸ்துவர்கள் முபாஹலாச் செய்திருந்தால் அதில் சம்மந்தப்பட்ட கிறிஸ்துவர்கள் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் மாற்றப்பட்டிருப்பர், நஜ்ரானையும் நஜ்ரானில் உள்ளவர்களையும் அங்குள்ள மரங்களிலிருக்கும் பறவைகளையும் இறைவன் வேர்ப்பிடுங்காகப் பிடுங்கி இருப்பான், ஒரு வருடம் பூர்த்தியாகுவதற்குள் கிறிஸ்துவர்களெல்லாரும் மடிந்து போவார்கள்” என்று இவர்களைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

إِنَّ هَٰذَا لَهُوَ الْقَصَصُ الْحَقُّ ۚ وَمَا مِنْ إِلَٰهٍ إِلَّا
اللَّهُ ۚ وَإِنَّ اللَّهَ لَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ ۝

61. நிச்சயமாக இதுதான் உண்மையான செய்தி; மேலும் அல்லாஹ்வைத்தவிர (வணக்கத்துக்குரிய) தெய்வம் (வேறு யாரும்) இல்லை. இன்னும் நிச்சயமாக அல்லாஹ்தான் மிகைத்தவன், விவேகமுள்ளவன்.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சம்பந்தமாக கிறிஸ்துவர்கள் இட்டுக் கட்டிக் கூறுபவைகள் தவறானவைகள்,

அவற்றில் உண்மை இல்லை என்பதும், அவனைத்தவிர வேறு நாயனில்லை, அவனுக்குச் சர்வ வல்லமையுண்டு, அவன் யாவரினும் மிகைத்தவன் என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

فَإِن تَوَلَّوْا فَإِنَّ اللَّهَ عَلِيمٌ بِالْمُفْسِدِينَ

62. எனவே, அவர்கள் (குர்ஆனையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் விசுவாசிப்பதை விட்டுப்) பின்வாங்கினால் நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நன்கு அறிபவன்.

திருக்குர்ஆனில் சொல்லப்பட்டபடி ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அல்லாஹு தஆலாவையும் ஈமான் கொள்ள கிறிஸ்துவர்கள் பின்வாங்குவார்களாயின் அவர்களிடம் வீணாகத் தர்க்கம் செய்து கொண்டிருக்க வேண்டாம் என்றும், வேண்டும் என்றே குழப்பம் செய்கிறவர்களையும் அவர்களது குழப்பத்தின் தன்மையையும் அல்லாஹு தஆலா அறிந்திருப்பதால் அவர்களுக்குத் தக்கவாறு தண்டனையளிப்பான் என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இந்த ஆயத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

قُلْ يَا أَهْلَ الْكِتَابِ تَعَالَوْا إِلَىٰ كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا
وَبَيْنَكُمْ أَلَّا نَعْبُدَ إِلَّا اللَّهَ وَلَا نُشْرِكَ بِهِ شَيْئًا
وَلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا أَرْبَابًا مِّن دُونِ اللَّهِ ۚ فَإِن
تَوَلَّوْا فَقُولُوا اشْهَدُوا بِأَنَّا مُسْلِمُونَ

63. "வேதத்தையுடையவர்களே! அல்லாஹ்வைத் தவிர (வேறு யாரையும்) நாம் வணங்க மாட்டோம். அவனுக்கு நாம் எதையும் இணை வைப்பதில்லை; அல்லாஹ்வைத் தவிர்த்து நம்மில் சிலர் சிலரை ரப்புகளாக ஏற்படுத்துவதில்லை என்று நமக்கும் உங்களுக்குமிடையில் பொதுவாக இருக்கும் வார்த்தையின் மீது (ஒற்றுமையாக இருந்து கொள்வோம்) வாருங்கள்" என்று (நபியே நீர்) கூறும்; எனவே, அவர்கள் (இதற்கும்) பின்வாங்கினால் "நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்களாக இருக்கிறோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாக இருங்கள்" என்று (முஸ்லிம்களாகிய) நீங்கள் கூறுவீர்களாக.

அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாதென்பதும், அவனுக்கு எதையும் இணைவைக்கக் கூடாதென்பதும் எல்லா வேதங்களிலும் வற்புறுத்தப்பட்டு வந்த விஷயங்களாகும். இவைதான் இஸ்லாத்தின் அடிப்படையான போதனைகளுமாகும். இவற்றைத் தவிரவுள்ள ஹராம் ஹலால் போன்றவைகள் அந்தந்த ஷரீஅத்தின்படி மாற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஆதலால், இவற்றை விட்டு மார்க்கத்திற்கு அசல் மூலாதாரமான விஷயங்களில் ஒரு முகமாக இருக்கும்படி அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

தவிர, யூதர்கள் ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹுதஆலாவின் புதல்வரென்று நம்பியதாலும், கிறிஸ்துவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹு தஆலாவின் புதல்வரென்று நம்பியதாலும், தங்களிலுள்ள மத குருக்கள் தங்களுக்குப் பாவமன்னிப்புச் செய்பவர்கள் என்று நம்பியதாலும் அவர்கள் தங்கள் மார்க்கத்திலுள்ள தவ்ஹீதின் பரிசுத்தத் தன்மையிலிருந்து விலகி அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதைக்கு அதிகமாக செய்து அவர்களை போற்றி வணங்கி வந்தனர். இதனை நிறுத்தி விட வேண்டும் என்பதற்காக,

وَلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا أَرْبَابًا مِّن دُونِ اللَّهِ **இன்னும் நம்மில் சிலர் சிலரை ரப்புகளாக ஏற்படுத்துவதில்லை** என்ற விதியையும் சேர்க்கப்பட்டது. இந்த வசனத்தில் சொல்லப்பட்டபடி அவர்கள் ஒப்புக் கொள்வார்களாயின் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹு தஆலாவின் புதல்வர் என்றும், மூன்று தெய்வங்களில்

ஒருவர் என்றும் சொல்வதைக் கிறிஸ்துவர்கள் விட்டுவிட வேண்டும். அவ்வாறு விட்டுவிட்டால் அவர்கள் பொய்யாக இட்டுக்கட்டிய இதர எல்லா விஷயங்களும் தானாகவே ரத்துச் செய்யப்பட்டு விடுகின்றன. ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ்வின் புதல்ரென்று நம்புவதை யூதர்கள் விட்டு விட்டால் அவர்களுடைய ஷரீஅத்திலுள்ள பல விஷயங்கள் ரத்துச் செய்யப்பட்டு விடுகின்றன.

இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விஷயங்களைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரோமச் சக்கிரவர்த்தியான ஹிர்க்கலுக்கும் ஈரான் சக்கிரவர்த்தியான கிஸ்ராவிற்கும் கடிதம் எழுதித் தூதர்கள் கையில் கொடுத்தனுப் பினார்கள். அவ்வரசர்கள் இதற்கு இணங்கவில்லை. இதன் முழு விபரத்தையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வரலாற்று நூலில் காணலாம்.

يَا أَهْلَ الْكِتَابِ لِمَ تُحَاجُّونَ فِي إِبْرَاهِيمَ وَمَا أُنْزِلَتِ
التَّوْرَاةُ وَالْإِنْجِيلُ إِلَّا مِنْ بَعْدِهِ ۚ
أَفَلَا تَعْقِلُونَ ۝

64. வேதத்தையுடையவர்களே! இப்ராஹீம் (யூதராக இருந்தாரா, கிருஸ்தவராக இருந்தாரா என்ற) விஷயத்தில் நீங்கள் ஏன் தர்க்கஞ் செய்கிறீர்கள்? தவிரவும், தவ்ராத்தும் இஞ்ஜீலும் அவருக்குப் பின்னரேயன்றி (அவருடைய காலத்தில்) இறக்கப்படவில்லையே. (இதை) நீங்கள் அறிந்திருக்கவில்லையா?

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை யூதர்கள் தங்கள் மார்க்கத்திலிருந்ததாகவும், கிறிஸ்துவர்கள் தங்கள் மார்க்கத்திலிருந்ததாகவும் கூறி வந்தனர். இதனை இறைவன் இந்த ஆயத்தில் மறுத்து ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பிறகுதான் தவ்ராத்தும் இஞ்ஜீலும் இறக்கப்பட்டன என்பதை நீங்கள் உணர வேண்டாமா? என்று கூறியுள்ளான்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஆயிரம் வருடத்திற்குப் பிறகு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபியாக வந்தார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபியாக வந்தார்கள். இத்தனை வருட காலத்திற்குப் பின்னுள்ள வேதத்தையோ அல்லது ஷரீஅத்தையோ ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எவ்வாறு பின்பற்றி நடந்திருக்க முடியும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

هَا أَنْتُمْ هَٰؤُلَاءِ حَاجَجْتُمْ فِيمَا لَكُمْ بِهِ عِلْمٌ فَلِمَ
تُحَاجُّونَ فِيمَا لَيْسَ لَكُمْ بِهِ عِلْمٌ ۚ وَاللَّهُ يَعْلَمُ
وَأَنْتُمْ لَا تَعْلَمُونَ ۝

65. அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள் ஒரு கூட்டத்தினர், உங்களுக்குத் தெரிந்த விஷயத்தில் தர்க்கம் செய்து கொண்டிருந்தீர்கள். அப்படி இருக்க, உங்களுக்குத் தெரியாததில் நீங்கள் ஏன் தர்க்கம் செய்கிறீர்கள்? மேலும், அல்லாஹ் (யாவற்றையும்) அறிவான். நீங்களோ அறியமாட்டீர்கள்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஷரீஅத்தைப் பற்றி யூதர்கள் அறிந்திருந்தனர். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஷரீஅத்தைப் பற்றி கிறிஸ்துவர்கள் அறிந்திருந்தார்கள். இவ்விரு ஷரீஅத்தைப் பற்றியும் உண்மைக்கு மாறான விஷயங் களைக் குறித்து அந்த மதத்தினர் தர்க்கம் செய்தார்கள். அந்த மதங்களை அவர்கள் அறிந்திருந்ததால் அவர்கள் தர்க்கம் செய்வதற்கு ஒரு வகையில் வாய்ப்பு இருந்தது. ஆனால், ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஷரீஅத்து எது என்பதைப் பற்றி அவ்வேதங்களிற் சொல்லப்படவில்லை. ஆதலால், அவர்களுக்கு அது தெரியாது. அவ்வாறு தெரியாமலிருக்கிற அந்த ஷரீஅத்தைப் பற்றி

தெரிந்தவர்களைப் போல் தர்க்கம் செய்வது நியாயமில்லை என்ற விஷயம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ما كان ابراهيم يهوديا ولا نصرانيا ولكن
كان حنيفا مسلما وما كان من المشركين ۝

66. இப்ராஹீம் யூதராகவோ கிருஸ்தவராகவோ இருக்கவில்லை. ஆனால், அவர் (துவறான மார்க்கங்களை விட்டு அல்லாஹ்வின் பக்கம்) திரும்பியவராக, முஸ்லிமாக இருந்தார்; மேலும், (அவர்) இணை வைப்பவர்களில் உள்ளவர்களாக இருக்கவில்லை.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எந்த ஷரீஅத்தில் இருந்தார் என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. முஸ்லிம் என்ற பதத்திற்கு “அல்லாஹு தஆலாவுக்குக் கீழ்ப்படிந்தவர்” என்பது கருத்து.

ان اولى الناس بابراهيم للذين اتبعوه وهذا
النبي والذين امنوا والله ولي المؤمنين ۝

67. நிச்சயமாக இப்ராஹீமுக்கு அதிக உரிமையுடையோர் அவரைப் பின்பற்றியவர்களும், இந்த நபியும், விசுவாசிகளும்தான். மேலும், அல்லாஹ் விசுவாசிகளுக்கு உதவி செய்பவனாக இருக்கின்றான்.

ஹளரத் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது தீனில் இருப்பதாகத் தங்களைக் குறித்துச் சொல்லிக் கொள்வதற்கு, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் அவர்களைப் பின்பற்றிக் கொண்டிருந்தவர்களும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களது உம்மத்துகளும்தான் தகுதி உள்ளவர்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

ودت طائفة من اهل الكتب لو يضلونكم
وما يضلون الا انفسهم وما يشعرون ۝

68. வேதக்காரர்களில் ஒரு கூட்டத்தினர் உங்களை வழி கெடுத்து விட வேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் தங்களைத் தாங்களேயன்றி வழி கெடுத்து விடவில்லை. இதனை அவர்கள் உணர்ந்து கொள்வதுமில்லை.

ஹளரத் மஆது ரலியல்லாஹுதஆலா அன்ஹு, ஹுதைஃபா ரலியல்லாஹுதஆலா அன்ஹு, அம்மார் ரலியல்லாஹுதஆலா அன்ஹு ஆகிய ஸஹாபிகள் தீனுல் இஸ்லாத்தை விட்டு மாறித் தங்களது தீனில் வந்துவிட வேண்டுமென்று அவர்களை யூதர்கள் அழைத்த போது இந்த ஆயத்து இறக்கப்பட்டது.

அறிந்துகொள்:- வேதக்காரர்கள் சத்தியத்தை விட்டு மாறி நியாயமான முறையில் தாவாச் செய்வதை அங்கீகரிக்க மறுத்த பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஈமான் கொண்டவர்களைத் தங்களது மார்க்கத்தில் சேர்த்து விட வேண்டுமென்று முயலுகிறார்கள் என்பது இதிலிருந்து தெரியவருகிறது. ஆகவே, மனிதரிலும் ஜின்களிலுமுள்ள ஷைத்தான்கள் மூமின்களது உள்ளத்தில் சந்தேகங்களை உண்டு பண்ணி வழி கெடுத்து விடாமல் இருக்கும்படி எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

يا اهل الكتب لم تكفرون بايت الله وانتم
تشهدون ۝

69. வேதத்தையுடையவர்களே! நீங்களோ (இது

அல்லாஹ்வின் வசனந்தான் என்பதை உணர்ந்து அதற்குச்) சாட்சிகளாக இருந்து கொண்டே நீங்கள் ஏன் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கிறீர்கள்?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடைசி காலத்து நபியாக வருவார்கள் என்ற விஷயத்தைப் பற்றி தவ்ராத் வேதத்திலும் இஞ்ஜீல் வேதத்திலும் வந்திருப்பதால் வேதக்காரர்கள் திருக்குர்ஆன் ஆயத்துகளில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நுபுவ்வத்தைப் பற்றி கூறப்படுபவைகள் உண்மையானவைகள் என்று அறிந்திருந்தார்கள். அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நன்கு தெரிந்து கொண்டிருந்தும் ஈமான் கொள்ளாமல் விலகி இருப்பதைக் கண்டித்து இந்த ஆயத்தில் அருளப்பட்டிருக்கிறது.

يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لِمَ تَلْبِسُونَ ٱلْحَقَّ بِٱلْبَٰطِلِ وَتَكْتُمُونَ
ٱلْحَقَّ وَأَنتُمْ تَعْلَمُونَ ۝

70. வேதத்தையுடையவர்களே! நீங்கள் ஏன் உண்மையைப் பொய்யுடன் கலக்கின்றீர்கள்? இன்னும் நீங்கள் அறிந்துகொண்டே உண்மையை ஏன் மறைக்கின்றீர்கள்?

இந்த ஆயத்தில் முதலில் சொல்லிய **அல்ஹக்கு** (உண்மையை) என்ற பதம் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஆகிய நபிமார்களுக்கு அல்லாஹு தஆலா இறக்கிய வேதங்களையும், இரண்டாவதாகக் கூறப்பட்ட **அல்ஹக்கு** (உண்மை) என்ற பதம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நுபுவ்வத்தையும் குறிக்கும். **அல்பாதில்** (பொய்யை) என்பது அவ்வேதங்களிற் கூறப்பட்டவைகளில் சிலவற்றை அழித்துவிட்டு அந்த இடங்களில் அவர்களாக இட்டுக் கட்டி எழுதிக் கொண்டவைகளைக் குறிக்கும்.

وَقَالَت طَّآئِفَةٌ مِّنْ أَهْلِ ٱلْكِتَٰبِ ءَامِنُوا۟ بِٱلَّذِىٓ أُنزِلَ
عَلَى ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَجْهَ ٱلنَّهَارِ وَٱكْفُرُوٓا۟ ءَاخِرَهُۥ لَعَلَّهُمْ
يَرْجِعُونَ ۝

71. இன்னும், "விசுவாசங் கொண்டவர்கள் மீது இறக்கப் பெற்ற (வேதத்)தை, பகலின் ஆரம்பத்தில் (காலையில்) விசுவாசித்து, அதன் கடைசியில் (மாலையில்) நீங்கள் நிராகரியுங்கள்; (அதனால்) அவர்கள் மீண்டுவிடக்கூடும்" என்று வேதத்தை யுடையவர்களில் ஒரு கூட்டத்தினர் (தங்கள் கூட்டத்தினரிடம்) கூறுகின்றனர்.

வஜ்ஹன்னஹார் என்பதற்குப் பகலின் முகம் என்பது பதப்பொருளாயினும் காலை நேரம் என்பது கருத்து. **ஆகிரஹு** என்பதற்கு அதன் கடைசி என்பது பதப் பொருளாயினும் மாலை நேரம் என்பது கருத்து.

தாயிஃபத்துன் என்பதற்கு ஒரு கூட்டம் என்பது பொருள். இது பல மனிதர்களை அறிவிக்கிறது. ஆயினும், கஅபுப்னுல் அஷ்ரப், மாலிக் குப்னுஸ்ஸைப் ஆகிய இருவரையும் இப்பதம் சுட்டிக் காட்டுகிறது. எவ்வாறெனில், யூதர்களிலுள்ள இவ்விருவரும்தான் தங்களிலுள்ள மற்றைய யூதர்களிடம் "நீங்கள் காலையில் கஃபாவை நோக்கித் தொழுங்கள். பின்னர் மாலையில் பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுங்கள். அவ்வாறு செய்தால் அவர்கள் உங்களைக் குறித்து அவர்கள் நம்மைப் பார்க்கினும் அதிகம் அறிந்தவர்கள். அவ்வாறு இருக்க அவர்கள் திரும்பிக் கொண்டார்கள். இதில் ஏதோ தவறிருக்க வேண்டும் என்றெண்ணி அவர்களும் திரும்பிக் கொள்வார்கள்" என்று கூறினார்கள். அதனைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது. இது முஸ்லிம்களுக்கு கஃபாவை கிப்லாவாக மாற்றியபோது நிகழ்ந்த சம்பவம்.

وَلَا تُؤْمِنُوٓا۟ إِلَّا لِمَن تَبِعَ دِينَكُمْ قُلْ إِنَّ ٱلْهُدَىٰ هُدَى ٱللَّهِ أَن يُؤْتَىٰٓ أَحَدٌ مِّثْلَ مَآ أُوتِيتُمْ أَوْ يُحَآجُّوكُمْ عِندَ رَبِّكُمْ ۗ قُلْ إِنَّ ٱلْفَضْلَ بِيَدِ ٱللَّهِ يُؤْتِيهِ مَن يَشَآءُ ۗ وَٱللَّهُ وَٰسِعٌ عَلِيمٌ

72. மேலும், "உங்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றியவர்களைத் தவிர (வேறு யாரையும்) நீங்கள் நம்பாதீர்கள் (என்று கூறுகின்றனர். எனவே நபியே!) நிச்சயமாக நேர்வழி என்பது அல்லாஹ்வின் நேர் வழியாகும். (வேதத்திலிருந்து) நீங்கள் கொடுக்கப்பட்டது போல் (வேறு) ஒருவர் கொடுக்கப்பட்டார் என்பதற்காகவோ அல்லது உங்களுடைய ரப்பிடத்தில் அவர்கள் உங்களை மிகைத்து விடுவார்கள் என்பதற்காகவோ (இப்படிக் கூறுகிறீர்கள்". நபியே) நீர் கூறும் நிச்சயமாக பாக்கியமானது அல்லாஹ்வின் வசமிருக்கிறது. தான் நாடுகிறவர்களுக்கு அதைக் கொடுக்கிறான். இன்னும் அல்லாஹ் விசாலமானவன், நன்கு அறிபவன்" என்றும் (நபியே) நீர் கூறுவீராக.

"உங்களது மார்க்கத்தைப் பின்பற்றியவரைத் தவிர (வேறு யாரையும்) நீங்கள் நம்பாதீர்கள்" என்ற வசனம் இதற்கு முந்திய ஆயத்துடன் சம்பந்தப்பட்டது. அதாவது கஃபுப்னுல் அஷ்ரப், மாலிக் குப்னுஸ்ஸைப் போன்ற யூதத் தலைவர்கள் தங்கள் மத சகோதரர் களான யூதர்களிடம் "இஸ்லாமையும் திருக்குர்ஆனையும் நீங்கள் உண்மையாக நம்ப வேண்டாம். உங்களது இந்த அவ நம்பிக்கையை முஸ்லிம்களிடம் அறிவிக்கவும் வேண்டாம். உங்களது மார்க்கத்தைப் பின்பற்றியவர்களைத் தவிர மற்றவர்களிடம் இதனை நீங்கள் கூறக்கூடாது" என்றுங் கூறினர். இவ்விபரத்தை இங்கு இறைவன் சுட்டிக்காட்டி, "அல்லாஹு தஆலாவுடைய நேர்வழிதான் சரியான

நேர்வழி, அதனை அவன் விரும்பியவருக்கு அளிப்பான், உங்களுக்கு வேதம் கொடுக்கப் பட்டிருப்பதைப் போல் வேறு ஒருவருக்கு வேதம் கொடுக்கப்பட்டதைக் கண்டு பொறாமையடைந்ததால் அல்லது மூமின்கள் கியாமத்து நாளில் உங்களுடன் தர்க்கம் செய்வார்களென்று எண்ணியதால் இவ்வாறு கூறுகிறீர்கள். அல்லாஹு தஆலா தனக்கு விருப்பமானவருக்குத் தனது அருளை அளிப்பான். அதனை யாருக்கு அளிக்க வேண்டும் என்பதை அவன் அதிகம் உணர்ந்திருக்கிறான்" என்று பதில் கூறும் படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இந்த ஆயத்தின் மூலம் கட்டளை யிடப்பட்டிருக்கிறது.

يَخْتَصُّ بِرَحْمَتِهِۦ مَن يَشَآءُ ۗ وَٱللَّهُ ذُو ٱلْفَضْلِ ٱلْعَظِيمِ

73. தான் நாடுகிறவர்களைத் தன்னுடைய கிருபைக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறான். மேலும், அல்லாஹ் மகத்தான பாக்கியத்தை யுடையவன் (என்றும் கூறும்).

இந்த ஆயத்தும் இதற்கு முன்னருள்ள ஆயத்தில் சொல்லப் பட்ட விஷயங்களுடன் சம்மந்தப் பட்டது.

அறிந்துகொள்:- பொறாமை மனிதரில் இயற்கையாகவே ஏற்படுத்தப்பட்ட தன்மையாக இருந்தாலும், ஆலிம்கள் கற்றவர்கள் மீது விசேஷமாக பொறாமை கொள்ளப்படுகிறது, இதற்குக் காரணம் கல்வியினால் ஆலிம்களுக்கு கௌரவம் உண்டாகிறது. பொருள் கிடைக்கிறது, மற்றவர்களிடம் அவர்களுக்குச் செல்வாக்கேற்படுகிறது. இதனால் ஆலிம்களை அதாவது படித்தவர்களைக் கண்டு மற்றவர்கள் பொறாமை கொள்கின்றனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பால் யூதர்கள் பொறாமையும் துவேஷமும் கொண்டதற்கு இதுவே காரணமாகும்.

وَمِنْ أَهْلِ ٱلْكِتَٰبِ مَنْ إِن تَأْمَنْهُ بِقِنطَارٍ يُؤَدِّهِۦٓ إِلَيْكَ وَمِنْهُم مَّنْ إِن تَأْمَنْهُ بِدِينَارٍ لَّا يُؤَدِّهِۦٓ إِلَيْكَ